1658

பாலர் கல்வி.

ஜூலை மற்றும் ஆகஸ்ட் 1940

தொகுதி - 5

பகுதி - 4 மற்றும் 5.

ஜுலை-ஆக. 1940

SZ5
8-21

தொகுதி 5] [பகுதி 4

# பாலர் கல்வி

1659

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

விக்ரம ஹூ ஆடி மீ
JULY 1940

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ்.

வ. நஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்

பக்கம்


1. [illegible]பிள்ளையின் மனம் .... .... .... 129
   —எம். சுப்ரமண்யம்

2. ஆ[illegible]ன் கல்விக்கேற்ற கண்காக்ஷி சாதனங்கள் .... 135
   —ஜகந்நாதன்

3. சாரணீயம்—அதன் உண்மையும் முறையும்-8 .... 147
   —S. ஸ்ரீநிவாஸன்

4. வீர நங்கை ஜீன்டார்க் .... .... .... 151
   —A. R. சேஷசாயி, M. A., L. T.

5. நமது கடிதப் பெட்டி .... .... .... 155

6. செய்தித் திரட்டு .... .... .... 156

7. பத்திராதிபர் குறிப்பு .... .... .... 159

# பாலர் கல்வி

| தொகுதி [illegible] | 1940 ௵ ஜூலை ௴<br>விக்கிரம ௵ ஆடி ௴ | பகுதி 4 |
|---|---|---|

13 AUG 1940

## பிள்ளையின் மனம்

[390-ம் பக்கத் தொடர்ச்சி.]

(M. Subramaniam, *Assistant, E.L.M., Fabricius High School, Madras.*)

### XX சிந்தனைசக்தி

### பொது எண்ணங்களின் வளர்ச்சியும்—தீர்மானங்களும் (Judgments)

**நிலைமைகளும்—பொது எண்ணங்களும்**

ஒரு தகுந்த நிலைமையே ஒன்றைக் குறித்துச் சிந்திக்க சரியான தருணம். சொற்களும், மானச உருவங்களும், பொது எண்ணங்களும், நிலைமைகளுக்குத் தகுந்தபடி உண்டாகின்றன. தரித்திரம் இன்னதென்பது வறுமையான நிலைமையில் அனுபவப்பட்டவர்களுக்கே தெரியும். சுகத்தில் உழன்று இன்பத்தில் மூழ்கி இருப்பவர்களுக்கு, தங்கள் நிலைமையே பிரதானமாகத் தோன்றும். சிறுவர்களுடைய பொது எண்ணங்களும் நிலைமைகளுக்குத் தக்கவாறே அமையும். நல்லாசிரியரை அடைந்த நற்பழக்கமுள்ள சிறுவன் நற்குண நற்செய்கைகளைப் பற்றி நல்லகருத்தடைவான். உண்மையான அறிவுக்கு அனுபவம் காரணம். அனுபவமும் நிலைமைகளின் உதவியால்தான் உண்டாகின்றது. ஒரு பொருளைப்பற்றி அனுமானிக்க முயலும் ஒவ்வொருவனும் நிலைமைகளின் விசேஷத்தைப் புறக்கணித்துச் செய்யக்கூடாது. இப்படிப் பற்பல நிலைமைகளில் அனுபவப்பட்ட பின்பு ஒரு பொருளைப்பற்றிய பொது எண்ணமும், வளர்ச்சியாகின்றது.

**பொது எண்ணங்களும்—பிரயோஜன தத்துவமும்**

இப்படி நிலைமைகள்தோறும் வளர்ச்சியடைந்து வரும் பொது எண்ணங்கள் ஒரு பிரயோஜனத்தையே அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. கரிமிலவாயுவைப்பற்றிய பொது எண்ணம் பற்பல சந்தர்ப்பங்களில் பற்பலநிலைமைகளின் அனுகூலத்தால் உண்டாகி, வளர்ந்தும்

145685



யடைந்த[illegible]திலும், அதனுல் என்ன பிரயோஜனம் என்று கருதுபவர்களுடை[illegible] மனப்பான்மைக்குத் தக்கவாறே அவ்வாயுவைப்பற்றிய பொது[illegible] எண்ணமும் வளர்ச்சி அடைகின்றது. இவ்வாயுவைப்பற்றிய [illegible]து எண்ணமானது, சிறுவர்களுடைய மனத்தில் ஓர்விதமாக அமைந்திருக்கும். வைத்தியன், வேளாளன், ரசாயன சாஸ்திரி, முதலியோர்களுடைய மனத்தில் இவ்வாயுவைப்பற்றிய கருத்து வேறுவிதமாக இருக்கும். ஜேம்ஸ் நிபுணர் (James) இதைப்பற்றி கூறுவதாவது "பொது எண்ணமேன்பது யாது? அது ஒரு மீமாம்சக்கருவி (Teleological Instrument). அதாவது, ஒரு முழுவஸ்துவின் ஒரு பாகத்தை அதன் உபயோகத்தையே கருத்தாகக்கோண்டு அதையே பிரதானபாகமாக எண்ணுவது. இந்தப் பிரயோஜன லக்ஷணத்தையே பிரதானமாகக் கருதி வேறு விசேஷபாகங்களையும் குணங்களையும் நீக்கிவிடுவது நிந்தைக்கு இடமாகாது. ஏனென்றல் ஒவ்வோருவனுடைய மனோ லக்ஷணமும், மனப்பான்மையும், வேருகவே இருக்கின்றன. நம்முடைய நோக்கமும், பலனும் எம்மாதிரி இருக்கின்றதோ அம்மாதிரியே பொது எண்ணங்களும் அமைகின்றன. உதாரணமாக எண்ணெயானது, யார் யாருக்கு எந்தெந்த விதமாகப் பிரயோஜனப் படுகிறதோ அந்தந்த விதமாகவே எண்ணெயின் பொது எண்ணமும் அமைகின்றது. ஒருவன் அதை எரியும் வஸ்து என்றும், மற்றொருவன் அதை ஆகாரமென்றும், இன்னொருவன் வழவழப்பாக்குவதற்குத் தகுந்தபோருள் என்றும், ரசாயன சாஸ்திரி அதை ஜலக்கரிவஸ்துவென்றும் (Hydro carbon) எண்ணங்கோள்வது சகஜம்" என்கின்றார். எனவே ஒரு பொருளைப்பற்றிய பொது எண்ணம் அதன் பிரயோஜனத்தையும் ஒரு நிலைமையையும் அடிப்படையாகக்கொண்டு விருத்தியடைகிறது. சிறுவர்களுடைய பொது எண்ணங்களும் அப்படியே இருக்கின்றன. கரும்பலகை என்றல் அதன் உபயோகமும், நிறமுமே சடுதியில் பிள்ளைகள் மனத்தில் பதிகின்றன.

### பொது எண்ணங்களின் வளர்ச்சி

உயிருள்ள பொருட்கள் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றனவோ, அவ்வாறே பொது எண்ணங்களும் வளர்ச்சியடைகின்றன. வயது, அனுபவம், நூல்பயிற்சி, விசேஷ சகவாசம், நுண்ணறிவு, பரந்த சுற்றுப்புறம், உற்றுப்பார்க்கும் திறமை, இவைகளே பொது எண்ணவளர்ச்சிக்கு விசேஷ அம்சங்களாகும். உதாரணமாக ஒரு சிறுவன் ஒரு நீண்ட சதுரமான மேஜையைப்பார்த்திருப்பான். அதைப்பற்றிய கருத்தும் ஒரு விதமான நிலையில் அமைந்திருக்கக்கூடும். இன்னும் வேறுவிதமான மேஜைகளையும் வட்டமேஜைகளையும் பார்த்தவுடன் அவனுடைய [illegible]ருத்து சற்று அதிகரிக்கிறது. ஐந்தாம் வகுப்பில் படிக்கும் பூகோளம், [illegible]ரித்திரம், தாவரம் முதலிய பாடங்களையே பத்தாம் வகுப்பில் ஊன்[illegible]ப் படிக்கும்போது, பொருட்களைப்பற்றிய பொது எண்ணங்கள் [illegible]சஷ விரிவடைந்தும், அதிகரித்தும், வருகின்றன. வயதுக்



குத்தக்கவாறு, பௌதிகசாஸ்திரம் பொருள் நூல், அரசியல் நூல் முதலியனவும், விசேஷமாக அவர்களுக்கு விளங்குகின்றன. இத்தகைய தருணங்களில், ஆசிரியர்களும், தங்கள் மாணவர்களின் பொது எண்ணங்களைப் பன்முறைகளாலும் வளர்ச்சி யடையத் தூண்ட வேண்டும். நிதானித்தல், ஒப்பிடுதல், வேற்றுமைபடுத்தல், பொதுமுறைப்படுத்துதல், குணப்பிரிவு செய்யல் (Abstraction), சம்பந்தங்களைக் கண்டு முறைப்படுத்துதல் முதலியவற்றைத் தக்க கேள்விகளாலும், சொற்களாலும் கேட்டும், விளக்கியும் வரவேண்டும். ஒவ்வொன்றிலும், பிரத்தியக்ஷ அனுபவம் உண்டாகும்படிச் செய்யவேண்டும். பொருட்களின் பற்பல சம்பந்தங்களையும், உபயோகங்களையும், குணவிசேஷங்களையும், அவற்றின் இனத்தின் ஒற்றுமையையும் வேற்றுமைகளையும் ஒருங்கே ஆராய்ந்து தீர்மானிக்கும்படி செய்யவேண்டும். இனி தீர்மானங்களைப் பற்றியும் அவை எவ்விதம் சிறுவர்களுடைய மனத்தில் உண்டாகின்றன என்பதையும் பார்ப்போம்.

### தீர்மானித்தல் என்றல் என்ன

"தீர்மானம்" என்பதை சாதாரணமாய் நியாயசம்பந்தத்தில் பொருள் கொள்வது இயல்பாக இருக்க, சிந்திக்கும் சந்தர்ப்பத்தில் அதன் அர்த்தம் சற்று வேருகவே இருக்கிறது. அறிவுக்கும், சிந்தனை சக்திக்கும் அடிப்படையாகிய பொது எண்ணங்களின் வளர்ச்சியானது "தீர்மானங்களையே" கொண்டு மேன்மேலும் ஓங்குகின்றது. சிறுவர்கள் ஒரு ரோஜா புஷ்பத்தைக் கண்டு. "இந்த ரோஜா புஷ்பம் வாசனையுள்ளது" என்றும், "இந்தப் பூனை கறுப்பு" என்றும், "ஐந்தும் ஐந்தும் சேர்ந்து பத்து" என்றும் சொன்னல், ஒரு பொருளையும், அதன் குணத்தையும் உடன்பாடாக ஒப்புக்கொண்டோ, அல்லது மறுத்தோ, கூறுகிறார்கள். மேலும் "இது ஒரு மரம்." "இது வீடல்ல" என்னும் போது ஒரு உண்மைப் பொருளைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு அதைப்பற்றி நிதானித்துக் கூறுகிறார்கள். "மரம்" என்றும், "வீடு அல்ல" என்றும் கூறுவதில் பிரத்தியக்ஷ அனுபவமும் பொருளைப்பற்றிய அர்த்தமும் அடங்கி இருக்கின்றன. எனவே "தீர்மானித்தல்" என்பது, ஒரு அனுபவத்திற்கு அர்த்தம் தருவதாகும். இத்தீர்மானத்தில் பொருளைப் பற்றிய முதல் அறிவு அடங்கி இருக்கிறது. அறிமுகமான பொருளைக் காணும்போது, அதை யாதொரு கஷ்டமும் இல்லாமல் அறிந்து, அதைப்பற்றித் தீர்மானிக்கிறார்கள். பழக்கமும் அறிமுகமும் அற்ற நிலைமை ஏற்படும்போது சிறுவர்கள் மனத்தில் சந்தேகம் உண்டாகித் தீர்மானிக்கும் திறமை வெகு சீக்கிரத்தில் தோன்றுகிறதில்லை. பொதுவாகத் தீர்மானம் என்பது ஒரு கேள்விக்கு விடை அளித்தலே ஆகும். இக்கேள்வி ஒரு பிரத்தியக்ஷமாகவும், அனுபவமாகவும், மானசிகமாகவும், பொது எண்ணத்தன்மையாகவும். (Perceptional, Imaginal or Conceptual) இருக்கலாம். இத்தோடு ஒரு பொருளைப் பற்றிய அ[illegible]

பவம், உடன்பாடாகவும், மறுக்கக்கூடியதாகவும் இருக்கலாம். இவ்விதமாக உள்ள தீர்மானங்களே பொது எண்ணங்களை வளர்க் கின்றன.

### தீர்மானித்தல் அமைகின்ற விதம்

ஒவ்வொரு தீர்மானமும் ஒவ்வொரு உண்மைப் பொருளைக் கருத் தாகக்கொண்டு, வாக்கியமாக அமைந்து சொற்கள் மூலமாக வெளியா கின்றது. இவ்வாக்கியத்தை ஒரு கூற்று (**Statement**) என்று சொல்ல லாம். இக்கூற்றில் அமைந்துள்ள சொற்றொடர்கள், ஒரு பொருளையும் அதன் தன்மையையும், உடன்பாடாகவோ, எதிர்மறையாகவோ காட்டு கின்றன. "இந்தப்பழம் ருசியாய் இருக்கிறது" என்னும் கூற்றானது பழம் என்னும் பொருளையும் அதன் தன்மையாகிய ருசியையும், உணர்த்தி ஓர் தீர்மானத்தைக் காட்டுகிறது. அல்லது "ஆற்று ஜலம் குளிர்ச்சி அல்ல" என்பதில், நீர் என்னும் பொருளும் அதற்கு இல்லாத தன்மையும் தெரிகின்றன. உண்மையான தீர்மானங்கள் உண்மையான கூற்றில் அமைந்திருக்கவேண்டும். சிறுவர்கள் ஒன்றைப்பற்றி தீர்மானிக் கும்போது ஆசிரியர்கள் வெகு ஜாக்கிரதையாகவும் கருத்தோடும் அவர் களை கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால் சொற் பிழைகளாலும், மாறான சொற்களாலும் கருத்துப் பிழைகளாலும், தீர்மானங்கள் பிசகி, சிந்திக்கும் தன்மையும் பிழையுள்ளதாகும்.

### தீர்மானங்களுக்கும் பொது எண்ணங்களுக்கும் உள்ள சம்பந்தம்

பொது எண்ணங்கள் வளர்ச்சியடைவதும், தீர்மானங்கள் உண் டாவதும், மனோவேலையின் தன்மை. இவை வெவ்வேறு செயல்கள் அல்ல. மனோவேலைப்போக்கின் பற்பல நிலைகளில் உண்டாகும் தோற்றங்களே ஆகும். பற்பல தீர்மானங்களின் பலத்தாலே பொது எண்ணங்கள் வளர்ச்சி யடைகின்றபடியால், இவ்விரண்டிற்கும் உள்ள சம்பந்தத்தின் தன்மை புலப்படுகிறது. உதாரணமாக ஒரு குழந்தை "கனம்" என்னும் கருத்தை அடைவதற்குப் பற்பல கனமான பொருட்களைக் கையாண்ட பின்பே தீர்மானிக்கிறது. இப்படித் தீர்மானித்த பின்பு தன் கருத்துக்களை ஒன் றாகத் திரட்டிப் பொதுமுறையாக அமைக்கிறது. ஒவ்வொரு பொது முறை அமைப்பும் (**Generalization**) படிப்படியாகத் தனிப் பொருட் களைப் பற்றிய குணத்தை தீர்மானித்த பின்பே ஏற்படுகின்றது. "இரும்பு" அல்லது "உலோகம்" என்றும் ஒரு வகுப்புக்குரிய பொது எண்ணங்களை முறைப்படுத்துவதற்கு முன் குழந்தையானது அதன் பல குண விசேஷங்களாகிய துரு பிடிக்கும் தன்மை, கனம், கடினம், -லோகப் பள பளப்பு, இவற்றைத் தீர்மானித்தே செய்கிறது' எனவே பொது எண்ணங்களும் தீர்மானங்களும் ஒன்றுக்கொன்று உதவியாக இருந்து வளர்ச்சியடைகின்றன.



### சிறுவர்கள் எவ்வாறு தீர்மானம் செய்கிறார்கள்

பேரியோர்களைப்போல கருத்துக்களையும், எண்ணங்களையும் முறையே திரட்டி ஒன்றாக அமைத்துக்கொண்டு பின்பு ஆராய்ந்தும், நிதானித்தும் சிறுவர்கள் தீர்மானிக்கிறதில்லை. பிரத்தியக்ஷமாகக் கண்டதை உடனுக்கு உடன் சிறு சிறு தீர்மானங்களாக வெளி இடு கிறார்கள். ஆசிரியர்கள் ஒன்றைச்சொல்லக் கேட்டு அதைப்பற்றி சரி யாகவோ, தவறாகவோ தீர்மானிக்கிறார்கள். நாற்கால் ஜந்துக்களாகிய கழுதை, குதிரை, மாடு இவைகளைப் பார்த்து உடனே "குதிரைக்குக் கொம்பு இல்லை" "கழுதை குதிரையை விட சிறியது" "மாட்டின் வால் நீளமானது" என்று தீர்மானிக்கக்கூடும். இது உண்டாவது உற்றுப் பார்க்கும் சக்தினால்தான். மேலும் குறித்த ஒரு பொருளைப்பற்றியே சிறுவர்கள் தீர்மானிக்கிறது இல்லை. ஒருவகுப்பு அல்லது இனப்பொருட் களையும் பற்றி தீர்மானம் செய்கிறார்கள். ஆனால் ஒரு பொருளைப் பற்றிய கருத்து வரவர விரி வடைந்து, அப்பொருளின் முழு இனத்திற் கும் பொதுவாகி விடுகின்றது. உதாரணமாக "கிழத்தனம்" என்னும் குணத்தைப் பிள்ளைகள் கருத்தில் அமைக்கும்போது தங்கள் தாதா, பாட்டி முதலியோர்களையே நினைத்துச்செய்கிறார்கள் அக்குணத்தை அவர்கள் சொல்லும்போதும் தாங்கள் எவ்வாறு கருத்து அடைந்தார் களோ, அதையே முன்கொண்டு சொல்லுகிறார்கள். எனவே சிறுவர் களுடைய தீர்மானங்கள் முதன் முதல் புலனறிவைச் சார்ந்து இருப்ப தோடு விசேஷமாக உற்று நோக்குதலையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. பின்பு ஏற்கெனவே அனுபவித்ததை ஆதாரமாகக் கொண்டு தீர்மானிக் கிறார்கள். இப்படித் தீர்மானிக்கும் காலத்தில், ஞாபகசக்தி—கற்பனா சக்தி, நிர்மாணிக்கும் திறமை முதலியனவும் வந்து உதவி செய்கின்றன. ஆனால், சிற்சில சமயங்களில் காணாத ஒன்றையாவது அனுபவத்திற்கு எட்டாதவற்றையாவது தீர்மானிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டால், சம்பிர தாய வழக்கத்தையும், பெரியோர்களுடைய பிரமாணங்களையும் (**Tradition and Authority**) கொண்டு தீர்மானிக்கிறார்கள்.

நல்லொழுக்கம், தெய்வபக்தி, வானசாஸ்திரம், உயர்ந்த கணித முறைகள், பூமி சாஸ்திரம், சமூக சாஸ்திரம் இவைகளைப் பற்றிய விஷ யங்களைச் சொல்லக்கேட்டபடி தீர்மானிப்பது பாலர்களுக்கு இயல்பு. எனவே, உற்றுநோக்கல், புலனறிவு, அனுபவம், ஞாபக சக்தி, கற்பனா சக்தி, சம்பிரதாய வழக்கம், பெரியோர்களின் பிரமாணமுறை, இவை களே சிறுவர்களுடைய தீர்மானிக்கும் சக்திக்கு அடிப்படையாக உள்ளன.

### தீர்மானிக்கும் சக்தியை எவ்வாறு விருத்தி யாக்குவது?

வாழ்க்கையில் பற்பல நிலைமைகளிலும், சந்தர்ப்பங்களிலும் பல சிக்கலான விஷயங்கள் எதிர் பாராத வண்ணம் ஒருவனுக்கு நேரிடக்

கூடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மனக்குழப்பம் இல்லாமல், பிரதான விஷயங்களை வெகு சீக்கிரத்தில் கிரகித்து தீர்மானம் செய்கிறவனே காரியவாதி. இவ்விதத்திறமை பள்ளிக்கூடங்களில் விருத்தியாக ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும். இத்திறமையை (1) உற்று நோக்கல், (2) விவரித்துக்கூறும்படி செய்தல், (3) பழுதற்றக்கூற்றுக்கள், (4) தகுந்த சொற்கள், (5) விசேஷ கேள்விகள், (6) விசேஷப் பாடப் பயிற்சிகள் ஆகிய இவைமூலமாக விருத்தி செய்யலாம். ஒன்றைத் தீர்மானம் செய்யும் சக்தியானது எப்போதும் உற்றுநோக்கும் திறமையோடு சம்பந்தப்பட்டிருக்கிறபடியால், சிறுவர்கள் பொருட்களையும், நிலைமைகளையும், வெகு நன்றாக ஊன்று உற்று நோக்கும்படி செய்யவேண்டும். இப்படி உற்சாகத்தோடு உற்று நோக்கியதைச் சொல்ல ஆசிரியர்கள் தூண்டவேண்டும். சிறுவர்கள் தாங்கள் கண்டதைச் சொல்கிறபோது சற்று மிகைப்படக்கூறுவது இயல்பேயானாலும் அவர்களை அதைரியப்படுத்தாமலும், அடியோடு தடுக்காமலும், வேண்டியபடி திருத்தி சரியான முறையில் தீர்மானிக்க தாராளமாய் அவர்களை விடவேண்டும். ஏனென்றால் அதைரியம் அவநம்பிக்கையை உண்டாக்கித் தீர்மானிக்கும் திறமையை சந்தேகத்தில் புகுத்துகிறது. இப்படிச் சொன்ன பின்பு பிள்ளைகள் தீர்மானம் செய்த பலனை நல்ல வாக்கியங்களில் பழுதற எழுதச் செய்யவேண்டும். இதற்கு உபகாரமாயிருப்பது சொற்களேயாகையால், அவற்றைப் பொறுக்கி எடுத்து தகுந்தமாதிரி அவர்கள் உபயோகிக்க ஆசிரியர்கள் முயலவேண்டும். சொற்கள் எண்ணங்களின் உருவமாகையாலும், அவை வழுவுள்ளனவாக இருக்குமாயின் தீர்மானங்களும் சிந்தனைப் பலனும் தவறாக முடியும். ஆகையால் ஒரு சொல் ஒரு அர்த்தத்திலே வரும்படி கவனிக்க வேண்டும். சிறுவர்கள் சொற்களின் அர்த்தத்தைக் குறித்து மயங்கும் காலத்தில், தெளிவாகப் பொருட்களைக் கொண்டு விளக்கவேண்டும். சொற்சுவை, பொருள் நயம், கற்பனைத் திறன், விசேஷ வருணனை, உயர்ந்த லக்ஷிய அம்சங்கள், ஆகிய இவை நிறைந்த இலக்கியங்களில் பயிற்சி அளித்து, தாராளமாகப் பிள்ளைகளின் சொந்த அபிப்பிராயங்களைச் சொல்லத் தூண்டவேண்டும். பிள்ளைகளின் புத்தியும் அறிவும் வளர்ச்சியடைந்து வரும்போது அவர்களுடைய சொந்த அபிப்பிராயமும் வளர்ச்சியடைகின்றது. ஆகையால் அத்தருணத்தில் ஆசிரியர்கள் சற்று விலகிக்கொண்டு அவர்களுடைய சுயமுயற்சிக்கு உதவியளிக்க வேண்டும்.

(தொடரும்)

# குழந்தைகளின் கல்விக்கேற்ற கண்காக்ஷி சாதனங்கள்

ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

## வஸ்துக்கள் மூலமாகவே விஷயங்களைக் கிரகிக்கும் குணம்

பல பொருள்களைக் கையாண்டு குழந்தைகள் அப்பொருள்களின் குணங்களைக் கண்டிருக்கிறார்கள். ஜனன கால முதற்கொண்டே பஞ்சேந்திரியங்கள் மூலமாக இவ்வறிவு வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இயற்கை வஸ்துக்களும், செயற்கை வஸ்துக்களும் இவ்வறிவு வளர்ச்சிக்குச் சாதனங்கள் ஆகும். கண்களைக் கவரச் செய்யும்படியான வஸ்துக்களே அவசியமாகும். ஒரு கிராமபோன் ரிகார்டு பாட்டுகளின் தொனிகளை நன்றாய்க் கிரகித்துக்கொள்கிறது. பிறகு விசையை முறுக்கிவிட முதலில் பாடப்பட்ட பாட்டையே அதே குரலோடு வெளியிட்டு ஆனந்திக்கச் செய்கிறது. மேலும் இயற்கைத் தோற்றங்கள், காட்சிகள், வாழ்க்கைச் சம்பவங்கள் இவைகளை நன்கு அறிந்தும் ஆராய்ந்தும் வித்துவான்கள் தமது கவிகளில் அத்தோற்றங்களையும், சம்பவங்களையும் மற்றும் தமது ஞான திருஷ்டிக்கும் எழுந்து நின்ற காட்சிகளையும் பொறுக்கி எடுக்க பதங்களில் விளக்கி காட்டியிருக்கிறார்கள். அப்பதங்களாகிய மலர்களைக்கொண்டு செய்யுளாகிய மாலைகளைத் தொடுத்திருக்கிறார்கள். நாம் அவற்றை ஊன்றிப் படிக்கும்பொழுது அக்காட்சிகள் நம் முன்வந்து நிற்கின்றன. நாம் மனமகிழ்ச்சி கொள்கிறோம். பழங்காலத்துக் கதைகளை நாடக ரூபமாக நடித்துக் காட்டியதைக் கண்ணாரக் கண்டு நாம் களிக்கிறோம். நமது மனம் ஒரு புதிய உலகத்தில் சஞ்சரித்து நாம் ஒரு புது உலகத்தில் இருப்பதாக அறிகிறோம். கண்காட்சி சாதனங்கள் இவ்வாறு மனதைக் கவரும்படியாக இருக்கவேண்டும் என்ற அவசியம் புலப்படுகிறதல்லவா ?

## காலப் போக்கும் கண்காட்சியும்

யாத்ரீகர்கள், தேச சஞ்சாரிகள், உல்லாசப் பிரயாணம் செய்கிறவர்கள், ஸ்தலங்கள், தீர்த்தங்கள், வனப்பிரதேசம், மலைப்பிரதேசம் ஆங்காங்கு சென்று நேரிலேயே அவைகளை அனுபவிக்கிறார்கள். எல்லோருக்கும் அவ்வாறு பாக்கியம் கிடைப்பது அரிது. அக்காட்சிகள் சம்பந்தமான படங்கள் கிடைக்கின்றன. திரையில் அப்படங்கள் காட்டப்படுகையில் அத்திரைப் படங்கள் நம் மனதிற்கு மகிழ்ச்சியளிக்கின்றன. திரைப்படம் நின்று, ஓடும் திரைப் படங்கள் தோன்ற வாரம்பித்தன. இருபது வருஷங்களுக்கு முன்பு ஓடும் திரைப்படங்களைக் காணப் பலர்

ஆசைப்பட்டனர். தற்காலத்தில் ஒலியுடன் பிணைத்த ஓடும் திரைப்படங்கள் சகஜமாகக் கிளம்பி விட்டன. நன்றாக நடிக்கப்பட்ட ஓர் நாடகம் ஒலியுடன் பிணைக்கப்பட்ட ஓடும் திரைப்படங்களாக மாற்றப்பட்டு உலகமெங்கும் பிரசித்தியடைந்து உலகத்தாரை ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது. இக்காலப் போக்குக்கு ஏற்றபடி கல்வி உலகும், குழந்தைகள் உலகமும் மாறிக்கொண்டு வருகிறது அதற்கேற்ப உபாத்தியாயரின் மனோபாவமும், செயற்கை சக்தியும், பள்ளிக்கூட அமைப்பும் மாறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பள்ளிக்கூடம் பாடும் சினிமாவாக மாற முடியாவிட்டாலும் குருவிக்கேற்ற கயிலாசம்போல் உபாத்தியாயர் அதைத் தமது முயற்சியால் ஒருவாறு இன்பமான இடமாக, மாற்றியமைக்க முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடும். படங்கங்களைச் சேர்ப்பதும், அவற்றை ஒழுங்குபடுத்துவதும், செயற்கை அழகுடன் அவற்றை அமைத்துக் காட்டுவதும் அவருடைய முக்கிய வேலையாகும்.

## படக்காக்ஷி சாதனங்கள்

### 1. படப் புஸ்தகங்கள்

தபால் கார்டு போன்ற படங்களை அட்டைத் துண்டுகளில் ஒட்டி



பழுப்புக் காகிதம் கொண்டு தைத்த புஸ்தகங்களில் அடியிற்கண்டவாறு பதியவைத்துக் கொள்ளலாகும்.

2. மேலும் படங்களை பல இனங்களாகப் பிரித்து அடியிற்கண்டவாறு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தனிப் புஸ்தமாக அமைத்துக் கொள்ளலாம்.


(*a*)
A. மிருகங்கள்
B. பக்ஷிகள்
C. பூச்சிகள்
D. பலதேசத்து ஜனங்கள்
E. பண்டங்கள்
F. விளக்குகள்
G. சங்கீதக் கருவிகள்
H. உத்தம மனிதர்கள்
I. பிரயாணம்
J. கதைகள்
K. குழந்தை விளையாட்டுகள்
L. இயற்கை காட்சிகள்
M. சாதாரணப் பொருள்கள்
N. கட்டடங்கள்
O. கோயில்கள்
P. தாவர வர்க்கம் (மரம், செடி, கொடி, இலை, கனி, காய், கிழங்கு)

(*b*) ஒவ்வொரு பிரசித்திபெற்ற ஊர்களைப் பற்றியும் பெரியோர்கள் ஜீவிய சரித்திரத்தைப் பற்றியும் தனித்தனியே படப் புத்தகங்கள் தயாரிக்கவும் சுமார் 60 புத்தகங்களுக்கு மேல் தயாரிக்க முடியும்.



### 3. வட்டமாக ஒட்டேல்.

உதாரணமாக அடியிற் கண்டபடி பருத்திச்செடியிலிருந்து உடை வருவதின் கதையை படிப்படியாக வரும்படி வட்டமாக அமைத்துக்



காட்டலாம். இதுவே போல் அரிசி, ஆறு, பானை இவைகளின் கதைகளையும் தெளிவாக்க முடியும்.


### 4. குதிரை லாடம் போல் ஒட்டேல்.

காகிதம் செய்யப்படும் முறை இங்கு காட்டப்பட்டிருக்கிறது.



5. மதில் சுவரில் நீள எழுதுவது போல் ஒட்டுதல்.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை இங்குள்ள கோயில் பிரகாரங்களிலுள்ள சுவர்மீது பழங்காலத்துக் கதைகள் சித்திர ரூபமாகக்




காட்டப் பட்டிருக்கிறதைப் பலரும் பார்த்துப் படித்து வருகிறார்கள். கதை தொடர்பாக வருகிறதை இந்நாட்களிலும் காணலாம். அம்மாதிரி படங்களை ஒட்டுவதும் ஒரு தகுந்த முறையாகும்.

6. நீள ஒட்டி மடித்து வைக்கக்கூடிய ஏற்பாடு.

இது மேலே சொல்லப்பட்ட முறைதான். ஆனால் மடித்து வைத்து வேண்டியபோது பிரித்துக்காட்டத் தக்கபடி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

சமீபத்தில் "டைம்ஸ் ஆப் இந்தியா" சித்திரங்களடங்கிய வாரப்பத்தில் பத்மினியின் கதை வந்திருந்தது. அப்படங்களைக் கொண்டு இங்கு சொல்லப்பட்ட முறைப்பிரகாரம் ஒட்டிவைத்துக் கொள்ளமுடியும்.


7. தொங்கவிடும் படங்கள் மாதிரி அமைத்தல்.




மேலேயுள்ள படத்தில் நடுவில் ஆங்கில மன்னரும் அவரைச் சுற்றி இந்திய சுதேச மன்னர்களும் இருப்பதாகக் காட்டும்படி படங்களை ஒட்டிக் கொள்ளலாம்.



8. படங்களால் அழகு படுத்தப்பட்ட தேசப்படங்கள்.





சென்னை இராஜதானி, ஜில்லா, தாலுகா, கிராமம்.—பூகோள பாடங்கள் சம்பந்தமாக விளைவு பொருள், கைத்தொழில் இவைகளைக் காட்ட அப்படங்களையே ஏற்ற இடத்தில் ஒட்டிப்பதிய வைத்துக் கொள்ளலாம். பிள்ளைகளுக்கே இவ்வப்பியாசம் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | லவங்கம் | கோயில் | சுருட்டு | தீக்குச்சி |
| தென்னை | உழவு | மசூதி | நீராவிக்கப்பல் | சோப்பு |
| வெற்றிலை | காப்பி | மாதாகோயில் | திராட்சை | கரும்பு |
| புகையிலை | தேயிலை | குளம் | முந்திரி | பாத்திரம் |
| நெற்பயிர் | ரப்பர் மரம் | ராட்டினம் | ஏலக்காய் | பானை |
| நிலக்கடலை | முந்திரிப்பழம் | பள்ளிக்கூடம் | ஆலை | பாய் |
| பருத்தி | சவுக்கு | வயல் | இயந்திரசாலை | வாள் |
| எள் | காய் கறிகள் | செருப்பு | தறி | ஓடு |

இவைபோன்ற படங்களை ரப்பர் ஸ்டாம்புகளில் செய்துகொண்டால் பிள்ளைகள் தமது தேசப்படங்களில் பாடத்திற்குத் தகுந்த பிரகாரம் இவ்வச்சுகளை உபயோகித்து படங்களை அலங்கரித்துத் தமது அறிவையும் பெருக்கிக் கொள்ளுவார்கள். ரப்பர் ஸ்டாம்புக்களுக்குப் பதிலாக மரத்திலும் செய்துகொள்ளக்கூடும். சித்திரவேலையில் கை தேர்ந்த ஒருவரைக்கொண்டு இவற்றைச் செய்துகொள்ளலாம். உலகத்தில் காணப்படும் பலவித மிருகங்கள் பட்சிகளை தகுந்த சித்திரங்களால் உலகப்படத்தில் பதியவைப்பதும் நன்றாயிருக்கும்.


9. ஏணி போன்ற ஏற்பாடு.

புராதன காலம் முதற்கொண்டு படிப்படியாக பிரயாண வசதிகள், சாதனங்கள் அபிவிருத்தியை இவ்வாறு காண்பிக்க முடியும்.



இந்த ஏற்பாட்டின்படி வேறு இனத்தைச் சேர்ந்த படங்களையும் ஒட்டிக் கொள்ளக்கூடும்.

## 10. நான்கு பக்கமும் சுற்றுகிறமாதிரி ஏற்பாடு



பெரிய ரயில்வே ஸ்டேஷன்களில் 3, 4 ரயில்வேக்களின் கால அட்டவணைகள் ஒன்றன்பின் ஒன்றாக சுற்றிவரும்படி ஏற்பாடு செய்திருப்பது நமது ஞாபகத்திற்கு வரக்கூடும். அதுபோலவே நாமும் சில கதைப்படங்களை இம் முறைப்படி பதியவைத்துக்கொள்ளலாம். சிவாஜியின் சரித்திர சம்பந்தமான படங்களை இவ்வாறு அமைத்துக் காட்டமுடியும் என்பதை யான் கண்டிருக்கிறேன்.

## 11. சினிமாப் பெட்டிகள்

ஒரு கதை, ஒரு யாத்திரை, ஒரு உத்தமர் சரித்திரம் இவை போன்ற பாடங்களை தொடர்ச்சியாக வரும்படியான படங்களைக் கொண்டு ஒரு நீண்ட வெள்ளைத் துணியில் ஒட்டி சினிமா காட்டுவது போல் காட்டக்கூடும். குழந்தைகள் நெருப்புப்பெட்டியில் ஈர்க்குச்சிகள் சொருகி கியாலண்டர் பெட்டி பண்ணுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதேபோல் நாம் ஒரு கள்ளிப் பெட்டியையும் அமைத்துக்



கொள்ளக்கூடும். படங்களைத் திரும்பத் திரும்பச் சுற்றவும் பிரிக்கவும் தகுந்தபடி சுலபமான ஏற்பாட்டை அமைத்துக்கொள்ளவேண்டும். ஒரு மரப்பெட்டியில் கண்ணாடி யமைத்தும், அல்லது ஒரு அட்டைப் பெட்டியிலே கண்ணாடியமைத்தும் இம்மாதிரி சினிமாப்பெட்டிகள் செய்து கொள்ளலாம்.

1. இராமாயணம்
2. புத்தர் சரித்திரம்
3. காசியாத்திரை
4. திருப்பதி—இராமேச்வரம்
5. மேட்டூர், நீலகிரி, மலையாளம்
6. திருக்குற்றாலம், திருவனந்தபுரம் [கன்னியா குமரி]
7. இந்தியக் கிராமம்
8. மகாத்மா காந்தி
9. சென்னை
10. பெங்களூர், மைசூர்

மேற்சொன்ன விஷயங்களுக்குச் சரியான படங்களைச் சேர்த்து சினிமாப் பெட்டிகள் தயாரிக்கமுடியும் என்பதை அடியேனது அநுபவத்தில் கண்டிருக்கிறேன். பாலர் கல்விக்கு மன்றி முதியோர் கல்விக்கும் இவை ஏற்றதாகும். உபாத்தியாயரே இங்கு விசைகொடுக்கிறவரும் ஒலி பரப்புகிறவருமாவர். படங்களைக்காட்டி அதைப்பற்றின குறிப்புகளை வாய்மொழியாகச் சொல்லிவரவேண்டும்.


இவைகளுக்கு உபசாதனங்கள் பலவும் வேண்டிவரும். யாத்திரை சம்பந்தமான தேசப்படங்கள்—ரயில் மார்க்கங்கள், யாத்திரீகர்கள், தினசரிக்குறிப்பு இவை விசேஷ பலனைக் கொடுக்கும். புத்தர் படப் பெட்டி சமீபம் அசோகர் நாட்டிய தூண்மாதிரி ஒரு அட்டைஸ்தம்பம், ஆசியாபடம் ஒன்று இவை ஏற்றதாகும். ஆசியா படத்தில் இந்தியாவில் தோன்றிய ஜோதி ஆசியமுழுவதும் பரவிற்று என்பதைக்காட்ட சீனா, ஜப்பான், மங்கோலியா, ஜாவா, முதலிய இடங்களில் ஒரு புத்தர் படத்தை ஒட்டியிருப்பதும் பொருத்தமாகும். இப்பாட சம்பந்தமான நான்குவரிகள் பின்வருமாறு:


தன்னுள்ளம் அடக்கி தவமுனிவன் வேடம் பூண்டு
தனித்ததொரு தருவின் கீழ் தனியமர்ந்து தவத்திலிருந்து
காணாது கண்டனன் கனமகிழ்வு கொண்டனன்
கண்டதொரு ஜோதியை கண்டமெல்லாம் கண்டதிதுவே.

பேசும் சினிமா மயமாகவுள்ள தற்கால உலகத்தைப் பாலர் கல்விக்குத் தகுந்த பிரகாரம் பள்ளிக்கூடமாகிற பாலர் உலகத்தை மேற்கண்ட சினிமா மயமாக்கக்கூடும் என்பதே எனது எண்ணமும் விருப்பமுமாகும்.

## 12. அட்டை, பலகைமீது ஒட்டுதல், கண்ணாடி போடுதல் முதலியன

ஒரு விஷயத்திற்கு உரித்ததான சில படங்களை அட்டை அல்லது பலகைத்துண்டுகளில் ஒட்டிக் கத்தரித்துவைத்துக் கொள்ளலாம். சில முக்கியமானவற்றைக் கண்ணாடிபோட்டு வைத்துக் கொள்வதும் சரி







யாகும். ஒட்டப்பட்ட படங்கள் பலகையில் அல்லது மணலில் நிற்கத் தக்கவாறும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

## 13. கோலுப்படி ஏற்பாடு

நவராத்திரி காலத்தில் பொம்மைகள் வைக்க படிக்கட்டுகள் கட்டுகிற வழக்கமுண்டு. மேலே 12-வது முறைப்படி ஒட்டிய படங்களை



படிக்கட்டுகளில் அடுக்கி வைத்துக் காட்டமுடியும் அடியிற்கண்ட விஷயங்களுக்குப் பொருத்தமான படங்கள் கிடைக்கின்றன.




1. பாலைவனம்
2. ஆப்பிரிக்கா தேச அடர்ந்த காடு
3. இங்கிலாந்து அறுவடை காலம்
4. லேப்லான்ட் தேச வாழ்க்கை
5. புராதன எகிப்து
6. ஸ்விட்ஸர்லாந்து காட்சி
7. சீனா தேசத் தெரு.

இவான்ஸ் பிரதர்ஸ் லிமிடெட், மாண்டகு ஹவுஸ், லண்டன் W.C., இவ் விலாசத்தார் தமது பாலர்கல்வி பத்திரிகையில் விசேஷமான வர்ண அனுபந்தங்கள் பிரசுரம் செய்திருந்தனர். மேற் கண்ட விஷயங்கள் வெளி வரலாயின. அவை தற்சமயம் கிடைக்கும் என்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. கடிதப் போக்குவரவு மூலமாகத் தெரிந்து கொள்ளக்கூடும்.

## 14. மரம் போன்ற ஏற்பாடு

ஒரு தேச வரவுசெலவு சம்பந்தமான விவரங்களை அடியிற்கண்ட பிரகாரம் மரம்போல் அமைத்துக் காட்டக்கூடும். மரத்தின் வேர் மரத்தின் வாழ்விற்கு ஏற்ற உணவுப் பொருளைச் சேகரித்துக் கொடுக்கிறது போல் வேர்கள் போன்ற பல வரிகள் தேச மக்களின் க்ஷேமத்திற்காக விதிக்கப்படவேண்டி யிருக்கின்றன. அவ்வரிகளைக் கொண்டே மக்களின்




வாழ்க்கைக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்துகொள்ள வேண்டி யிருக்கின்றன என்பதைக் காட்ட மரத்தின் கிளை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஏற்பாடு காட்டப்பட்டிருக்கிறது. (ஆஸ்பத்திரி, ஜல வசதி, வெளிச்சம், கச்சேரி, போலீஸ், தபால், பள்ளிக்கூடம், ரயில்வே, பாய்ச்சல் கால்வாய், பாலம்.)

பாடத்திற்கு ஏற்றபிரகாரம் இம்மரத்திலுள்ள விஷயங்களை மாற்றி யமைத்துக் கொள்ளவேண்டும். அதற்கேற்ற படங்களை ஒட்டிக் கொள்ளவேண்டும்.

உதாரணம் :—

கிராமத்தானின் வரவு செலவு
பணக்காரனின் வரவு செலவு
பஞ்சாயத்தார் வரவு செலவு
முனிஸிபாலிடி வரவு செலவு
இராஜதானி, தேசம் வரவு செலவு
கிராம வாழ்க்கை, கிராம ஆளுகை முதலியன.

15. குழந்தைகளின் சித்திரப் பத்திரிகை

பாலர்களுக்கென்றே பிரத்தியேகமாய்த் தயாரிக்கக் காட்டிய சித்திரப் பத்திரிகைக்கு சில படங்களை சமயத்திற் கேற்றபடி உபயோகிக்கலாம்.

16. தினசரி சமாசாரக் குறிப்புக்கள்

தினசரிப் பத்திரிகையில் கடைசிப் பக்கத்தில் காணப்படும் படங்களில் குழந்தைகள் வயது அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடி பொருத்தமான சில படங்களைக் கத்தரித்து வேறு ஒரு பலகையில் அல்லது அட்டையில் ஒட்டி, படத்தின் கீழ் அதன் விவரம் சுருக்கமாக எழுதித் தொங்கவிடுவது ஏற்றதாகும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இம் முறையை விடாமல் அனுசரிப்பது பலவகைகளில் பிரயோஜன முள்ளதாய் இருக்கும்.

17. ரயில்வேப் பிரசுரங்கள்

(a) ரயில்வே ஸ்டேஷன்களில் பல ஸ்தலங்களின் உற்சவங்கள் சம்பந்தமான வர்ணப்படங்கள் தொங்கவிட்டிருப்பதை நாம் கண்டிருக்கலாம். இவைகள் பாலர் பள்ளிக்கூடத்திற்கும் ஏற்றதாகும். இப்படங்களையே சினிமாப் பொட்டிகளுக்கும் உபயோகப்படுத்தலாம்.

(b) ரயில்வே கம்பெனியார்களால் வெளியிடப்படும் ஸ்தலங்கள் சம்பந்தமான சிறு புத்தகங்களையும் கண்காட்சி சாதனங்களாக உபயோகித்துக்கொள்ளலாம்.

(c) இவைகள் சம்பந்தமான யாத்திரீகர் தேசப்படங்களும் இன்றியமையாதவையாகும்.

18. படங்களைப் பெரியதாய்க் காட்டக்கூடிய சில பூதக்கண்ணாடி போன்ற சாதனங்கள்

(a) 'பாக்கெட் லென்ஸ்' என்ற பூதக்கண்ணாடி சிறு படங்களைப் பெரிதாய்க் காட்டக்கூடியது.



(b) திரையில் காட்டக்கூடிய படங்களுக்கு கார்பைட் விளக்கு தவிர எலெக்டிரிக் விளக்குகளையும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளையும் உபயோகிக்கலாம். கடைசியில் சொல்லப்பட்ட விளக்கே எங்கும் உபயோகிக்கக்கூடும். தாலுக்கா சுகாதார உத்தியோகஸ்தர்கள் இவைகளை உபயோகித்துக் கண்காட்சி காட்டுகிறார்கள். அவர்களின் உதவியை நாடி பாலர்களுக்கும் கண்காட்சிகள் ஏற்படுத்தலாம்.

(c) ஸ்டீரியாஸ்கோப் என்ற இரட்டைப் பூதக்கண்ணாடியும் இயற்கையழகை மிகத் தெளிவாய்க் காட்டக்கூடியது. இதற்கேற்ற படங்களும் பிரத்தியேகமாய் உள்ளன. இந்த சாதனம் பணச் செலவுள்ளது.

## கண்காட்சி சம்பந்தமான சில குறிப்புகள்

1. உபாத்தியாயர் கூட்டுறவு சங்கங்களின் முயற்சி

உபாத்திமைச் சங்கங்கள் தமது முயற்சியால் மேலே சொன்ன பணச் செலவு கொண்ட சில சாதனங்களை சங்கத்தின் பேரால் வரவழைத்து வைதது்க்கொண்டு அந்த சங்க ஆதரவின் கீழ் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு அக் கண்காட்சி சாதனங்களை பிள்ளைகளின் நன்மைக்காக வழங்கி வரலாம். சரியாய் உபயோகிப்பதும், பத்திரமாய்த் திருப்பிக் கொடுப்பதும், பத்திரமாய்ப் பாதுகாப்பதும் அந்தந்த உபாத்தியாயர்களின் பொறுப்பேயாகும். ஒவ்வொரு உபாத்திமைச் சங்கமும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவது ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கேற்ற ஒரு விஷயமாகும். சுலபமான விலையில் ஸ்டீரியாஸ்கோப் நம்மால் தயார் செய்ய முடியுமா? அதற்கேற்ற படங்களையும் சிக்கன முறையில் செய்துகொள்ளக்கூடுமா என்பனவற்றை ஊகித்துப் பார்க்க வேண்டும்.

2. கண் காட்சிசாலை

மேலே கூறிய முறைப்படி படங்களைச் சேர்த்து ஒழுங்குபடுத்தி அழகாக வைப்பின் அவ்விடமே தகுந்த கண்காட்சிசாலையாகும். படங்களைக் கொண்டும் சுலபமாக ஒரு கண்காட்சிசாலை அமைக்கமுடியும் என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். பூச்சிகள் தின்னுதபடி பூச்சி மருந்து கொடுத்துக் காப்பாற்றவேண்டும். கண்காட்சிசாலையை ஒரே நாளில் நிர்மாணம் செய்ய முடியாது. வருஷத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாக அது வளர்ந்துகொண்டே வரவேண்டும். மேலே சொன்னபடி உபாத்தியாயச் சங்கக் கூட்டுறவினால் பெரிய கிராமங்களில் பள்ளிக்கூட கண்காட்சிசாலையைவிட சேர்த்தியான கண்காட்சிசாலையை அமைப்பதும் அச்சங்கத்தின் மேன்மையைக் காட்டும்.

8

### 3. பொது அறிவு பாட திட்டத்தின் சில பகுதிகளை கண்காட்சி மூலம புகட்ட

பாலர் கல்வியின் நூதன முறையில் கண்காட்சிமூலம் பாடம் புகட்டுவது ஒரு முக்கியமான அம்சம் ஆகும். தேச சரித்திரக் கதைகள், பூகோளம், சமூக முறைநூல், இயற்கைப் பாடம், முதலான பொது அறிவு பாடங்களின்கீழ் பல பாகங்களைக் கண்காட்சிமூலம் தான் புகட்டவேண்டும். இதற்கேற்ப எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு உபாத்தியாயரும் பொது அறிவுப் பாட திட்டத்தின் கீழுள்ள 2, 3 முக்கியமான பாடங்களில் கவனத்தைச் செலவிட்டு அதற்கேற்ற கண்காட்சி சாதனங்களைச் சேமித்து வரவேண்டும். மூன்று மாதத்துக்கொருதரம் நன்றாய்த் தயார் செய்துகொண்ட ஒரு விஷயத்தைப் பிள்ளைகள் அனைவருக்கும் சொல்லிக்கொடுக்கலாம். இம்மாதிரி 6 உபாத்தியாயர்கள் கொண்ட ஒரு பள்ளிக்கூடத்தில் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை இம்மாதிரியான கண்காட்சி சாதனங்களுடன் பாடங்கள் போதிக்கமுடியும். மேலும் உயர்தரப்பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் உதவியைக்கொண்டு அவர்களே ஆரம்பப் பாடசாலையில் தமது பள்ளிக்கூட சாதனங்களை வைத்து குழந்தைகளுக்கேற்ற சில பாடங்களைப் போதிக்கச்செய்வதும் சிறந்ததாகும். இங்கு காட்டிய முறைகளும் சாதனங்களும் எனது சொந்த அனுபவத்தில் அறிந்ததும் கையாண்டதுமான முறைகளாகும்.

### குழந்தைகளின் ஒழிவுநேரப் பொழுதுபோக்கு சங்கம்

ஒவ்வொருவரும் ஒழிவு நேரத்தை ஒழுங்காகவும் சிரத்தையாகவும் உபயோகமுள்ளதாகவும் செலவழிப்பதில் கவனம் செலுத்துவது அவசியம். சிலர் பாட்டுகள் பாடுவார்கள் ; சிலர் உல்லாசமாக உலாவுவார்கள், சிலர் தோட்டவேலையில் சிரத்தை காட்டுவார்கள்; சிலர் ஆடு மாடு நாய் போன்ற பிராணிகளின் அபிவிருத்தியில் சிரமம் எடுத்துக் கொள்வார்கள். இதனால் பொழுதுபோக்குவதும் மனது நிம்மதி யடைவது மாத்திரமே தவிர ஊதியம் பெறுவது அல்ல. குழந்தைகளுக்குக் கூட இம்மாதிரியான ஓய்வுநேர வேலையில் ஊக்கம் புகட்டுவது அவசியம். இங்குகூறிய கண்காட்சி சாதனங்களை குழந்தைகளின் கூட்டுறவினாலும், முயற்சியாலும் சேகரம்செய்து கொள்ளக்கூடும். இடையிடையே சொற்ப பொருட்செலவு ஏற்படினும் அவற்றை சங்கக் குழந்தைகள் அனைவரும் பங்கு போட்டுக்கொண்டு ஒவ்வொருவராலும் ஏற்படக்கூடிய செலவைக் குறைத்துக்கொள்ளலாம். மாதம் தம்பிடி முதல் காலணா வரையில் மாதக் கட்டணமும் தேவையாயிருந்தால், அல்லது கூடுமானால், ஏற்படுத்திக் கொள்ளலாம். அவ்வேற்பாட்டினால் பலர் சேர்ந்து வேலை செய்வதற்குப் பாதகம் ஏற்படக்கூடாது. இம்மாதிரி பொழுதுபோக்கு சங்கங்கள் ஆங்காங்கு நிரம்ப ஏற்படவேண்டுமென்பதே அடியேனது பிரார்த்தனை.

# சாரணீயம்—அதன் உண்மையும் முறையும் 8.

(31-ஆம் பக்கத் தொடர்ச்சி)

---

S. ஸ்ரீநிவாஸன், போர்டு உயர்தர பாடசாலை, செங்கம்.

## சாரணமுறை

### 1. சாரணர்களின் வகை

இதுவரையில் சாரணீயத்தின் உண்மை (Principles) களையும், சாரண இயக்கத்தின் சரித்திரத்யையும் சொல்லிவந்தோம். இனி சாரண முறை (Practice) எப்படி என்பதை—அதாவது சாரணர்களின் வகை, சாரணப்படை யமைப்பு, அவர்களின் பயிற்சி, சோதனை முதலியவைகளை கவனிப்போம். சாரணீயம் நடைமுறையில் எல்லா விடங்களிலும் ஒரே மாதிரி இருக்க முடியாதென்பது சொல்லாமலே விளங்கும். அது இடத்துக்கிடம் சிறிதளவேனும் மாறுபட்டிருப்பது இயற்கை. ஆயினும் அடிப்படையான நியமங்கள் உலகம் முழுவதிற்கும் ஒன்றே. நடைமுறை வித்தியாசங்களால் அவை பாதிக்கப்படவேண்டிய அவசியமேயில்லை.

சாரணர்கள் என்பது சாதாரணமாய் சாரண இயக்கத்தில் சேர்ந்திருப்பவர் அனைவரையும் குறிப்பிடும். ஆனால் சாரணர்கள் சாரண விதிப்படி, மூன்று வகையாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவை :—

1. சிங்கக் குட்டிகள் (7 வயது முதல் 11 வயதுவரையில்)
2. சாரணர்கள் (12 முதல் 17 வயது வரையில்)
3. சஞ்சாரிகள் (18 வயதுக்கு மேல்)

இந்த மூன்று பிரிவினர்களுக்கும் பொதுப் பெயர் சாரணர். ஆனால் அந்தந்தப் பிரிவைத் தனியாகக் குறிப்பிடும்போது, அதனதன் பெயராலேயேதான் குறிப்பிடவேண்டும். இந்த மூன்று வகை சாரணர்களும் ஒரு பொதுத்தலைவன்கீழ் ஓரிடத்தில் இருந்தால், அவர்களுக்கு அவ்விடத்திய சாரணத்தொகுதி (Scout Group) என்று ஒற்றுமையாக சொல்லப்படும். அத்தலைவருக்கு (Group Scout Master) என்றுபெயர்.

| | | |
|---|---|---|
| சிங்கக் குட்டிகளை | சிங்கக்குட்டி மந்தை | என்றும் |
| சாரணர்களை | சாரணப்படை | என்றும் |
| சஞ்சாரிகளை | சஞ்சாரக்ணம் | என்றும் |

சொல்லவேண்டும். ஒரு சாரணத் தொகுதியில் இம் மூன்றுவகை சாரணர்களோ அல்லது ஏதாவது இரண்டுவகை மட்டுமோ இருக்கலாம்.

## 2. சாரணப்படையின் அமைப்பு

சிங்கக்குட்டி மந்தை, சாரணப் படை, சஞ்சார கணம் ஆகிய ஒவ்வொன்றும் பல அணிகளாக வகுக்கப்பட்டிருக்கும் சாரண திட்டத்தின் அஸ்திவாரம் அணிவகுப்பு ஏற்பாடாகும். ஒரு அணியில் 6 முதல் 8-வரை சாரணர்கள் இருக்கலாம். ஆனால் மொத்தத்தில் ஒரு சிங்கக்குட்டி மந்தையில் 12 பேருக்குக் குறையாமலும் 24 பேருக்கு மேற்படாமலும் இருப்பது நல்லது. அதாவது ஒரு மந்தையில் இரண்டுமுதல் 4 அணிகள் வரையிலும் இருக்கலாம். இந்த சிங்கக்குட்டி அணி ஒவ்வொன்றுக்கும் ‘ஆறு’ (Six) என்று பெயர். 4 அணிகள் என்பதற்குப் பதிலாக 4 ஆறுகள் என்றும் சொல்லலாம். ஒவ்வொரு ஆறிலுமுள்ள சிங்கக்குட்டிகளை முதலிலிருந்து கடைசி வரையில் 1, 2, 3, 4, 5, 6 என்று அழைக்கவேண்டும்.

ஒவ்வொரு அணிக்கும் ஒரு தனிப்பெயர் கொடுப்பதுமுண்டு. மேனாடுகளில் அவைகளுக்கு பக்ஷிகளின் பெயரையோ அல்லது மிருகங்களின் பெயரையோ வைக்கிறார்கள். ஆனால் நாம் அதைவிட ஒரு சிறந்த வழியில் பெயர் கொடுக்கலாம். ஒவ்வொரு அணியையும் ஒரு வீரன் அல்லது தேசத்தலைவன் பெயரால் அழைக்கலாம். உதாரணமாக சிவாஜி, அணி, அக்பர் அணி, கோகலே அணி என்று வைக்கலாம். இதனால் சிறுவர்கள் அப்பெரியார்களை தங்கள் மனதில் வைத்துக்கொண்டு இவர்களுடைய மாதிரியைப் பின்பற்றி நடக்க ஒரு ஏது உண்டாகும்.

ஒவ்வொரு சிங்கக்குட்டி அணிக்கும் ஒரு தலைவன் உண்டு. அவனுக்கு அணித்தலைவன் (Sixer) என்று பெயர். அவனுக்கு உதவியாக உபதலைவன் (Second) ஒருவனும் இருப்பான். இவர்கள் இருவரும் அணியின் ஆறு பேர்களில் அடங்கியவர்களே. எல்லா அணிகளுக்கும் சேர்ந்து ஒரு தலைவர் உண்டு. அவருக்கு சிங்கக்குட்டி ஆசிரியர் (cubmaster) என்று பெயர். இவர் அதற்கென பயிற்சி பெற்றவர். அணியில் சேராதவர்.

சாரணப்படை (Scout group) யிலுள்ள ஒவ்வொரு அணிக்கும் அதேமாதிரி ஒரு தலைவனும் உபதலைவனும் உண்டு. அவர்களுக்கு முறையே சாரண அணித்தலைவன் (patrol leader) என்றும், சாரண அணி உபதலைவன் (Assistant patrol leader) என்றும் பெயர். இவர்களும் அணியிலுள்ள 6 பேர்களில் அடங்கியவர்கள்தான். எல்லா அணிகளுக்கும் பொதுவான ஒரு தலைவனும் இருப்பான். அவனுக்கு படைத் தலைவன் (troop leader) என்று பெயர். அவனுக்குமேல் சாரண ஆசிரியர் (Scout master). இவர் அதற்கான பயிற்சி பெற்று அணியைச் சேராத ஒருவராகயிருப்பார். சாதாரணமாக ஒரு சாரணப் படையில் 12 பேருக்குக் குறையாமலும் 50 அல்லது 32 பேருக்கு அதிகப்படாமலும் இருப்பது நலம்.



மூன்றுவது வகை சாரணர்களான சஞ்சாரிகளும் இதேமாதிரி வகுக்கப்பட்டு, ஒவ்வொரு அணியும் ஒரு தலைவன்கீழ் இருக்கும். சஞ்சாரிகளை மொத்தமாக சஞ்சாரகணம் என்று சொல்லவேண்டும் ஒரு கணத்தில் இத்தனைபேர்தான் மொத்தத்தில் இருக்கவேண்டுமென்று கட்டாயம் வேண்டியதில்லை.

மேலே கூறப்பட்ட மூன்று வகை சாரணர்களையும் அவர்களின் உட்பிரிவுகளையும், அதனதன் தலைவர்களுடன் வம்சாவளி ரூபமாக கீழே காட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து சாரணப்படை யமைப்பு நன்கு விளங்கும்.

**சாரணத்தொகுதி ஆசிரியர்**

**Group Scoutmaster**

| 1. சஞ்சாரத் தலைவன் | | | 2. சாரண ஆசிரியர் | | | 3. சிக்கக்குட்டி ஆசிரியர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சஞ்சாரர்கணம் | | | சாரணப் படை | | | சிங்கக்குட்டி மந்தை | | |
| சஞ்சார அணி 1. | சஞ்சார அணி 2. | சஞ்சார அணி 3. | சாரண அணி 1. | சாரண அணி 2. | சாரண அணி 3. | சி. கு. அணி 1. | சி. கு. அணி 2. | சி. கு. அணி 3 |
| சஞ்சாலிகள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8. | | சஞ்சாலிகள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8. | சாரணர்கள் 1, 2, 3, 4, 5, 6. | | சாரணர் 1, 2, 3, 4, 5, 6. | சி. குட்டிகள் 1, 2, 3, 4, 5, 6. | | சி. குட்டிகள் 1, 2, 3, 4, 5, 6. |

## 3. அணிவகுப்பு முறையின் நன்மைகள்

ஒவ்வொரு அணியிலும் சிலரே இருப்பதால், ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகி, ஒருவரை யொருவர் நன்றாக அறிந்துகொள்ள முடியும். தலைவர்கள் தங்கள் கீழ் இருக்கும் சாரணன் ஒவ்வொருவனையும் தனித்தனியாக அறிந்து, அவனுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்க முடியும். அவனவனுடைய குணவிசேஷங்களையும் குறைகளையும் எளிதில் அறிந்து தகுந்தபடி நடந்துகொள்ளலாம். சாரணர்கள் தங்கள் தொண்டுகளையும் சமூக சேவைகளையும் தனித்தனி அணிகளாகப் பிரிந்தும, மொத்தமாகச் சேர்ந்தும் செய்யும்படியான பல சந்தர்ப்பங்கள் நேரும். அச்சந்தர்ப்பங்களில் அவர்கள் எப்படி அவசியமோ அல்லது உசிதமோ அப்படி பிரிந்தோ சேர்ந்தோ நடந்துகொள்ளலாம். அவ்வப்போது அணிவகுப்பதால் காலதாமதமும் கஷ்டமும் உண்டாகும். தலைவர்கள், சாரணர்கள் சிறு சிறு வகுப்பாயிருக்கும்போது, அவசர

உத்தரவிடுவதும் பயிற்சியளிப்பதும் சுலபமாயிருக்கும். ஒரு அவசரத்தில் அல்லது ஆபத்தில் கூட்டமாக சேருவதைவிட, சிறு சிறு பகுதிகளாக, செய்யவேண்டிய வேலைகளைப் பகிர்ந்துகொண்டு செய்ய இந்த அணிவகுப்பு ஏற்பாடு மிகவும் அனுகூலமாயிருக்கும்.

எந்த அப்பியாஸமும், வேலையும் போட்டி உணர்ச்சியோடு செய்தால் சீக்கிரமாகவும் சிறப்பாகவும் முன்னேறும். அதிலும் சிறுவர்களுக்குள் இந்த போட்டியிடும் சுபாவம் அதிகம். எதற்கும் அவர்கள் பந்தயம் வைத்துப் பேசுவதை நாம் சாதாரணமாய்ப் பார்க்கிறோம். சாரணர்களுக்குக் கொடுக்கும் பயிற்சிகள் பல. விளையாட்டு, தேக வலிமை, செயல் திரன், புத்திகூர்மை, ஞாபக சக்தி—இவைகளில் ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்னும் இயற்கைத் தூண்டல் சிறுவர்களிடம் முதியோர்களைவிட அதிகமாக உண்டு. இந்தப் போட்டி உணர்ச்சியைத் தகுந்தவிதத்தில் உபயோகித்துக்கொள்ள சிறுவர்களுக்கு அணிவகுப்பு முறை பூரண சந்தர்ப்பங்களை அளிக்கிறது.

ஒவ்வொரு சோதனைக்கும் பல பரிசுகளும், பதக்கங்களும், விருதுகளும் ஏற்படுத்தி, அவைகளை வெல்ல பல அணிகள் ஒன்றோடொன்று போட்டியிடும்படி செய்ய அணிவகுப்பு முறை ஏற்றது. இதனாலேயே சாரணர்களுக்கு பல நற்குணங்களும, விடாமுயற்சியும், திடசித்தமும், சந்தோஷமும், வாழ்க்கையில் ஒரு ஆவலான பிரியமும் உண்டாகும். போட்டி, சாரணர் செய்யும் ஒவ்வொரு வேலையிலும், அவர்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருக்கவேண்டும். அதுவன்றி, அவர்களுக்குள் உத்ஸாகத்தை மூட்டுவது முடியாது. (தொடரும்)

---

## சந்தாதார்களுக்கு அறிவிப்பு

பாலர் கல்வியின் சந்தா துகை முன் பணமாகவே அனுப்பிவிட வேண்டும் என்பதை நமது சந்தாதார்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகையால், சந்தாதார்களை தமது சந்தா காலம் முடிவடைந்த உடனே, வருஷ சந்தாவை அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். ப-ர்.

---

# விரநங்கை ஜோன் (Joan of Arc.)

By A. R. Seshasayee, M.A.L.T. *Asst. E. R. High School, Trichinopoly.*

இன்று நேசக் கட்சியினராய் விளங்கும் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் கி. பி. 1338-ஆம் ஆண்டு முதல் 1453 ஆண்டு வரை சுமார் நூறு வருஷ காலம் அடிக்கடி போர் புரிந்து வந்தனர். இப்போர் சரித்திரத்தில் நூற்றாண்டுப் போர் என வழங்கும்.

இதை முதன்முதலாக ஆங்கில அரசனான மூன்றாம் எட்வர்டு (**Edward III**) ஆரம்பம் செய்தான். இதற்கு முக்கிய காரணம் பின்வருமாறு. எட்வர்டின் தாயாரான இஸபெலா (**Isabella**) பிரெஞ்சு மன்னனான நான்காம் பிலிப்பின் மகள். பிலிப் இறந்த சில வருடங்களுக்குள்ளாக அவனுடைய குமாரர்களும் இறந்துபோயினர். உடனே ஆங்கில மன்னரான எட்வர்டு தன் தாய் வழியின் மூலம் பிரெஞ்சுப் பட்டத்திற்கு உரிமை பாராட்டத் தொடங்கினான். ஆனால் பிரான்ஸில் இருந்துவந்த ஸாலிக் சட்டப்படி (**Salic Law**) அவனுக்கு உரிமை இல்லை எனினும் அத்தேசத்துடன் போர் தொடுப்பதற்கு அது போதிய காரணமாகவே அமைந்தது. அன்றியும் ஜான் (**John Lackland**) பிரான்ஸில் இழந்துள்ள நாடுகளை மீண்டும் தான் அடைய வேண்டுமென்று எட்வர்டு எண்ணியதும் இச்சண்டைக்கு மற்றொரு காரணமாகும்.

கி. பி. 1337-ல் மூன்றாம் எட்வர்டு பிரான்ஸின் மீது படையெடுத்துச் சென்று பிரெஞ்சு சைன்யத்தைப் பலவிடங்களிலும் தோற்கடித்து கி. பி. 1347-ல் பிரெஞ்சுத் துறைமுகப்பட்டணமாகிய கலேயை (**Calais**) க் கைப்பற்றிக் கொண்டான். இச்சண்டைகளில் (**Battles of Crecy and Poitiers**) எட்வர்டின் குமாரனான கருங்கவச இளவரசன் எனப்படுபவன் (**Edward the Black Prince**) மிக்க தீரத்துடன் போர் புரிந்து வெற்றி வீரனாக விளங்கினான். ஆயினும் எட்வர்டு ஆட்சியின் இறுதியில் ஆங்கிலேயருக்கு பிரான்ஸில் சொந்தமாயுள்ளவை, கலே, போர்டோ, பேயான் எனும் மூன்று பட்டணங்களேயாகும்.

கி. பி. 1413-ல் இங்கிலாந்தில் ஆண்ட ஐந்தாம் ஹென்றி என்பவன் (**Henry V**) எட்வர்டைப் போலவே பிரெஞ்சுப் பட்டத்துக்கு உரிமை கொண்டாடியதோடு போரில் இறங்கிப் பெரும் புகழும் பெற விரும்பினான். அவன் பிரான்ஸின்மீது படையெடுத்து அஜின்கோர்ட் (**Battle of Agincourt**) எனும் களத்தில் கி. பி. 1415-ல் ஒரு பிரெஞ்சு சைன்யத்தைத் தோற்கடித்து, பின்பு இரண்டுபட்டிருந்த பாரிஸ் (**Paris**) நகரை நோக்கிச் செல்லலுற்றான். அப்போது பிரான்ஸில் இரண்டு

கட்சியினரிடையே பகைமைமூண்டு குழப்பம்ஏற்பட்டமையால் ஐந்தாம் ஹென்ரியின் நோக்கம் எளிதில் நிறைவேறியது. பர்கண்டியர்கள் (Burgundians) எனும் ஒரு பிரெஞ்சுக் கட்சியினர் அந்நியரான ஆங்கிலேயருடன் தோழமை பூண்டு தங்கள் நாட்டிற்கே துரோகம் சூழ்ந்தனர். அதனால் பிரெஞ்சு அரசனான ஆறாம் சார்லஸ் (Charles VI) வேறு வழியின்றி ஐந்தாம் ஹென்ரியுடன் ஒரு உடன்படிக்கைச் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இதன்படி (Treaty of Troyes) ஹென்ரி பிரெஞ்சு அரசனின் மகளை மணந்து கொள்வது என்பதும், பிரெஞ்சு அரசனுக்குப் பயித்தியம் பிடித்திருந்தமையால் ஹென்ரியே ரீஜண்டாகவிருந்து பிரான்ஸை ஆள்வதென்பதும், அவ்வரசன் இறந்த பிறகு ஹென்ரியே பிரான்ஸ் தேசத்திற்கு அரசனாக வேண்டும் என்பதும் பிரெஞ்க அரசனது குமாரனாகிய சார்லஸுக்கு பிரெஞ்சு அரசுரிமை கிடையாதென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

மறுவருஷம் 1422-இல், பிரெஞ்சு மன்னனாகிய ஆறாம் சார்லஸும் ஆங்கில மன்னனுமாகிய ஐந்தாம் ஹென்ரியும் இறந்தனர். உடனே ஆங்கிலேயர்கள ஐந்தாம் ஹென்ரியின் கைக்குழந்தையை பாரிஸில் பிரெஞ்சு அரசனெனப்பறை சாற்றுவித்தனர். ஆனால் பிரெஞ்சு மக்கள் இதை ஒப்புக்கொள்ளாமல் ஆறாம் சார்லஸின் குமாரனைத் தங்களது அரசனாகக் கொண்டு ஆங்கிலேயருடன் போர் புரியலானார்கள். அப்போது ஆங்கில தளகர்த்தனாய் விளங்கிய பெட்போர்டு கோமகன் (Duke of Bedford) தனது சாமர்த்தியத்தினால் பிரான்ஸின் வடபாக முழுவதையும் கைப்பற்றி அவ்விடத்தில் ஆங்கில அரசாட்சியை நிலைநிறுத்தினான். பிரான்ஸில் லாயர் (Loire) நதிக்குத் தெற்கேயுள்ள பாகம்தான் பிரெஞ்சு இளவரசரின் கைவசம் இருந்தது. அதைப்பிடிக்க எண்ணங்கொண்டவனாய் பெட்போர்டு 1428-ல் லாயர்நதிக்கரை மீதுள்ள ஆர்லீன்ஸ் நகரை (Orleans) முற்றுகையிட்டான்.

இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் ஜோன் (Joan of Arc) எனும் ஒரு மாது தேசாபிமானமற்றுக்கிடந்த பிரெஞ்சு ஜனங்களைத் தட்டி எழுப்பி பிரான்ஸை ஆங்கிலேயரின் அடிமைத்தளைகளினின்றும் விடுவிக்க முன்வந்தாள். ஜோன் பிரான்ஸின் தென் கிழக்கில் டாம்ரெமி (Domremy) எனுங் குக் கிராமத்தில் பிறந்தவள். ஒரு நாள் அவள் மலைகளினிடையே ஆடு மாடுகளை மேய்த்து வந்தபோது அசரீரிவாக்குகள் அவளது காதில் விழுந்தன. அந்நியரான ஆங்கிலேயரை பிரான்ஸினின்றும் விரட்டியடிக்குமாறு கடவுள் தனக்கு உத்திரவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. இவ்விஷயத்தை அவள் தனது பெற்றோரிடமும் மற்றோரிடமும் சொல்ல, அவர்கள் அதைக்கேட்டு எள்ளி நகையாடினர். ஆயினும் அவள் சிறிதும் மனந்தளராதவளாய் ராபர்ட்டி பாட்ரிகோ எனும் ஒரு பிரெஞ்சு பிரபுவின் உதவியால் பிரெஞ்சு இளவரசனை (The Dauphin of France) ஷினானில் (Chinon) நேரில் கண்டுத் தனக்குக்



கடவுளால் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தெரிவித்தாள். அதுபோது இளவரசன் முந்நூறு பிரபுக்களினிடையே களியாட்டில் உல்லாசமாகக் காலங்கழித்து வந்தமையால், ஒரு பெண்பேதை சொல்லும் வார்த்தைகளை அலட்சியம் செய்யலானான். எனினும் அவளது ஊக்கத்தை உணர்ந்த இளவரசன் அவள் தலைமையில் ஒரு பிரெஞ்சு சைன்யத்தை அனுப்ப இறுதியில் ஒப்புக்கொண்டான்.

ஜோன் வெண்குதிரை யொன்றன்மீது வீற்றிருந்து வெண்கவசம் பூண்டு வெண்கொடி யொன்றைக் கையில் தாங்கி ஆங்கிலேயர் முற்றுகை யிட்டுவந்த ஆர்லீன்ஸ் நகரை (Orleans) நோக்கிக் கம்பீரமாய்ச் சென்றாள். இப்பெண்ணின் ஊக்கத்தைக்கண்ட மற்ற பிரெஞ்சு வீரர்களும் ஊக்கங்கொண்டு மிக்க தைரியத்துடன் போர்புரியலாயினர். ஆங்கிலேயர் தோல்வியுற்றமையால் ஆர்லீன்ஸ் நகரம் விடுவிக்கப்பட்டு பிரெஞ்சுக்காரரின் வசமே இருந்து வந்தது. இவ்வரிய காரியத்தைச் செய்தமையால் ஜோனுக்கு ஆர்லீன்ஸ் கன்னிகை (Maid of Orleans) எனும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

பிறகு ஜோன் பிரெஞ்சு இளவரசனை ரீம்ஸ் மாதாகோவிலுக்கு (The Cathedral of Rheims) அழைத்துச் சென்று ஆங்கு சகல வைபவங்களுடன் அவனுக்கு முடி சூட்டுவித்தாள். அதற்குப் பின்னர் அவள் பல விடங்களில் ஆங்கிலேயருடன் யுத்தம் செய்து வந்தாள். அதுபோது ஆங்கிலேயருடன் நட்புக்கொண்டிருந்த பிரெஞ்சுக் கட்சியினரான பர்கண்டியர்கள் (Bugumelias) ஜோனைக் கைதியாக்கி ஆங்கிலேயரிடம் 4000 பவுன் பெற்றுக்கொண்டு விற்றுவிட்டனர்.

உடனே ஆங்கிலேயர் ஜோனை ஒரு சூன்யக்காரியென குற்றஞ்சாட்டி விசாரணை நடத்தினர். நாற்பது குருமார்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். பிரதம நீதிபதியாயிருந்த பீர் காசன் (Pierre Cauchon) ஜோனினிடம் பரம துவேஷம் கொண்டவன். விசாரணை மிகவும் ஒழுங்கீனமான முறையில் நடைபெற்றது என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. நீதிபதிகள் ஜோனை பலவிதத்தில் நிர்ப்பந்தித்ததுடன் இழிவான முறையிலும் நடத்திவந்தார்கள். புபேர் (Beaupere) என்பவன் ஜோனைப்பார்த்து "உனக்கு கடவுள் ஆக்ஞையுடன் வெளிச்சமும் ஏற்பட்டதோ?" என்று கேட்டபோது "வெளிச்சமும் ஞானமும் உனக்கு ஏகபோக உரிமையில்லை" என்று தைரியமாகச் சொன்னாள். நல்ல பாஷாஞானம் இல்லாத மற்றொரு நீதிபதி "உன்னுடன் எந்த பாஷையில் கடவுள் பேசினார்?" என்று ஜோனைக் கேட்டபோது "உங்களதைவிட அதிக சுத்தமான பிரெஞ்சில்தான்" என்று பதில் இறுத்தினாள். வேறொருவன் ஜோனைக்கண்டு "நீ ஏன் வெட்கங்கெட்டு ஆண்வேடம் தரித்திருக்கிறாய்?" என்றதற்கு "உன்னைப்போன்ற துஷ்டர்கள் என்னை எப்போதும் சூழ்ந்திருக்கையில் நான் வேறு விவேக

மான காரியம் என்ன செய்யக்கூடும்?'' என்று சொன்னாளாம் கடைசியில் ஆங்கிலேயர் அவளுக்கு மரண தண்டனை விதித்து அவளை ரூவனில் (Rouen) எரித்து இரையாக்கினார்கள். ''கடவுளின் ஆக்ஞையின்படியே நான் செய்தேன்,'' என்று அவள் சாகுந்தருணத்தில் சாற்றினாள். ஆங்கில வீரர்களில் பலர். ''நாம் இன்று ஒரு புனிதவதியை எரித்துவிட்டோம். இனி நமக்கு விநாசகாலந்தான்'' என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்களாம்.

ஜோன் தன் நாட்டிற்குச்செய்த தொண்டு யாது? தூங்கிக் கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர்களைத் தட்டி எழுப்பினாள். தேசாபிமானம் எனும் வெள்ளம் நாட்டில் பெருக்கெடுத்து ஓடும்படி செய்தாள். ஜனங்கள் உள்ளத்தில் சுதந்திர தாகம் ஏற்படுமாறு கடனாற்றினாள். அடிமைத் தளையை அறுத்தெறிவதற்கான ஆவேசத்தை உண்டாக்கினாள். இதன் பயனாக இரண்டுபட்டிருந்த பிரான்ஸ் ஒற்றுமைப்பட்டது. பர்கண்டியர்கள் தங்கள் நாட்டிற்கு இழைத்து வந்த தீங்கை உணர்ந்து எதிரிகளாயிருந்த ஆர்லீனிஸ்டு (Orleanist) கட்சியினருடன் சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை விரட்ட ஆரம்பித்தனர். மற்றும் ஜோன் இறந்த சில வருஷங்களுக்குள் ஆங்கிலேயரின் வெற்றிகளுக்குக் காரணமாயிருந்த பெட்போர்டும் (Duck of Bedford) காலமானான். இதற்குப் பிறகு ஆங்கில சைன்யங்களைத் திறமையுடன் நடத்திச்செல்வதற்குத் தகுந்த தலைவர்கள் ஒருவரும் இல்லை. ஆகவே கி. பி. 1453-ல் ஆங்கிலேயர் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டு பிரான்ஸினின்றும் விரட்டுண்டனர். கலே எனும் நகரம் ஒன்றே கி. பி. 1558 வரை ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்து வந்தது. அதுவும் ட்யூடர் வம்சத்தை சார்ந்த மேரிராணியின் காலத்தில் பிரெஞ்சுக்காரர்களால் பிடித்துக் கொள்ளப்பட்டது.

இதற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் பிரான்ஸைப் பிடித்து ஆள வேண்டுமென்னும் ஆசையை ஒழித்து உலகின் பல பாகங்களுக்குச் சென்று ஆங்குக் குடியேற்ற நாடுகளை ஸ்தாபிப்பதில் முனைந்தார்கள்.

# நமது கடிதப் பெட்டி

அன்பார்ந்த ஐயா,

பொதுவாக ஸ்தல ஸ்தாபன ஆரம்பப் பாடசாலைகளில் உபாத்திமைத் தொழில் புரிந்து வரும் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்களின் சம்பள விகிதம் மகா மோசமானதாக இருந்துகொண்டு வருகிறது. அவர்களை வேலைக்கு நியமனம் செய்யும்போதே ஹையர் எலிமெண்டரி கிரேடின் சம்பள விகிதமாகிய ரூ. 20—$\frac{1}{2}$—24—$\frac{1}{2}$—30-ல் நியமனம் செய்து விடுகிறார்கள். பிறகு அவர்களும் ஹையர் கிரேடு பாஸ் செய்த ஆசிரியர்களும சம்பள விகிதத்தில் ஒன்றுபோலவே நடத்தப்படுகிறார்கள். ஆனால் இப்பொழுது புதியதாகப் பிறப்பித்திருக்கும் உத்திரவுப்படி செகண்டரி கிரேடு சர்டிபிகேட் பூர்த்தி செய்த ஆசிரியர்கள்தான் ஆரம்பப் பாடசாலையில் ஆங்கிலம் போதிக்க லாயக்குடையவர்கள். ஆனால் அவர்களுடைய சம்பளமோ ஹையர் கிரேடின் சம்பளம்!

இது இவ்வாறிருக்க, சர்க்கார் உதவிபெற்று நடந்து வரும் எயிடெட் ஆரம்பப் பாடசாலைகளில் தொழில் புரியும் ஆசிரியர்களுக்கு அவரவர்கள் கிரேடுக்கு ஏற்பட்டிருக்கும் விகிதப்படி கிராண்டு கொடுக்கப்பட்டு வருகிறது. தவிரவும், லோயர் கிரேடு பாஸ் செய்து ரூ. 15-ல் உபாத்தியாயராக இருக்கும் ஒருவர் ஹையர் கிரேடு பரீக்ஷை எழுதி பாஸ் செய்துவிட்டால் அவருக்கு பரீக்ஷை தேறிய தேதியிலிருந்து ஹையர் கிரேட் சம்பள விகிதம் கொடுக்கப்படுகிறது. ஆனால் எஸ். எஸ். எல். ஸி யோ, இன்டர் மீடியட்டோ, பி. ஏ. தேராமலோ, செகண்டரி கிரேடு பாஸ் செய்த உபாத்தியாயர்களுக்கோ, பிரைமரி பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படித்து லோயர் கிரேடிலிருந்து ஹையர் கிரேடான ஆசிரியரின் சம்பளம் ஐந்தாம் வகுப்பு முடிய இருக்கும் அங்கீகாரமான பாடசாலைகளில் நான்கு அல்லது ஐந்து ஆசிரியர்இருந்து செகண்டரி கிரேடு ஆசிரியர் தலைமையாசிரியராக இருந்தால்மட்டும் அவர்களுக்கு ரூ. 25-2/2-45 விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு ஒரு பாடசாலையில் ஒருவருக்குத்தான் கிடைக்கிறது. ஹையர் எலிமெண்டரிப்பாடசாலைகளில் நியமனம் பெறுவதற்கும் அநேகந் தடைகள் இருக்கின்றன. மேற்படி பாடசாலைகளும் மிகவும் குறைந்த எண்ணிக்கையாகவே இருக்கின்றன.

உயர்ந்த யோக்யதாம்சமுள்ள ஆசிரியர்கள் தேசத்தின் முதுகெலும்பா யிருக்கும் ஆரம்பப் பாடசாலைகளில் உபாத்தியாயர்களாயிருந்து நாட்டின் கல்வியபிவிருத்திக்குப் பாடுபட வேண்டுமென்னும் முறையீடு ஒருபுற மிருக்க, மேற்படி ஆசிரியர்களின் ஊதியமோ ரொம்பவும் கேவலமானதாக இருக்கிறது. இக்குறையை நிவர்த்திக்க கல்வி இலாகா அதிகாரிகள் உடனே முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வது மிகையாகாது.

இப்படிக்கு,

உடுமலைப்பேட்டை }
13—6—1940. }

P. பாலசுப்பிரமணியம்,
ஆரம்பாசிரியன்.

# செய்தித்திரட்டு

## திருவண்ணாமலை தாலுக்கா

### பஞ்சாயத்துபோர்டு ஆசிரியர்கள் யூனியன்

1940ஆ ஜூன்மீ 29உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவண்ணாமலை தாலுக்கா பஞ்சாயத்துபோர்டு ஆசிரியர்களின் சாதாரணக் கூட்டம் திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் உயர்தரப்பாடசாலையில் மேற்படி யூனியனின் தலைவர் ஸ்ரீ. காளியப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு 27 ஆசிரியர்கள் ஆஜரானார்கள்.

### தீர்மானங்கள்

1931ஆ டிசம்பர்மீ 3உ D Dis. No. 38855 நெ. உத்திரவில் பஞ்சாயத்து போர்டு ஆசிரியர்களுக்குத் தற்காலிகமாக குறைக்கப்பட்டிருக்கும் சம்பளத்தை மறுபடியும் உயர்த்தவேண்டுமென்று ஸ்ரீ சென்னை லோக்கல் போர்டு இனிஸ்பெக்டர் அவர்களைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அம்பா சமுத்திரம் கல்வி மகாநாட்டில் ஆரம்பக்கல்வி சம்பந்தமாக நிறைவேறிய முக்கிய தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு ஏகமனதாய் ஆதரிக்கப்பட்டன.

மேற்படி தாலுக்கா ஆடையூர் பஞ்சாயத்து போர்டு பாடசாலையில் சுமார் 2 வருஷகாலமாய் வேலை செய்துவந்த சர்டிபிகேட் பூர்த்தியடைந்தவருமான R. கோவிந்தசாமி முதலியாரைத் திடீரென்று ஒழுங்கீனமாய் வேலையில் இருந்து நீக்கப்பட்டது மல்லாமல் மேற்படி போர்டார் காட்டியிருக்கும் காரணம் 20—11—36-ல் நெ. 35-ல் வெளியான பஞ்சாயத்து ஜர்னல் சர்க்குலர் நெ. 238-க்கும் விரோதமாய் இருக்கிறது. இது விஷயமாய் கனம் ஸ்ரீ சென்னை லோக்கல் போர்டு இனிஸ்பெக்டர் அவர்கள் உடனே தக்க பரிசீலனை செய்யுமாறு கேட்டுகொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விதமாக சில பஞ்சாயத்து போர்டுகள் தக்க காரணமின்றி ஆசிரியர்களை "நீக்குவதும் வைப்பதும்" என்ற முறையைக் கையாண்டு வருவதால் ஆசிரியர்களின் வாழ்க்கைக்கும் ஆரம்பக்கல்விக்கும் பெருத்த இடஞ்சல்கள் ஏற்படுவதை உடனே தடுத்து தக்க பாதுகாப்பு அளிக்குமாறு கனம் ஸ்ரீ சென்னை லோகல்போர்டு இனிஸ்பெக்டர் அவர்களைக் கேட்டுக்கொள்ள இந்த யூனியனால் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.



**தலைவர் முடிவுரை.**—கிராம முன்னேற்றங்களுக்குக் காரணஸ்தர்கள் ஆசிரியர்கள். தொழில் சிறந்ததென்றாகிலும் குறைந்த சம்பளத்திற்கு நிரந்தர பலனும் பொறுப்பும் அதிகம். வேலையில் உயர்வு தாழ்வு இல்லாமல் ஏணிகளைப்போல் இருக்கின்றோம். தேசத்தில் நல்ல பிரஜைகளை உண்டாக்கி நாட்டின் நலத்தைக் கருதி வேலை செய்பவர்கள் ஆசிரியர்களே. இவ்வித ஆசிரியர்களுக்கு தற்காலம் இருந்துகொண்டு இருக்கும் குறைகளோ மிக அதிகம். குறைகளை நீக்கிக்கொள்ள ஒற்றுமை ஒன்றுதான். யூனியன்கள் ஜில்லா சங்கத்துடன் சேர்ந்து, தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் மூலமாக குறைகளை தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறி முடித்தார். பின்னர் காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு கூட்டம் 5-30 மணிக்கு இனிது கலைந்தது.

V. கிருஷ்ணசாமி நாயுடு, காரியதரிசி.

## சீர்காழி தாலுக்கா கன்னியாகுடி

### பள்ளிக்கூடம் திறந்தநாள் கொண்டாட்டம்

சீர்காழி தாலுக்கா கன்னியாகுடி ஹயர் எலிமெண்டரி பாடசாலையில் திறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றது. அன்று (25-6-40) மாணவர்கள் ஊர்வலமாக அக் கிராம வீதிகள் வழியாய், கல்வி சம்பந்தமான கோஷங்களைச் செய்துகொண்டு சென்றார்கள். தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் M. S. சீனுவாஸய்யர், பெற்றோர்களுடன் ஒத்துழைப்பு, பெண் கல்வியின் அவசியம், மாணவர்கள் யாவரும் பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டும், 8-வகுப்பு முடிய படிக்க வேண்டும் முதலியவற்றைப்பற்றிப் பேசினார். கொண்டார். 28-ந் தேதி மாலை தர்மதானபுரம், கதிராமங்கலம் என்ற பக்கத்து கிராமங்களுக்குச் சென்று மேற்படி விஷயமாய் பிரசாரம் செய்தார்கள்.

## திருமங்கலம் தாலுகா

### போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

16-6-40 பிற்பகல் 1 மணிக்கு உசிலம்பட்டி போர்டு ஆரம்பப் பாடசாலைக் கட்டிடத்தில் யூனியன் தலைவர் ஸ்ரீ S சங்கர ரெட்டியார் அவர்கள் தலைமையில் கூடிய நிர்வாகக் கமிட்டியில் நிறைவேற்றிய தீர்மானங்கள்.

1. ஜில்லாபோர்டு உபாத்தியாயர்களுக்கு பொருளாதார நிலையை அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கும், அவசர செலவுகளுக்கு அக்கம் பக்கங்களில் கடன்வாங்க முடியாத அசௌகரியத்தைப் போக்குவதற்கும் இந்த ஜில்லாவிலுள்ள உபாத்தியாயர்களுக்கு 'ஓர் கூட்டுறவு சங்கத்தை' (Co-operative Society) (ராமநாதபுரம் ஜில்லாவில் நடப்

பது போல்) ஏற்படுத்துவதற்கும், பணம் பட்டுவாடா முதலியவை ஜில்லா போர்டு மூலம் நடத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடு செய்ய வேணுமாய் இவ்வூனியன் ஜில்லா போர்டாரை வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறது.

2. நமது போர்டு பெண் பாடசாலைகளில் முன்னால் இருந்து வந்ததுபோல் மறுப்டியும் கண்டக்டர்ஸ்களை (அதிகமாகக் குழந்தைகளைச் சேர்த்து ஆஜர் அபிவிருத்தியடையும் பொருட்டு) நியமிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

3. ஜில்லாபோர்டு ஆசிரியர்களின் பிள்ளைகள் பொதுப்படிப்பிலோ அல்லது தொழில் படிப்பிலோ தேர்ச்சி பெற்றிருப்பவர்களுககு ஜில்லா போர்டில் கொடுக்கும் உத்தியோகங்களில் முதல் உரிமை வழங்க வேணுமாய் போர்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

4. அரசாங்கத்தார், வைத்தியம், போலீஸ், ரயில்வே முதலிய இலாக்காக்களில் உள்ள ஊழியர்களுக்கு அவரவர் உத்தியோக இடங்களுக்கு அருகாமையிலேயே வீட்டு வசதி ஏற்பாடு செய்திருப்பது போன்று, நமது ஆரம்ப ஆசிரியர்களுக்கும், பள்ளிக்கூடங்களின் அருகாமையிலேயே குடியிருப்பு வசதி செய்துதர வேணுமாய் இவ்வூனியன் போர்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

5. Provident Fund (பிராவிடெண்ட் பண்டு) கடன் விண்ணப்பங்களானது பலதடவைகளில் மிகுந்த காலதாமத மாகியே சாங்கிஷன் கிடைத்து வருவதால், விண்ணப்பத்தில் காட்டுகிற காரணங்களுக்குப் பயன்படாது விண்ணப்பதார்கள் பல கஷ்டங்களடைய நேரிடுகிறது. ஆகையால் அவ்வித மனுக்களை கூடிய சீக்கிரத்தில் கவனித்து சாங்கிஷன் செய்து அனுப்பும்படியாகத் தாழ்மையுடன் இவ்வூனியன் கேட்டுக்கொள்கிறது.

திருமங்கலம் தாலுகா
உசிலம்பட்டி
16—6—1940.

S. செங்கா ரெட்டி—தலைவர்.
V. P. நடராஜன்—காரியதரிசி.

## தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

### காலஞ்சென்றார்

கீழ்கண்ட ஆசிரியர் காலஞ்சென்ற செய்தியைக் கேட்க நாம் வருந்துகிறோம்.

| நம்பர் | பெயர் | வயது | இறந்ததேதி | காப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 69 | ஸ்ரீ. கே. ராஜாசார் குத்தாலம் | 64 | 7—6—40. | ரூ. 321—4—0. |

520, ஹைரோட்,
திருவல்லிக்கேணி
14—6—1940.

வி. ஸ்ரீனிவாசன்,
காரியதரிசி.

# பத்திராதிபர் குறிப்பு

## உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம்

ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம் முடிந்துவிட்டதாகவும் நடுத்தரக் கல்வி திட்டத்தைக் கவனிப்பது மீதியென்றும் மாஜி மந்திரி ஸ்ரீமான் வார்க்கி அவர்கள் போன வருஷம் கூறிவந்ததை நேயர்கள் அறிவார்கள். மாகாணக் கல்வி மகாநாடு இவ்வருஷம் அம்பாசமுத்திரத்தில் கூடியபோது ஆரம்ப ஆசிரியர்களும் மானேஜர்களும் சர்க்காரின் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடச் சீர்திருத்தத்தைப் பற்றிக் கடுமையாகப் பேசினார்கள். தமது அறிக்கையில் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் (Higher Elementary Schools) சாரமற்ற மிடில் ஸ்கூல்களாக வழங்கக்கூடாதென்றும், கிராம முன்னேற்றத்திற்கு அவசியமான பாடங்களைக் கற்பிக்கும் நோக்கத்தை அவைகள் தமது முக்கிய இலக்ஷியமாகக் கருத வேண்டுமென்றும், சர்க்கார் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். ஆரம்பப் படிப்பு நிலையிலேயே தங்கிவிடும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் தேவையை உத்தேசித்து ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடங்களின் சீர்திருத்த விஷயத்தை விரிவாக அறிக்கையில் விளக்கியிருப்பதை ஆசிரியர்கள் கவனிப்பது அவசியம். ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடங்களின் பாடத்திட்டமானது உயர்தர நடுக்கல்விப் பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தினின்றும் பல அம்சங்களில் மாறுபடும். நடுக்கல்விப் பள்ளிக்கூடத்திற்குத் தயார் செய்வது ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடத்தின் நோக்கமல்லவென்பது சர்க்காரின் நிச்சயமான எண்ணம். மேலும் பல பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் பிழைப்புக்கு சாதகமாயிருப்பதற்காக ஹயர் எலிமென்டரி பாடத்திட்டத்தில் தொழிற்படிப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. ஹயர் எலிமென்டரி பள்ளிக்கூடமும மிடில் ஸ்கூலும் வெவ்வேறாயிருக்கவேண்டுமென்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய பாடத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளார்கள். இரண்டு வருஷகாலமாக சர்க்காரின் கொள்கைகளை எதிர்த்தவர் சிலரே யென்று சொல்லலாம். இப்போது பல ஜில்லாக்களில் ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடங்களை சர்க்காரின் விதிகள் மிகவும் பாதிப்பதாக பெரிய புகார் ஏற்பட்டுள்ளது. ஹயர் எலிமென்டரி பள்ளிக்கூடத்தில் எட்டாவது வகுப்பில் படித்த பிள்ளைகளை ஹைஸ்கூலில் நான்காவது பாரத்தில் சேர்க்கக்கூடாதென்று சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இரண்டு வகைப் பள்ளிக்கூடங்களின் பாடத்திட்டங்களும் நோக்கமும் வேறானவைகளாயிருப்பதே. இந்த உத்திரவால் ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடங்களின் மேல் வகுப்புக்களில் பிள்ளைகள் சேரமாட்டார்களென்றும் இப்

பள்ளிக்கூடங்களை மூடிவிட வேண்டியிருக்குமென்றும் மானேஜர்களும் ஆசிரியர்களும் கவலைப்படுகிறார்கள். பாடத்திட்டம் ஏன் வேறாயிருக்க வேண்டும்? வேறாயிருந்தாலும் ஏன் நான்காவது பாரத்தில் சேர்க்கக் கூடாதென்ற தடை உத்திரவு போடவேண்டும்? பிள்ளைகளைப் பரீக்ஷித்து நான்காவது பாரத்தில் ஏன் சேர்க்கக்கூடாது? எனப் பல கேள்விகள் மானேஜர்கள் மாகாணக் கல்வி மகாநாட்டில் கேட்டார்கள். பாடத் திட்டத்தில் வித்தியாச மிருப்பினும் அதை சர்க்கார் வற்புறுத்த மாட்டார்களென எண்ணி முதலிலேயே சர்க்கார் அறிக்கையை ஆக்ஷேபிக்க வில்லை யென்றும் சிலர் கூறினார்கள். சிறிய ஊர்களில் உயர்தரப்படிப்பு வசதியை ஏழைப் பிள்ளைகளுக்கு ஹயர் எலிமென்டிரி பள்ளிக்கூடம் அளிப்பதால் அதை வளர்ப்பது அவசிய மென்பது ஆசிரியரின் அபிப்பிராயம். புது விதிப்படி ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடமாகவே ஏன் பள்ளிக்கூடத்தை நடத்திவரக் கூடாது என்ற கேள்விக்குத் தகுந்த பதில் வருவதில்லை. பிள்ளைகள் ஹைஸ்கூலில் சேர்வதையே எண்ணியிருப்பதாலும், ஜனங்கள் ஆரம்பப் பள்ளிக்கூடத்தை பொருட்படுத்த மாட்டார்களென்ற எண்ணத்தாலும், மானேஜர்கள் புதிய விதிப்படி பள்ளிக்கூடத்தை நடத்தத் தயங்குகிறார்கள். பணத்தை உத்தேசித்து ஹயர் எலிமென்டரி ஸ்கூலென்று வைத்துக்கொண்டாலும், பள்ளிக்கூடத்தின் இலக்ஷியம் ஹைஸ்கூலே. சர்க்காரின் எண்ணமோ, ஹயர் எலிமென்டரி ஸ்கூலானது 11 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட ஆயிரக்கணக்கான ஏழைப் பிள்ளைகளின் பொது சௌகரியத்தைத் தேடுவதாகும். மானேஜர்களின் அபிப்பிராயம் ஒருவிதமிருக்க சர்க்கார் விதிகளை அமுலுக்குக் கொண்டுவருவதால் கஷ்டமும் குழப்பமும் ஏற்படுகின்றன. சர்க்காரின் எண்ணம் கைகூடுவதற்கு இப்போதுள்ள ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடங்களின் சங்கியை மிகக்குறைவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். வேண்டிய அளவு பள்ளிக்கூடங்களிருப்பின் மானேஜர்கள் புகார் செய்ய இடமிராது. சர்க்கார் சீர்திருத்தத்தால் பயனுண்டென்று மறுக்கமுடியாது. அனுபவத்தில் சில அசௌகரியங்களிருப்பதை மானேஜர்கள் காட்டுகிறார்கள். இந்தச் சீர்திருத்தத்தின் உண்மையை மானேஜர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு சரியான அபிப்பிராய மேற்படச் செய்வது சர்க்காரின் கடமை. மேலும் நஷ்டமேற்படாதபடி மானேஜர்களுக்குப் பண உதவி கொடுத்து சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவருவது நலமாகும். தவிர, தொழிற் படிப்பிற்கு வேண்டிய வசதிகள் கொடுக்க இப்பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் பண உதவியும், தொழில் பயிற்சிக் கான உதவியும், கொடுப்பின் ஹயர் எலிமென்டரிப் பள்ளிக்கூடத்தைச் செவ்வையாக நடத்துவது கஷ்டமாயிராது. இந்த விஷயத்தை கல்வி இலாகாத் தலைவரும் ஜில்லா அதிகாரிகளும் ஊன்றிக் கவனித்தல் அவசியம்.

14568

Regd. No. M. 3473

# உண்மைக் கல்வி

மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் புத்தகங்களின் வழியாக போதிக்கப்படும் கல்வியைவிட தாமாகவே நேரில் பார்த்து அறியும் கல்வியே மேலானது. அதுவே உண்மைக் கல்வி.

இவ்வகையான கல்வி பயிலுவதற்கு ஏற்ற வசதிகள் நம்நாட்டில் மிக உள. நமது பெரியோர்களால் அமைக்கப்பட்டுள்ள அழகிய தேவாலயங்கள், சிற்ப விநோதங்கள், புண்ணிய க்ஷேத்திரங்கள், நதிகள், உன்னத மலைகள், கடற்கரைக் காட்சிகள் இவைகளைக்கண்டு, அனுபவித்து, மாணவர்கள் உண்மைக் கல்வியின் பயனை அடையவேண்டும்.

மாணவர்களும், அவர்களோடு வரும் உபாத்தியாயர்கள் முதலியவர்களும், சுற்றுப் பிரயாணங்கள் செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க ரெயில்வேயார் சித்தமாயிருக்கிறார்கள். குறைந்த விகிதங்கள், பிரயாண வசதிகள், போஜன ஏற்பாடுகள், இவைகளை ரெயில்வேயார் செய்து கொடுப்பார்கள்.

விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாஸத்துக்கு எழுதவும்.

சீப் கமர்ஷியல் ஸூபரிண்டெண்டெண்ட்
தென்னிந்தியா ரெயில்வே,
திருச்சினாப்பள்ளி.

Printed by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., G.T., & Published by Mr. M. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras. *Managing Editor:* V. B. Murthi, M.A.

தொகுதி 5] [பகுதி 5

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

விக்ரம ௵ ஆவணி மீ
AUGUST 1940

பிரசுரகர்த்தர்கள்:

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை:
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. பிள்ளையின் மனம் .... .... .... 161
—எம். சுப்ரமண்யம்

2. அமெரிக்காவை முதலில் கண்டவர் யார்? .... .... 167
—A. R. சேஷசாயி, M. A., L. T.

3. பிரபாத் .... .... .... .... 170
—N. சுப்ரமண்யம்

4. சாரணீயம்—அதன் உண்மையும் முறையும்-9 .... 176
—S. ஸ்ரீநிவாஸன்

5. குழந்தைகளின் சாலைக்கூட்டங்களும் சன்மார்க்க போதனைகளும் .... .... .... 181
—S. ஜகந்நாதன்

6. மதிப்புரை .... .... .... .... 193

7. பாலர் கல்வி சந்தாதார்களுக்கு விண்ணப்பமும் வேண்டுகோளும் .... .... .... .... 194

8. செய்தித் திரட்டு .... .... .... 195

9. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 200

14 SEP 1940

649

# பாலர் கல்வி

தொகுதி 5 | 1940 ஹு ஆகஸ்டு மீ விக்கிரம ஹு ஆவணி மீ | பகுதி 5

## பிள்ளையின் மனம்

[390-ம் பக்கத் தொடர்ச்சி.]

(M. Subramaniam, *Assistant, L.M.C., High School, Shiyali.*)

### சிந்தனைசக்தி

### புத்தியின் வளர்ச்சியும் சுயநோக்க முயற்சி முறையும்

### Growth of Reason and The Project Method

**குழந்தைகளின் கேள்விகள்**

எப்போதும் பற்பல கேள்விகளைக் கேட்பது குழந்தைகளின் இயல்பு. இவ்வியல்பானது அவர்களுடைய மனோ ஆவலையும், சுறுசுறுப்பையும் சிந்தனைசக்தியின் ஆரம்பத்தையும் பிரதானமாக வெளியாக்குகின்றது. மேன்மேலும் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தையும் தெரிவிக்கிறது. சிறுவர்களுடைய கேள்விகள் தவறாகவும், ஆபாசமாகவும் இருக்கலாம். நல்ல பாஷையிலும் நடையிலும் அமையாமல் இருக்கலாம். ஆயினும் இவ்விதமான மனப்பான்மையை வெளியாக்கும் ஆவலையும் உற்சாகத்தையும் அதட்டி அடக்கிவிடக் கூடாது. ஏனென்றால் இது அவர்களுடைய மனோ வளர்ச்சியை வேர் அறுத்து சிந்தனை சக்தியை நசுக்கிவிடுகிறது.

சிறுவர்கள் எப்பொழுதும் நூதனத்தில் ஆவல் கொண்டவர்களாய் இருப்பதோடு ஒரு பொருளைப் பற்றியும் ஒரு விஷயத்தைக் குறித்தும் ஒரு சம்பவத்தை ஞாபகத்தில் கொண்டும், பற்பல கேள்விகளை விநோதமாகக் கேட்பதுண்டு. இவ்விதமான கேள்விகள் பொதுவாகத் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும், பொருட்களில் காணும் காரண சம்பந்தங்களை அறிந்துகொள்ளவும் அல்லது அவற்றின் தொழில், விசேஷ குணங்கள், உபயோகங்கள் முதலியவற்றைக் கண்டுகொள்ளவும் கேட்கின்றார்கள். இப்படிக் கேள்விகளைக் கேட்கும்போதே அவர்கள் தாழ்ந்த

14588



தன்மையில் சிந்தனை செய்துகொண்டிருப்பதாகவே கருதவேண்டும். ஒருதரம் ஒருவர் தன் ஆறு வயதுள்ள குழந்தையை கால் நடை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்போது அது தன் தந்தையை நோக்கி “மாடுகளுக்கு ஏன் நோய் வருகிறது. அதை ஆஸ்பத்திரியில் எப்படி தீர்க்கிறார்கள், மருந்தை ஊற்றினால் அது என்னசெய்யும். மாடுகளுக்கு ஏன் கால்நடை என்று பெயர்.” என்று பற்பல கேள்விகளைக் கேட்டது. தகப்பனார் அக் குழந்தையின் மனோ இயல்பை கவனிக்காமல் அந்த அதனப்பிரசங்கி என்று நினைத்துச் சும்மா இருந்துவிட்டார்.

ஆனால் அங்கிருந்த டாக்டர் அதைத் தன் பக்கத்தில் அழைத்து “மாடுகளுக்கு மனிதர்களைப் போலவே ஆகாரத்தினாலும் ஜலத்தாலும் நோய் வருகிறது. ஒருவேளை தவிட்டால் இருக்கலாம். அதை மருந்து கொடுத்துப் போக்கலாம். மருந்து சுரமான உடம்பைச் சற்று தணித்துவிடும். சூடும் குறையும்” என்றார். இதைக்கேட்ட சிறுவன் உற்சாகமடைந்தான். போதுவாகக் குழந்தைகளுடைய கேள்விகள் “ஏன்” “எப்படி” “என்ன” என்னும் போக்கிலே அமைகின்றன. மேலும் பிள்ளைகள் தாராளமாய் விளையாடிக்கொண்டிருக்கும்போது, ஒருவருக்கொருவர் பற்பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டு அவற்றிற்கு வேண்டிய நியாயங்களையும் காரணங்களையும் அவர்களே தங்கள் இஷ்டம்போல் நினைத்துக்கொண்டு சொல்வதையும், அல்லது சில கற்பனை கதைகளை உண்டாக்கி அவற்றில் சந்தோஷப்படுவதையும் நாம் பார்க்கலாம். உலக விஷயங்களைச் சரியாக அறிந்து அனுபவப்படாத சிறுவர்கள் கேள்விகளைக் கேட்டுத்தான் சிந்தனைக்கு அனுகூலமான பொது எண்ணங்களையும், பொருட்களின் கருத்துக்களையும் பெருக்கிக்கொள்ளவேண்டும்.

### குழந்தைகளின் “ஏன்” என்னும் கேள்வின் கருத்து

குழந்தைகளுடைய “ஏன்” என்பதைப் பெரியோர்கள் பிரமாதமாக நினைத்துவிடக் கூடாது. அவ்விதம் நினைத்து அவர்களுடைய சந்தேகத்திற்கு ஆழ்ந்த காரணங்களைக் கருத்து உருவமாய்ப் பதிலளித்தாலும் அவர்களுக்குப் புரியாது. விஞ்ஞானிகளும், தத்துவ சாஸ்திரிகளும், இன்னும் மற்றோர்களும் வெகு ஆழ்ந்த கருத்தை உன்னி “ஏன்” என்று கேள்வி கேட்டுக்கொள்வதற்கும் சிறுவர்கள் கேள்விகளுக்கும் விசேஷ வித்தியாசம் உண்டு. குழந்தையின் கேள்வியாகிய “ஏன்” என்பது, தாங்கள் காண்பதையும், கேட்பதையும், செய்வதையும், அனுபவிப்பதையும், ஒருவிதமாகச் சம்பந்தப்படுத்தி தெரிந்து கொள்வதற்கே அமைகிறது போலும். இந்த “ஏன்” என்பது உண்மையில் “எப்படி” என்னும் கேள்வியின் கருத்தையே கொண்டுள்ளது. ஆகையால் சிறுவர்களுக்கு வேண்டியது பொருட்களின் மூலகாரணம் அல்ல. விரிவான அர்த்தமும் அல்ல சுருக்கமான தாத்பரியமும் அல்ல. பொருட்களின் மிகவும் விசேஷமான லக்ஷணங்களும் குணங்களும் அல்ல. அவர்களுடைய “ஏன்”



என்பதற்குக் கால் நடை ஆஸ்பத்திரி வைத்தியர் கூறியபடி ஏதாகிலும் ஒரு மேனோக்கான விஷய சம்பந்தமே. அதைத்தான் சிறுவர்களும் அறிந்து கொள்ளக்கூடும். ஆதலால் அவர்களுக்குத் தேவையானவை உண்மையான விஷயங்கள் **(Facts)**. போது முறைகளும் **(General Laws)** பிரதான காரணமும் **(Fundamental Cause)** அவர்களுடைய புத்திக்கு எட்டா. இத்தகைய உண்மையான விஷயங்களை அவர்களுக்குச் சற்று யூகமாகக் கொடுத்தால் வெகு எளிதில் “ஏன்” என்பதற்குப் பொருளைத் தெரிந்துகொண்டு, பின்பு அவர்களே உற்சாகமாக ஒருவாறான காரணங்களைக் கண்டுபிடிக்கக்கூடும். விசேஷமாய் ஆசிரியர்கள் அடிக்கடி சொல்லாமல் குறிப்பிட்டு உணர்த்திக்கொண்டே ஒரு வழி காட்டியைப்போல் துணை புரியவேண்டும். இப்படிச்செய்யும்போது அவர்களே கொஞ்சம் கொஞ்சமாய் பொருட்களைப்பற்றிய பொதுக் கருத்துக்களையும், சம்பந்தங்களையும் அறியக்கூடும்.

### கருத்துக்களின் இசைவும்-சம்பந்தமும்

எல்லாவற்றிற்கும் ஒருமுறை இருப்பதுபோல் கருத்து அமைதலுக்கும் ஒரு முறை உண்டு. பொருட்களைப்பற்றிய எண்ணங்கள் சிறுவர்களுடைய மனத்தில் வெவ்வேறு மூலமாக அமைந்தாலும் முதன் முதலில் அவை அவை ஒரு ஒழுங்காக அமைவது இல்லை. ஒருவிதமான “குழப்பமாகவே” **(Mass)** அமைகின்றன. பின்புதான் தெளிவும் ஒழுங்கும் ஏற்படுகின்றன. இப்படித் தெளிவடைந்த பின்புதான் பொருட்களின் கருத்துக்களும், சிந்திக்கும் முயற்சியும் உண்டாகின்றன. இத்தகைய முயற்சி உண்டாகும் சமயத்தில் சிறுவர்கள் அவசியமாகக் கருத்துக்களின் இயல்பான சேர்க்கையையும், சரியான சம்பந்தத்தையும் காண விரும்புகின்றார்கள். ஒவ்வொரு பொருளும் அதற்குத் துணையானவற்றையோ சம்பந்தப்பட்ட வற்றையோ உணர்த்துவதுபோல, ஒவ்வொரு கருத்தும் அதற்குச்சம்பந்தப்பட்டவை உணர்த்தி மனத்தில் அமைக்கிறது. இவ்வித கருத்து ஞாபகசக்தியின் உதவியால் தங்கி இருக்கிறது. பிற்காலத்தில் இக்கருத்துக்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி சிந்திக்கும்போது, பிற கருத்துக்களும் கூடவே வருகின்றன. உதாரணமாக ஒரு முழு எண், தசாம்சம், பின்னம், விகிதம், என்பவற்றைப்பற்றிய கருத்து ஒரு சிறுவனுடைய மனத்தில் சரியானபடி தங்கி இருந்தால், அவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பதோடு பொதுவான கருத்தையும் இயல்பாக அமைத்திருக்க வேண்டும். இக்கருத்துக்களின் உதவியால் வேறு சிலவற்றையும் அனுமானிக்கக்கூடும். “அன்பு” “தாய்” “மகள்” “மகன்” “தந்தை” என்னும் சொற்களில் அடங்கிய கருத்துக்களை இயல்பானமுறையில் தான் இணைக்கக்கூடும். மகள் பழத்தினிடம் அன்பு கொண்டுள்ளாள், என்று கூறுவது ஆபாசம். கண்டபடி சேர்ப்பது பொருந்தாது. இம்மாதிரியே ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிய சொற்களும் கருத்துக்களும் அமைகின்றன. பாட சம்பந்தமான உதா

ரணங்களும் இப்படி இருந்தால்தான் கருத்துக்களும் தேவையான விஷயத்தை யொட்டியே அமையும். உதாரணமாக நிலக்காற்று, கடற்காற்று, தேசப்பயிற்சி, மழைபெய்தல், மலைகளின் உபயோகம், முதலிய விஷயங்களை விவரித்துக் கூறவேண்டுமானால் அவற்றிற்குத் தகுந்த சொற்களும், கருத்துக்களும், ஒன்றோடு ஒன்று இசைந்து அமைந்தாலின்றி, விளக்க முடியாது. இவ்வாறே பாஷை, செய்யுள், பூமி சாஸ்திரம், உடல்நூல், கிருஷி சாஸ்திரம், தாவர சரித்திரம், நீதி சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், கணிதம், முதலிபனவும் பொதுவாக ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பினும், தனித்தனியாக இருப்பதற்குக் காரணம், அதன் தனிக் கருத்துக்களும் சொற்களுமேயாகும். எனவே சிந்தனைகுச் சாதகமாயிருப்பது, ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிய தொடர்பான கருத்துக்களும் சொற்களுமேயாம்.

ஆசிரியர்கள் என்ன செய்யவேண்டும்.

சிறுவர்களுடைய, விஷயங்களைக் கருத்தையொட்டி சரியான முறையில் சம்பந்தப்படுத்தி விட்டால் வியாசம் எழுதும் சக்தி அவர்களுக்கு நன்றாய் அமையும் இதற்காக ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை உற்று நோக்கச் செய்வதோடு, கண்டதைக் கருத்தின் பிரகாரம் வகுத்துக் கூறவும் எழுதவும் செய்யவேண்டும். வியாசம் எழுதுவது சிந்தனையின் ஒரு பாகத்தைக் காட்டுவதால், ஆசிரியர்களும் சிறுவர்களோடு வியாசம் எழுதுவதற்குமுன், அளவளாவிக்கொண்டே குறிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி, ஒரு சம்பாஷணையோ, பேச்சோ (Talk) நிகழ்த்த வேண்டும். அப்பேச்சில் தொடர்பான விஷயங்களை முறைப்படி பிரித்து அவர்களுடைய அனுபவத்தையும் அனுசரித்து, எழுதச் செய்வது நலமாகும். சிறுவர்கள் சற்று உத்தேசமாகக் கூறினும், அதை அசட்டை செய்யாமல் திருத்தி அமைக்கவேண்டும். பற்பல கருத்துக்கள் எப்போதும் ஒரு நிலைமையை ஒட்டியே தோன்றுவதாலும், நிலைமைகளையும், சந்தர்ப்பங்களையும் சரியாக அர்த்தங்கொள்ளும்படி செய்ய வேண்டும். கருத்து நன்றாக அமைதலுக்கும் அதை ஒன்றாக தகுந்த முறையில் இணைத்துச் சிந்திப்பதற்கும் விளக்கவைத்தல் (Explanation) அவசியமாகும்

கருத்தமைப்பும்—விளக்குதலும்

கண்ட பொருளை விளக்குவதால் அதனைப்பற்றிய கருத்தும் காரண சம்பந்தமும் நன்றாகத் தெரிகின்றன. சிறுவர்கள் எவ்வாறு விளக்கிக் காட்டுகிறார்கள். எண்ணங்களையும் பொருட்களையும் கொண்டு சூக்ஷ்மமாக (abstract) விளக்கிச் சொல்லாமல், சாதாரண சம்பவங்களையும், உண்மை விஷயங்களையும் ஸ்தூலமாகக்கொண்டு விளக்குகிறார்கள். உதாரணமாக ஓர் ஆசிரியர் ஒரு மாணவனை நிழல் ஏன் ஏற்படவேண்டும் என்று கேட்டார். "வெளிச்சம் செல்லும் வழியில் அதைத்தடுக்க ஒரு



பொருளை வைத்துவிட்டால் நிழல் உண்டாகும்" என்று அவன் கூறினான். எனவே நிழலுக்குக் காரணம் ஸ்தூலமான பொருள் (Concrete) என்பதே, அவன் கருத்து. காயம்பட்ட ஒருவனைப் பார்த்த ஒரு குழந்தை தன் தாயாரோடு அதைப்பற்றி பற்பல பேச்சுக்கள் பேசி கடைசியில் அதிகம் இரத்தம் வந்ததென்றும் இதற்குக் காரணம், கல் தடுத்தல்தான் என்றும் கூறிற்று. எனவே கல்தடுத்தல், காயம், இரத்தம் என்பதே அப்பிள்ளைக்குத் தெரிந்தது. உடல் இயலின் தத்துவம் நன்றாக அறிந்து காயத்தை விளங்க வைத்தலானது உயர்ந்த தன்மையைச் சேர்ந்தது. இப்படி விளக்குவதால் அவர்களின் புத்தி எந்த நிலையில் இருக்கிறது என்பதும் தெரிகிறது.

புத்தியின் தன்மை என்ன ?

(Reasoning Power) மனிதனுக்கும் இதர ஜெந்துக்களுக்கும் உள்ள வித்தியாசம் அவனுடைய புத்தியே. இச்சக்தி ஒன்றை உண்டாக்குவதில்லை. ஏற்கெனவே பொருட்களைப்பற்றிக் கருத்தாக அமைந்துள்ளவற்றை ஆராய்ந்து, காரண காரிய சம்பந்தத்தில் முறையாக்குவதும், அல்லது தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றைக் கண்டுபிடிப்பதும் இச்சக்தியின் தன்மையாகும். இரண்டு அல்லது மூன்று தீர்மானங்களை யோசித்துப் பார்த்து அவற்றிலிருந்து புதிதான தீர்மானத்தை அனுமானித்துச் சொல்வதும் புத்தியின் சக்தியினால்தான். மலையருகில் களிமண்பூமியில் ஓர் வீடு கட்டப்பட்டால் அது ஒதமாகவே இருக்கும் என்பதை அனுமானிக்கலாம். மரத்தின்மேல் கல் எறிந்தால் பழம் விழும் என்றும், புகைவதைக் கண்டால் அங்கு நெருப்பு இருக்கவேண்டுமென்றும், அனுமானிப்பது புத்தியின் வேலை. மேலும் புத்தியானது கொடுக்கப்பட்ட ஒன்றையே (Data) ஆதாரமாகக்கொண்டு ஆராய்கிறது. இப்படி ஆராய்வதில் இரண்டு விதம் உண்டு. பற்பல தனிப் பொருட்களை உற்று நோக்கி ஆராய்ந்து, அறிந்து ஒரு பொது முறைக்கு வருவது "உய்த்தறிதல்" அல்லது "காண்டல் முறை அறிவு" (Induction) என்று சொல்லலாம். பொது முறைகளில் அடங்கியுள்ள கருத்துக்களையும், உண்மைகளையும் ஆதாரமாகக் கொண்டு அவற்றின் மூலமாய் ஒரு குறித்த பொருளையொட்டி அனுமானத்தைப் பெறுவது "பகுத்தறிதல்" அல்லது "கருத்து முறை அறிவு" (Deduction) என்று சொல்லலாம். ஆகவே சிந்தனா சக்தியின் ஒரு பிரதான அம்சமாகிய புத்தியானதுஇருவிதங்களால் உண்மைகளை அறிய முயல்கிறது.

உய்த்தறிதல் என்றால் என்ன ?

உய்த்தறிதல் என்பதற்கு ஆராய்ந்து அறிவது என்று விரிவாகப் பொருள் கொள்ளலாம் உதாரணமாக ஒரு குழந்தை தன் பம்பரத்தை ஆகாயத்தில் எரியும்போது அது கீழே விழுகிறதைக் கவனிக்கிறது. இப்

படியே கல், விளையாட்டுப் பொருள்கள், கத்தி, முதலியனவும் எறிந்தால் கீழே விழும். இப்படியே பற்பலதரம் பற்பல பொருட்களை எறிவதனால் பூமியின்மேல் விழுவதைக் கண்ட சிறுவர்கள், கனமான வஸ்துக்களை எறிந்தால் அவை கீழே விழும் என்பதை அறிந்துகொள்ளுகிறார்கள். இதை மெல்ல மெல்ல ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். பின்பு அவற்றில் அடங்கி இருக்கும் ஒரு பொது உண்மையைக் கண்டு முறைப்படுத்துகிறார்கள். இவ்வுண்மையாவது “எல்லா ஜடவஸ்துக்களும் விட்டு எறிந்தால் பூமியை நோக்கித்தான் விழவேண்டும்” என்பதே. இது அவ்வளவாகச் சரியான உண்மையாகாவிடினும், இதில், காண்டல், பரிசோதனை, அனுபவம் முதலியன அடங்கி இருக்கின்றன. உய்த்தறிதல் முறைப்பிரகாரம் ஆசிரியர்களும் வகுப்பில் சில பாடங்களைப் போதிக்கிறார்கள். உதாரணமாக “எல்லா உலோகங்களும் காய்ச்சப்பட்டால் விசாலிக்கும்” என்பதை நிரூபனம் செய்ய பரிசோதனை செய்கிறார்கள். இரும்பு, பித்தளை, செப்பு முதலியவற்றை நெருப்பில் இடுகிறார்கள். உலோகமும் சூடு ஏற ஏற விசாலிக்கின்றது. இதைச் சிறுவர்கள் கவனிக்கிறார்கள். பின்பு ஆசிரியர் அவர்களை அழைத்து கண்டதை பொது முறையாக அமைக்க விரும்புகின்றனர். இது சரியா? சிறுவர்கள் பரிசோதித்துக் கண்டறிந்த உலோகங்கள் மட்டில் இந்த உண்மை பொருந்தும், “எல்லா உலோகங்களும்” என்று சொல்வதற்கு நியாயம் இல்லை. ஏனென்றால் அவர்கள் பரிசோதனை செய்தது சில உலோகங்களைதான். போதுமான சான்றும், நிரூபணைகளும் இல்லாமல் அவசரப்பட்டு முடிவை தீர்மானிப்பது சரியானபடி புத்தியாகாது. காரணங்களையும் ஆராயவேண்டும்.

(தொடரும்)

# அமெரிக்காவை முதலில் கண்டவர் யார்?

A. R. Seshasayee M.A., L.T., *Asst., E. R. High School, Trichinopoly.*

இத்தாலி தேசத்தவனான கொலம்பஸ் (Columbus) அமெரிக்கா எனும் புது உலகத்தை (New World)க் கண்டுபிடித்ததாக நாம் எல்லோரும் சொல்லுகிறோம். ஆனால் அது உண்மையன்று. கொலம்பஸ் கண்டுபிடித்ததற்கு 500 வருஷங்களுக்கு முன்பாகவே ஐரோப்பாவைச் சேர்ந்த ஸ்காண்டினேவியா (Scandinavia) விலிருந்து கப்பல்களில் புறப்பட்ட நார்ஸ் ஜாதியினர் (Norsemen) அமெரிக்காவை அடைந்து க்ரீன்லாந்து, லாப்ரடார், நோவாஸ்கோஷியா முதலிய விடங்களைக் கண்டனர் என அறிகிறோம். கி.பி. 986-ல் ஹெர்ஜுல்ப்ஸன் (Herjulfsson) எனும் ஒரு நார்ஸ் ஜாதியினன் கொள்ளையடிக்கும் நோக்குடன் கடலில் சுற்றுகையில் அமெரிக்காவில் லாப்ரடாரை (Labrador) அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. பிறகு கி. பி. 1000-ல் அதிர்ஷ்டசாலியான லிப் (Leif the Lucky) என்னும் மற்றொரு நார்ஸ் மனிதன் வட அமெரிக்காவின் வடகிழக்குக் கரையைச் சேர்ந்ததாகத் தெரியவருகிறது. இதற்கு ஆறு வருஷங்களுக்குப் பின்னர் தார்பின் கார்ல்ஸெப்னி (Thorfinn Karlsefne) என்னும் வேறொரு நார்ஸ் ஜாதியினன் சில மனிதர்களுடன் அமெரிக்காவில் குடியேறியதாகவும் பிறகு ஆங்குள்ள சுதேசமக்களின் (Red Indians) நிர்ப்பந்தத்தினால் அதைவிட்டு ஐரோப்பாவுக்கு திரும்பியதாகவும் அறிகிறோம். ஆகவே ஆதியில் நார்ஸ் ஜாதியினர் அமெரிக்காவை கண்டுபிடித்தனர் என்பது இனிது விளங்கும்.

எனினும் 15-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையுள்ள மத்தியகாலத்தில் (The Middle Ages), ஐரோப்பிய மக்கள் அஞ்ஞானம் எனும் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தமையால் அமெரிக்காவைப்பற்றி முற்றிலும் மறந்தனர். ஆகவே அக்கண்டத்தை மீண்டும் கண்டுபிடித்து உலகினருக்குத் தெரிவிக்கும் பெருமை இத்தாலிய தேசத்தவனான கொலம்பஸுக்கே உரியதாகும். கொலம்பஸ் இத்தாலியிலுள்ள ஜினோவாவில் (Genoa) கி. பி. 1447ல்- பிறந்தான். சிறு பிராய முதற்கொண்டே கடற்கரைக்குச் சென்று ஆங்குப் போந்துள்ள பலதேசத்து மாலுமிகளுடன் அளவளாவி பல்வேறு விஷயங்களைப்பற்றி அறிந்து கொள்வது வழக்கம். கடற் பிரயாணம் செய்து வந்ததோடு அது சம்பந்தமான பல நூல்களையும் படிக்கலானான். உலகம் உருண்டை வடிவமானதெனத் துணிந்து அளகாபுரிக்கு நிகரான அம்பொன் கொழிக்கும் இந்தியாவுக்கு (ElDorado)ச் செல்வதற்கான புதிய கடல் மார்க்கமொன்றைக் கண்டு பிடிக்கக் கருதினான்.

ஏற்கெனவேயுள்ள பழைய மார்க்கங்களிருக்கக் கொலம்பஸ் ஒரு புதிய மார்க்கம் கண்டு பிடிக்க முயன்றதன் காரணம் பின்வருமாறு. இதுகாறும் ஐரோப்பியர் ஆசியா மைனர் வழியாகவும் செங்கடல் வழி

பாகவும் கீழ் நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர். ஆனால் கி. பி. 1453-ல் துருக்கியர் கான்ஸ்டான்டினோபிளை ரோமானியரிடமிருந்து கைப்பற்றி பால்கன் தீபகல்பத்தில் ஆட்சி கொண்டமையால் ஐரோப்பியர் மத்ய தரைக்கடல் மார்க்கமாகக் கீழ் நாடுகளுடன் வாணிபம் செய்து வந்ததை அவர்கள் தடுத்து விட்டனர். ஆகவே ஐரோப்பியர் இந்தியாவுக்குச் செல்வதற்கான வேறு மார்க்கங்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அப்போதுதான் கொலம்பஸ் என்னும் இத்தாலியன் ஸ்பெயினிலிருந்து மேற்கு முகமாகவும், வாஸ்கோடகாமா என்பவன் (Vasco Da Gama) போர்ச்சுகலிலிருந்து கிழக்கு முகமாகவும் புறப்பட்டு இந்தியாவுக்கு ஒரு புது வழியைக் காணத் தலைப்பட்டனர்.

முதன்முதலாகக் கொலம்பஸ் போர்ச் சுகீசிய மன்னனான ஹென்ரியை (Henry the Navigator) பொருள் உதவி புரியுமாறு வேண்டினன். ஆனால் ஹென்ரி தானே ஒரு கடல் மார்க்கம் கண்டு பிடிப்பதில் முனைந்திருந்தமையால் கொலம்பஸுக்கு உதவியளிக்க மறுத்து விட்டான். பிறகு கொலம்பஸ் இங்கிலாந்து அரசனான ஏழாம் ஹென்ரியிடம் சென்று தன் யோசனையைக் கூறினான். அம்மன்னனும் அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கவில்லை. பிறகு கொலம்பஸ் ஸ்பெயின் அரசனான பர்டினண்டையும் அவனுடைய மனைவியான இஸபெலாவையும் கண்டு தன்னுடைய கருத்தை அறிவித்தான். ஆனால் பர்டினண்டு அப்போது மூர் (Moors) எனும் முகம்மதியர்களை ஸ்பெயினிலிருந்து விரட்டுவதில் ஈடுபட்டிருந்தமையால் கொலம்பஸுக்கு உதவியளிக்க உடனே முன்வரவில்லை. கடைசியில் இராணியான இஸபெலா (Isabella) தன் நகைகளை விற்று கொலம்பஸுக்கு 3 கப்பல்களையும் 120 மாலுமிகளையும் கொடுத்து உதவினாள்.

இவைகளுடன் கொலம்பஸ் கி. பி. 1492ல்- ஸ்பெயின் தேசத்து பாலாஸ் (Palos) துறைமுகத்திலிருந்து புறப்பட்டு மேற்குத் திசை நோக்கிக் கப்பல்களைச் செலுத்திச் சென்றான். பல வாரங்கள் சென்றனவாயினும் நிலத்தின் அடையாளம் ஒன்றும் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. இதைக்கண்டு அவனிடம் வெறுப்புற்ற சில மாலுமிகள் அவனைக் கடலில் தள்ளிக் கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினர். ஆனால் கொலம்பஸ் தன் தைரியத்தையும் ஊக்கத்தையும் சிறிதும் கைவிடாது அவர்களை நயத்தினாலும் பயத்தினாலும் தன்னுடன் செல்லும்படி செய்தான். சின்னாட்களுக்குப் பின் ஆகாயத்தில் பறந்து சென்ற புள்ளினங்களினாலும், கடலில் மிதந்து வந்த செடி கொடிகளினாலும், பூமி அண்மையிலிருக்க வேண்டுமெனத் துணிந்தான் கொலம்பஸ். ஒரு நாள் வைகறைப் பொழுதில் தங்களுக்கு முன்பாகச் சிறிது தூரத்தில் வனப்பு வாய்ந்த பூமி யிருப்பதாக கொலம்பஸும் அவனுடைய மாலுமிகளும் கண்டார்கள். உடனே கொலம்பஸ் காலம் தாழ்த்தாது கரை சேர்ந்து அத்தீவை ஸ்பெயின் அரசனின் பெயரால் பிடித்துக்கொண்டான். பின்பு அதற்குப் பரிசுத்தமான இரட்சகர் எனும் பொருள்படும் ஸான்ஸால்வ



டார் (San Salvador) என்னும் பெயரிட்டான். அத்தீவில் வசித்து வந்த செந்நிற இந்தியர்கள் (Red Indians) ஐரோப்பிய மாலுமிகளை வியப்புடன் நோக்கி அவர்கள் ஆகாயத்தினின்று வெண்புறாக்கள் மீது கீழிறங்கி வந்த தேவர்களோவென்றும் ஐயுற்றார்கள். ஏனெனில் வெள்ளைத் துணிகளைக் கொண்டு காற்றினாலியங்கியப் பாய் மரக்கப்பல்கள் (Caravels) அவர்களுக்கு வெள்ளிய இறக்கைகளோடு பறந்து வந்த புறாக்கள் போல் தோன்றினவாம். கொலம்பஸ் சிவப்பு இயந்தியர்களுக்குக் கண்ணாடி, உருத்திராட்சங்கள், முதலியன கொடுத்து அவர்களை மகிழச் செய்தான். அவர்கள் நாகரீக மற்றவர்களாகையால் தங்களது சரீரங்களை வெள்ளை, சிவப்பு முதலான வர்ணங்கால் சித்தரித்துக் கொண்டிருந்தனர். கொலம்பஸ் பிறகு க்யூபா (Cuba), ஹெய்டி (Haiti), க்ரூகட் ஐலந்து (Crooket Island) முதலிய வேறு தீவுகளையும் கண்டு ஸ்பெயினுக்குத் திரும்பினான். அப்போது ஸ்பெயின் அரசனான பர்டினண்டும் (Ferdinand), அவனுடைய மனைவியான இஸபெலாவும் (Isabella), கொலம்பஸ் புது உலகத்திலிருந்து கொணர்ந்த பொருள்களைப் பார்த்தும் அவன் சொல்லிய விநோதக் கதைகளைக் கேட்டும் ஆச்சரியமும் அகமகிழ்வும் கொண்டார்கள்.

இதற்குப் பிறகுக் கொலம்பஸ் இன்னும் மூன்று முறை மேற்கே சென்று வேறு பல தீவுகளையும் கண்டு பிடித்தான். இரண்டாவது பிரயாணத்தில் ஜமைக்காத் தீவையும் (Jamaica) மூன்றாவது பிரயாணத்தில் தென் அமெரிக்காவில் ட்ரினிடாட்டை (Trinidad) யும் கண்டு பிடித்து அவைகளை ஸ்பெயின் அரசனுக்கு உரிமையாக்கினான். என்றாலும் இறுதி காலத்தில் கொலம்பஸ் அரசனின் ஆதரவிழந்து அவமானத்துக்குள்ளானான். கி. பி. 1506-ல் வல்லடாலிட் (Valladolid) எனும் ஊரில் வறியனாய்க் காலங்கழித்து உயிர்நீத்தான். புது உலகத்தைக் கண்டு பிடித்தானெனினும் கொலம்பஸ் ஒரு பெரிய தவறு செய்தான். தான் கண்ட நாடுகள் எல்லாம் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த பிரதேசங்களெனக் கருதினான் கொலம்பஸ். ஆனதுபற்றியே புது உலகம் அவனது பெயரால் அழைக்கப்படாமல் போயிற்று. கி. பி. 1499-ல் அமெரிகோ வெஸ்புஸி (Amerigo Vespuci) என்னும் மற்றொரு இத்தாலியன் (பிளாரன்ஸ் (Florence) நகரைச் சேர்ந்தவன்), கொலம்பஸ் கண்டு பிடித்த நாடுகளுக்குச் சென்று உண்மையை யறிந்து கொலம்பஸ் செய்த பெரும் தவறை உலகினருக்கு எடுத்துக் காட்டினான். கொலம்பஸ் கண்டு பிடித்த நாடுகள் ஆசியாவைச் சேர்ந்தவை யல்லவென்றும் அவை ஒரு புதிய கண்டத்தைச் சார்ந்த நாடுகளென்றும் முதன் முதலில் அறிவித்ததால் அவனது பெயராலேயே அப்புது உலகம் அமெரிக்காவென அழைக்கப் படலாயிற்று. அன்று முதல் கொலம்பஸ் தவறாக 'இந்தியா' எனக்கருதிய தீவுகளை கிழக்கிந்திய தீவுகளினின்றும் வேற்றுமைப் படுத்துவதற்காக அவைகளை மக்கள் மேற்கிந்திய தீவுகளென வழங்கி வருகிறார்கள்.

# பிரதாப்*

**N. Subarmanyam**, *P. S. High School, Mylapore*

## அங்கம் 1. காட்சி 1.

(இடம்· மலைப்பிரதேசம்)

[மலைப் பாங்கான பிரதேசத்தில் ஒரு பாறையின்மீது சாய்ந்துகொண்டு களைப்புற்றிருக்கிறான் சித்தூர் அரசன் விஜயவர்மன். இருட்டும் சமயம். மழை சோ வென்று பெய்துகொண்டிருக்கிறது. காட்டாறுகள் பிரவாகத்துடன் சப்தமிட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன ஆறு ஒன்றின் ஓரமாக பிரதாப் சிங் கழிபூன்றி மெல்ல ஆற்றைக் கடந்துகொண்டிருக்கிறான்.]

பி. அப்பாடா! இப்பாறை நம்மைக் காப்பாற்றிற்று. ஆஹா! அங்கு யார்? இப்பிரதேசத்தில் தனியே ஒருவர் நிற்கிறாரே? ஐயா பயப்படாதேயும். வழி தப்பிப் போயிற்றோ? இந்தாரும் இதைச் சாப்பிடும். களைப்பு நீங்கும். (தேத்தண்ணீர் கொடுக்கிறான்) இப்போ தேவலையா?

வி. அம்மாடி, கொஞ்சம் தேவலை.

பி. வழி தப்பி வந்தீரோ?

வி. ஆம்.

பி. நீங்கள் எங்கே போறேள்?

வி. சித்தூருக்கு.

பி. நான் உங்களை அங்கு கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்.

வி. அப்பா! நீ அறியாப் பாலகனாச்சே.

பி. வழி எனக்கு தெரியும். நான் வந்த வழியை நீங்கள் கண்டுபிடிப்பது ரொம்ப கஷ்டம்.

வி. என்ன? நீ வந்த வழியா? வெகு தூரத்திலிருந்து வருகிறாயோ?

பி. ஆம். பெரியோரே! நான் ஆபூ மலையிலிருந்து வருகிறேன்.

வி. துணையில்லாமலா?

பி. கடவுளைத் தவிர வேறு துணை கிடையாது.

வி. புயலைக் கண்டால் உனக்கு பயமில்லையா?

பி. தூணிலும் உள்ளார் துரும்பிலும் உள்ளார்
நாணிலும் ,, வில்லிலும் ,,
புயலிலும் ,, புனலிலும் ,,
ஐயனில்லாவிடம் ஏது புகல்வீர்.

வி. நீ குழந்தையாச்சே! இவைகளை எல்லாம் கண்டால் பயமில்லையா உனக்கு?

---

* With the kind permission of A. I. R., Madras.



பி. குழந்தையுடன் இருப்பார் கடவுள் என்பது தாங்கள் அறியாததா என்ன?

வி. நிச்சயமாக வழி தெரியுமோ உனக்கு?

பி. அதோ போகும் சிற்றாறின் மார்க்கந்தான் நாம் செல்லவேண்டும்.

வி. என்னை ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தாயானால் உனக்கு நான் நிறையப் பணம் தருவேன்.

பி. பணமில்லாமலே கூட்டிச் செல்லுகிறேன்.

வி. (ரூபாயை நீட்டி) இந்தா! இதை வைத்துக்கொள். இதைப்போல் பத்து மடங்கு சித்தூர் சேர்ந்ததும் தருகிறேன். என்ன! ஏன் வாங்கிக்கொள்ள மறுக்கிறாய், வாங்கிக்கோ.

பி. மாட்டவே மாட்டேன். வேண்டாம்.

வி. வாங்கிண்டுதான் ஆகணும்.

பி. முடியவே முடியாது.

வி. ஏன்?

பி. காசு என்றால் மோச மய்யா
ஆசையும் காட்டாதீர் நீரே
அன்புக்கும் விலையுண்டோ
அறியீரோ நீங்கள் இதை
அன்பினால் வழிகாட்டும்
எனக்குமோ இக்காசு
புண்ணிய மூர்த்தியே
பொறுத்தருள் விர்நீரே!

வி. அப்பா! நீ பெரிய மேதவியாக இருக்கிறாயே! உனக்கு இதெல்லாம யாரப்பா சொல்லிக்கொடுத்தது?

பி. என்னுடைய தகப்பனார்.

வி. அவர் சித்தூரிலா வசிக்கிறார்?

பி. இல்லை. இம்மலைப் பிரதேசத்தில்.

வி. என்ன! மலைவாசியா? அவர் நகரத்திலல்லவோ வசிக்கவேண்டும். லாபமுண்டு பட்டணத்தில் வசித்தால்.

பி. லாபமில்லை, நஷ்டமுண்டு.

வி. நஷ்டமேன்?

பி. இழப்பார் அவர் வீர சுதந்திரம்.

வி. உண்மையாகவா?

பி. ஆம். ஐயனே எனக்கும் அதைப் புகட்டி யிருக்கிறார்.

வி. அவர் பேர் என்னவோ?

பி. இதுதான் சித்தூருக்குச் செல்லும் மார்க்கம்.

வி. உங்க அப்பா பேர் என்ன?

பி. நாழியாகிறது. நாம் வெகுதூரம் செல்லவேண்டும்.

வி. என்ன பையா! நான் சொல்லுவது உன் செவியில் ஏறவில்லையா? உங்க அப்பாவின் பேரைச் சொல்லு.

பி. நான் அவர் பேரை உங்களிடம் கூறமாட்டேன்.
வி. சொல்லமாட்டாயா? ஏன்?
பி. அவருடைய விரோதியாக இருக்கலாம் நீங்கள்.
வி. நண்பனாகவும் இருக்கலாமே.
பி. இருக்கலாம். ஆனால் நீர் அவருடைய விரோதி என்றால்———. சரி; அது எப்படியிருந்தால் என்ன? உங்களை பத்திரமாகச் சித்தூருக்கு அழைத்துச் செல்கிறேன். கூடவறேளா?
வி. உங்க அப்பா பேர் எனக்கென்னத்துக்கு? கைகொடு. நாமிருவரும் எதிரிகளல்லவே.
பி. எனக்கு எதிரியே கிடையாது.
வி. சரி. போ!
பி. இப்போ இறங்கும்போது நீங்க கழியை நன்னா ஊனிண்டு ஜாக்கிரதையா நடங்கோ. வாங்கோ! வாங்கோ!
வி. என்ன! இச்செங்குத்தான பாறையின் மார்க்கமாகவா!
பி. ஆம். ஆயினும் பயப்படவேண்டாம். நான் முன்னாலே போகிறேன், நீங்க பின்னாலேயே வாங்கோ!

## காட்சி—2.

[இடம். சித்தூர் கோட்டை.]

பி. இதுதான் சித்தூர் கோட்டை வாயில் (திரும்பிச்செல்ல முயலுதல்).
வி. பையா! நில்லு, நில்லு.
பி. இல்லை! இல்லை! நான் அவசரமாகப் போகணும். எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.
வி. யாரப்பா காத்துண்டிருப்பார்! இங்கே வா, சொல்லு. நான் பணக்காரனுக்கும். உனக்கு ரொம்ப பணம் தரேன்.
பி. ஸ்வாமி!

கால் நொந்தேன் நொந்தேன் கடுகி வழி நடந்தேன்
யான் வந்த தூரம் எளிதன்று'—

சித்தூராரே! பொழுதும் போய்விட்டது. நான் வெகுதூரம் போகவேண்டும். (போகத் திரும்புதல்)
வி. பையா! நில்லு, நான் உன்னை சிக்ஷிக்கவும் கூடும்.
பி. வழி தப்பி வந்த உம்மைக் களைப்பாற்றி இங்கு கொண்டு வந்து சேர்த்ததின் பலனா?
வி. அடபயலே! தெரியுமா நான் யாரென்று
பி. தெரியாது, தெரியவும் வேண்டாம்.
வி. ஏன் உங்க அப்பா பேரை சொல்லமாட்டேன் என்கிறாய். சீக்கிரம் பதில் சொல்.
பி. உங்களுக்கு அவர் பேர் எதுக்காகத் தெரியணும்
வி. நீ எனக்கு வழிகாட்டியதற்காக, அவரைச் சந்தித்து, அவரை வாழ்த்தலாமென்றே.



பி. நான் செய்த இந்த அற்பக்காரியத்திற்காக நீர் அவரிடம் வந்தனம் செலுத்தினால் அவர் ஒருபொழுதும் உம்மை விரும்பார்.
வி. என்ன! அற்பக்காரியமா? விரும்பாரா? ஏன்? என் உயிரை அல்லவோ நீ காப்பாற்றியிருக்கிறாய்.
பி. என்னை ஒன்றும் நீங்கள் கேட்கவேண்டாம். நான் செல்ல உத்தரவளியும்.
வி. உன் பிதாவின் பேரை அறியாமல் நான் உன்னை விடமாட்டேன். (கதவைத் தட்டுகிறார்)

த. யாரங்கே?
வி. விஜயவர்மன்.
பி. (ஆச்சர்யமுற்று தனக்குள்) என்ன! சித்தூர் அரசன் விஜயவர்மனா!
வி. தர்வான்! இவனைப் பிடித்துக்கொள். ஏ! பையா! உன் பிதாவின் பேரைச் சொல்.
பி. மாட்டேன்.
வி. நான் உத்தரவிட்டால் உன்னை சிறைச்சாலையில் அடைத்து விடுவான் இவன். இப்பொழுதேனும் கூறு.
பி. முடியாது,
வி. உன் கழுத்தைத் திருகச் சொல்வேன். சீக்கிரம் சொல்.
பி. உயிர் போயினும் உரையேன் அவர் பேரை.
வி. தர்வான்! இவனைக் காவலில் வை.
வி. (தனக்குள்) ஆஹா! என்மனம் ஏனோ தள்ளாடுகின்றது. இப்பையனுக்கு விலங்கிடா விட்டால் என் ராஜ்யத்தையே அபகரிப்பான் போல் இருக்கிறதே. பயமென்றால் என்ன என்பதை இப்பொழுதே உணர்ந்தேன். இப்பையனைக் கண்டால் ஏன் என் உடலும் உயிரும் ஒருங்கே நடுங்கவேண்டும்? என்ன தைரியம்! மமதை! இவனைப் பெற்ற பிதாசூரனே! அவசியம் அவனையும் பிடித்துத்தான் ஆகவேண்டும்.
தர்வான்! தர்வான்!
த. மஹாராஜ்! தங்கள் சித்தம்.
வி. சிப்பாய்களைக் கூப்பிடு. (சிப்பாய்கள் வருதல்.)
வி. யாருக்கும் அஞ்சாத கிங்கிலியர்காள் உஷார்!
பாரிலுள்ள மலைகளை எல்லாம் சுற்றிப்பாருங்கள்.
தடதடவென்று தாண்டிச் சென்று தகப்பனைத் தேடுங்கள்.
கடகடவென்று ஓடிப்போயே கட்டி வாருங்கள்.
பிள்ளையைத்தேடும் பேர்வழியைப் பிடித்து வாருங்கள்.
இல்லையென்று சொன்னாலவனை இழுத்து வாருங்கள். (யாருக்கும்)
(சிப்பாய்கள் செல்லுதல்.)
வி. தர்வான்! இத் தலைப்பாகையை அப்பெரிய மைதானத்தின் நடுவில் கோலொன்றின் உச்சியில் மாட்டிவை. இதை யாவரும் வணங்க வேண்டுமென்று பறை சாற்று. அப்படி வணங்காமல்

ஒருவன் இருந்தானே யானால் அவனை இங்கு இழுத்துவா தக்கபடி சிக்ஷிப்போம்.

த. சித்தம் மஹா ராஜா.

## காட்சி 3

### இடம்: பெரிய மைதானம்

(தர்வான் ஜயவீரனை இழுத்து வருகிறான்.)

வி. யார் இவன்?

த. தங்கள் தலைப்பாவை வணங்காத தடியன்.

வி. டே! வணங்காமுடி மன்னா இவ்விதம் நீ அலக்ஷியம் செய்ததின் காரணம் என்னவோ?

ஜ. என்னுடைய மகனைத் தேடி தேடி அலைந்தேன். அவனையும் காணோம். நீர் என்னை என்ன வேண்டுமானாலும் செய்துக்கொள்ளலாம். இனி நான் இவ்வுயிரை யாருக்காக காப்பாற்ற வேண்டும்?

வி. என்ன? உன் மகனா? அவன் எப்படி இருப்பான்?

ஜ. அவனையோ இழந்தேன். பலவாறாக கூறி என்ன பயன்?

வி. என்னிடம் கூறலாகாதா ?

ஜ. கூறி என்ன பயன்? என் வருத்தத்தை அதிகப்படுத்தாதீர்.

வி. சரி! உன் பேயரன்ன ?

ஜ. ஜயவீரன்

வி. நல்ல பேர், வெகு நல்ல பேர், உனக்கென்ன தெரியும்?

ஜ. வில்லம்பு தாங்கும் வீரன் யான்!

வி. ரொம்ப சரி! நீ ஒரு நிபந்தனைக்கு உட்பட்டா யானால், தப்ப வழியுண்டு.

ஜ. அந் நிபந்தனை என்ன?

வி. சிறுவன் ஒருவன் தலையில் பழமொன்றை வைத்து அவனை நூறு கஜ தூரத்தில் நிறுத்துவேன். உன் அம்பினால் அப் பழத்தை இரண்டு துண்டாக்க வேண்டும் தவறிப் போய் பையனை கொன்றாயானால் உன் உயிரும் போய்விடும். பழத்தை இரண்டு துண்டாக்கினால் சுயேச்சையாகப் போகலாம் நீ.

ஜ. அங்ஙனமே அரசே! அப்பழத்தைக் காட்டும்.

வி. பழம் இதோ இருக்கிறது பார்.

ஜ. வேண்டாம் இது மிகச் சிறியது. பெரிய பழமொன்று கொடும்.

வி. சரி இதை எடுத்துக்கொள்

ஜ. பையன் எங்கே!

வீ. தர்வான், அப்பையனை இங்கு அழைத்துவா.

த. சித்தம். மஹாராஜ். (பையன் வருவதை ஜயவீரன் பார்த்தல்)

ஜ. (தனக்குள்) ஐயோ நானிழந்த மகனல்லவோ பிரதாப்! நீ ஏன் இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாய், என் செய்வேன் ஈசனே சோதனை செய்தது போதும் என்னுடல் ஆடுதே உயிரும் வாடுதே எங்கனம் நான் இப்பழத்தின் மீது அம்பு எய்வேன்!

(பிரதாப் ஓடி வந்து ஜயவீரனைக் கட்டிக்கொள்கிறான்)



பி. அப்பா! தாங்களும் இக்கொடியோன் கையில் சிக்கிக் கொண்டீகளா? நடந்தவை யாவும் நன்கு அறிந்தேன். என் பொருட்டு தாங்கள் வருந்த வேண்டாம். அசைவற்று உயிரற்ற மரம்போல் நான் நிற்கிறேன் உங்கள் குறி ஒரு பொழுதும் தவறாதே. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.

(பிள்ளையையும் பிதாவையும் மாறிமாறிப் பார்க்கிறான் விஜயவர்மன்)

வி. (தனக்குள்) ஆஹா பிள்ளைக்கேற்ற பிதா, இருவரும் சூரர்களே. ஆயினும் என் கட்டளையை நிறைவேற்றித் தீர வேண்டும். ஆண்டவன் இவர்களை காப்பாற்று வாராக.

ஜ. என்னருமைப் பாலா! எல்லாம் ஈசன் செயல். நீ குறித்த இடத்திற்குச் சென்று அசைவற்று நில்.

(அம்புகளை சோதிக்கையில் ஒன்றை மறைத்துக் கொண்டு மற்றொன்றை கையில் வைத்துக் கொள்கிறான். இதை விஜயவர்மன் பார்க்கிறான். பையன் தலையில் பழத்தை வைத்துவிட்டு தன்னிடத்தில் வந்து கிலேசத்துடன் நிற்கிறான் ஜயவீரன்)

வி. அம்பு தொடுப்பாயாக.

த. ஏன் அய்யா தாமதம்? சீக்கிரம் உன் வேலையைப்பார்.

ஆண்டவனைத் தொழுது அம்பை விடுகிறான் ஜயவீரன். பழம் இரண்டு பாகமாகிறது. பிரதாப் ஓடிவந்து தன் தகப்பனைக்கட்டி கொள்கிறான். இருவரும் மண்டிபோட்டு கண்களை மூடி ஈசனை துதிக்கிறார்கள்.)

பாட்டு

ஜ, பி. தேவா நின் சேவை செய்கின்றோம்
திவ்யமலர்களை தொடுக்கின்றோம்
நாசத்தை மாற்றிடும் மகத்தே!
(இத்) தேசத்தை இத்துடன் துறந்தோம் (தேவா)

பி. அப்பா கடவுள் நம்மை காப்பாற்றினார்.

வி. உண்மையே, நீங்களே சுத்த வீரர்கள். இனி நீங்கள் இருவரும் சுயேச்சையாகச் செல்லலாம் அதிருக்கட்டும் ஜயவீரரே நான் உங்களை ஒன்று கேட்க வேண்டும்.

ஜ. தாங்கள் கேட்க வேண்டியது என்னவோ ?

வி. ஒரு அம்பை தாங்கள் ஒளித்து வைத்துக் கொண்ட காரணம் என்ன?

ஜ. முதல் அம்பு குறிதப்பி என் மகன் மீது பட்டு அவன் இறந்திருந்தால், மற்றொரு அம்பு உம்மை கொல்வதற்காகவே. ஆயினும் அங்ஙனம் நேராதபடி ஆண்டவன் அருள்புரிந்து விட்டார்.

(யாவரும் பாடுதல்)

நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில் நின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே.

---

# சாரணீயம்—அதன் உண்மையும் முறையும் 9.

(150 ஆம் பக்கத் தொடர்ச்சி)

S. ஸ்ரீநிவாஸன், போர்டு உயர்பாடசாலை, செங்கம்

## சாரணமுறை

### 4. சாரணத்தொகுதியின் ஆரம்பமும் வளர்ச்சியும்

சிங்கக்குட்டி நிரை (Pack), சாரணப்படை, சஞ்சாரகணம் ஆகிய மூவகைச்சாரண கோஷ்டிகளும் தனித் தனியே உண்டாகி, ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாமல் வேலைசெய்து வருபவை அல்ல. இந்த உண்மையை நாம் முதலிலேய நன்கு அறியவேண்டும். இம்மூன்றும் சேர்ந்து முறையே சாரணவிருக்ஷத்தின் வேர், அடிமரம், கிளைகள் ஆகின்றன சிறுவன் வாழ்க்கையில் இம் மூன்று படிகளும் மூன்று பருவங்களைப் போல், ஒன்றன் பின் ஒன்றாக வரவேண்டும். அப்போதுதான் அவன் சாரணனாக இருப்பதன் முழுப்பயனையும் தன்வாழ்க்கையில் காண முடியும். ஒவ்வொரு சிறுவனும் முதலில் குழந்தையாயிருந்து, பிறகு பாலனாகி, அதன் பின் யௌவனனாவதைப் போல, சிங்கக்குட்டியாகவும், அதிலிருந்து சாரணனாகவும், சஞ்சாரியாகவும் ஆகவேண்டும். ஆகையால் ஒரு பூரண சாரணன் தன் சாரணவாழ்க்கையை குருளையிலிருந்து ஆரம்பித்து, பிறகு சாரணனாகி, கடைசியாக சஞ்சாரியாக முடிக்கவேண்டும். இப்படி படிப்படியாக உயராவிட்டால் சிறுவனை சாரண வழிக்கு சுலபமாகத் திருப்பிக் கொண்டு வரமுடியாது. ஒரு பாடசாலையில் சாரணப் படை ஏற்படுத்த வேண்டுமானால், அடிப்படியை விட்டுவிட்டு, நடுப்படியாகிய (Scout) படைக்கு ஒரே அடியாய்க் குதித்து விடுவது சாரணீயத்தின் உண்மைக்கு விரோதம்.

சாரணீயம் என்பது, ஏற்கனவே விவரித்தபடி, ஒரு வாழ்க்கைப் பயிற்சி. அது கேவலம் ஜீவனற்ற ஒரு சடங்கல்ல. அவ்விதம் அதை பாவிப்பது சாரணீயத்தையே பரிகசிப்பதாகும். சாரணர்களின் பிரிவினை, சிறுவர்களின் மன வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. குழந்தைப் பருவத்தில் எதைக் கற்கவேண்டுமோ அதை, அப்பருவம் மீறிவிட்டால், கற்பது எவ்வளவு கடினம் என்பது சாதாரண அனுபவம். சிங்கக்குட்டியாயிருக்கையில் கற்கவேண்டியதை, சாரணவயதில் கற்பது அவ்வளவு எளிதில் முடியாது. முதல் பருவத்தின் அனுபவம், அடுத்த படிக்கு அஸ்திவாரம் போன்றது. அந்த அனுபவத்தை அடையாமல், மேல்படிக்கு உயர்வது, குழந்தைப் பருவமில்லாமலே மனிதப் பிறவி எடுப்பது போன்றது.



### 5. சிங்கக் குட்டி நிரை—எப்படி ஆரம்பிப்பது?

சிங்கக்குட்டிகளைப் பழக்கி, அவைகளை ஒரு நிரை (மந்தை)யாகத் திரட்டுமுன், மனதில் சில முக்கிய நிச்சியங்களைச் செய்துக் கொள்ள வேண்டும். திட சித்தத்துடன் ஆரம்பிக்காத எந்த வேலையும் முட்ட முடிய நிறைவேறுவதில்லை.

முதலாவது—தான் சிறுவர்களோடு சிறுவர்களாய் ஓடியாடி விளையாடவும், அவர்கள் கூத்துகளிலும் பாட்டுகளிலும் தன் முழு உள்ளத்தையும் செலுத்தி அனுபவிக்கவும் முடியுமா என்பதைத் தனக்குள் சிறிதும் சந்தேகமின்றி தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது—இதற்கு வேண்டிய அவகாசத்தை, தான் தேடிக்கொள்ள முடியுமா என்பது. எந்த வேலையும் விட்டு விட்டு முயன்றால் எது ஈடேராது? ஒரே நிதானமாய், இடையறாமல் செய்யும்முயற்சியே எதையும் சாதிக்கவல்லது. அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும்.

மூன்றாவது—சாரணீயத்தின் இலக்ஷியத்தில் தனக்கு பூரண நம்பிக்கையிருக்கவேண்டும். முதல் ஆவேசத்தில் தடபுடல் செய்துவிட்டு, பிறகு வரவர அடியோடு கைவிட்டு விடுவது கூடாது.

நாலாவது—ஆரம்பத்தில் எந்த முயற்சியிலும் கஷ்டங்கள் நேருவதுண்டு. இவற்றைக்கண்டு பயந்துவிடக்கூடாது. சிறிதும் சோர்வடையாமல், உறுதியுடன் முன்னேறும் மனோதிடம் வேண்டும். சமயத்தில் மனோதிடம் நழுவி விடுவதைக் காட்டிலும் நரகவேதனை மனிதப் பிறவியில் வேறில்லை.

இந்த நான்கையும் தான் நிச்சயித்துக்கொண்ட பிறகுதான், சிங்கக்குட்டிப் பயிற்சியில் ஒருவன் ஈடுபட வேண்டும்.

### 6. ஆரம்பத்தில் ஆடம்பரம் எதுவும் கூடாது

ஆடம்பரத்துடன் ஒரு முயற்சியை ஆரம்பிப்பது மனோதிடக் குறைவையே காட்டும். எந்த காரியத்திலும் இந்த உண்மை பொருந்தும். உள்ளூர்ந்த நம்பிக்கை, பதட்டமற்ற துணிவு, தெளிந்த கொள்கை, தளரா ஊக்கம், தாராள நோக்கம்—இவைகளெல்லாம் சாரணீயத்தின் தூண்களாகும். ஆர்ப்பாட்டமும், ஆடம்பரமும் இவைகளுக்கு ஒரு அறிகுறியாகமாட்டா. ஆகையால் அடக்கத்துடன், பேராசையின்றி, இதில் இறங்கவேண்டும். பேராவலினால் மனம் தளும்புதல் கூடாது. தன்னால் கூடாததை, ஏதோ ஆவேச பலத்தினால் சாதித்து விடலாமென்று மனவீக்கங் கொள்ளுதல், பெரு வீழ்ச்சிக்கு வழியாய் விடும். இதையெல்லாம் உத்தேசித்தே சிங்கக்குட்டியின் விதியும், வாக்குறுதியும் மிகவும் எளிதாகவும், காரிய சாத்தியமானதாகவும் செய்யப்பட்டிருக்கின்றன.

**சிங்கக் குட்டியின் வாக்குறுதி :—**

1. என் (சிங்கக்குட்டியின்) நிரையின் விதிப்படி நடக்க என்னாலான வரையில் முயலுவேன்.

2. ஒவ்வொரு நாளும் ஒரு நற்செயலை செய்யவும் நான் என்னால் முடிந்தவரையில் முயலுவேன்.

**சிங்கக் குட்டியின் விதி :—**

1. சிங்கக்குட்டி கீழ்ப்படிந்து நடப்பான்.
2. சிங்கக்குட்டி சுத்தமானவன்.

**சிங்கக்குட்டி முறையின் இலக்ஷியம் :—**

1. தேக திடம்
2. மன உறுதி
3. நீதி நேர்மை

**சாரண மூல மந்திரம் :—**

“ தயாராயிரு ”

இதைக் காட்டிலும் தெளிவான கோட்பாடு ஒன்று இருப்பது முடியாது. இந்த கோட்பாட்டை சிறுவர் வாழ்க்கையில் பொலியச் செய்ய தெய்வீக சக்தி ஒன்றும் வேண்டியதில்லை. நம்பிக்கை, உறுதி, உத்ஸாகம், ஊக்கம்—இந்நான்கும் யாவருக்கும் பொதுவான செல்வம். அந்தச் செல்வம் உன்னிடம் இருக்குமாகில், குதித்துக்கொண்டு செல்; திரும்பிப் பார்த்து தயங்காதே! சாமர்த்தியத்தைப்பற்றி கவலைப் படாதே. அதுதானாகவே வரும்; வந்தே தீரும்.

## 7. முதல் அடி

மேலே சொல்லப்பட்ட சிங்கக்குட்டி வாக்குறுதி, விதி, இலக்ஷியம், மூலமந்திரம் இவைகளைப்பற்றி வெகு அழகாக விவரித்து எழுதியுள்ள பல புஸ்தகங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்கின்றன. அவைகளை முதலில் வாங்கிப்படித்து என்ன செய்யவேண்டு மென்பதை தெளிவாய் அறிந்துகொள்ளவேண்டும். அவைகளைப்படிப்பது ‘டானிக்’ சாப்பிடுவதுபோல் இருக்கும். படித்த பிறகு, அதை சில பொருக்கான பெற்றோர்களிடம், எவ்வளவு வசீகரமாக எடுத்துச்சொல்ல முடியுமோ, அவ்வளவு வசீகரமாக எடுத்துச் சொல்லவேண்டும். பெற்றோர் அனுதாபமும், கூட்டுறவும் இம்முயற்சியில் இன்றியமையாதன. குழந்தைகளுக்கு ஒரு புதிய சொர்க்கத்தைத் திறக்கப்போவதாக, அதன் கதவுகளைச் சிறிது திறந்து காட்டவேண்டும். அதிகமாகத் திறந்துவிடக் கூடாது. நம்பிக்கை சுரக்கும் வரையில் காட்டினால் போதும்.



கூடுமானால், பெற்றோர்களை ஓரிடத்தில் சிறிய கூட்டமாகக் கூட்டி, சிங்கக்குட்டி முறையின் உண்மையையும் நோக்கத்தையும் மிகத்தெளிவாய் எடுத்துச்சொல்லி, அவர்கள் ஆதரவையும் நேரில் வேண்டிக்கொள்ளலாம். பிறகு ஒரு நாளை குறிப்பிட்டு, அன்று சிங்கக்குட்டிப் பயிற்சியில் சேர விரும்பும் பிள்ளைகளையெல்லாம், பள்ளிக்கூட மில்லாத வேளையில், ஓரிடத்தில் கூடும்படி அழைக்கவேண்டும். ஆரம்பத்திலேயே பிள்ளைகளைப் பொருக்க ஆரம்பிக்கக்கூடாது. ஒவ்வொருவனுடைய விருப்பமும் உத்ஸாகமும் எவ்வளவு தூரம் நிற்கிறது என்பதைக் கண்டுபிடிக்க, அவர்களை சில சோதனைகளுக்குட்படுத்தவேண்டும். முதல்தடவை கூடும்போது, பிள்ளைகளுக்கு சிங்கக்குட்டி முறையை, கதை சொல்வதுபோல, வசீகரமாகச் சொல்லவேண்டும். பிறகு சேர விருப்பமுள்ளவர்களை யெல்லாம் கை தூக்கச் சொல்லவேண்டும். பெயர்களை எழுதிக்கொள். மறுதினம் வரும்படி சொல்லியனுப்பிவிடு.

## 8. வடிகட்டுதல்

ஒரு வாரம் வரையில் தினந்தோறும் பிள்ளைகளை வந்து கூடும்படிச் செய்யவேண்டும். இதில், யார் யார் ஊக்கம் குன்றாமல் இருக்கிறார்களென்பது ஏற்பட்டுவிடும். நொண்டிகளெல்லாம் நடுவில் விழுந்துவிடும். தினந்தோறும், விளையாட்டும், ஆட்டம்பாட்டமும், கதையும் கேளிக்கையும் நிறைந்திருக்கவேண்டும். களைப்புறும்படி அவ்வளவு நேரம் பிள்ளைகளை வைத்திருக்கக்கூடாது. ஒரு அரைமணி, அல்லது முக்கால் மணி போதுமானது. இந்த ஆட்டம் பாட்டங்களில் பிள்ளைகள் எவ்வாறு நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை தனித் தனியாக ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

இப்படி ஒருவாரம் பிள்ளைகளோடு பழகிய பின், எந்தப் பனிரண்டு பிள்ளைகள் உனக்கு மிகவும் சிலாக்கியமானவர்களாகப்படுகிறார்களோ அவர்களின் பெயர்களை எழுதிக்கொள். முதலில், இரண்டு அணிக்குமேல் இருப்பது உசிதமல்ல. ஏறக்குறைய எல்லா பிள்ளைகளும் ஒரே வயதினராகவே யிருக்கவேண்டும். அதாவது பத்து வயது உத்தமம். பெயர் எழுதிக்கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைகளிடம் சிறிது நேரம் பேசியபின், ஒவ்வொருவனிடமும் ஒரு சேர்தல் மனு நமூனாவைக் கொடு. மாதிரி நமூனா (form) ஒன்று கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. பெற்றோர் அதில் கையொப்பமிட்டு, அதை சிங்கக்குட்டி ஆசிரியருக்குத் திருப்பி யனுப்பிவிடவேண்டும்.

| சிங்கக்குட்டி சேர்தல் மனு | இப்பாகத்தைக் கிழித்து பெற்றோர் தங்களிடமே வைத்துக்கொள்ள வேண்டியது. |
|---|---|
| நிரை ........................ | நிரை ........................ |
| தலைமை ஸ்தானம் ........................ | தலைமை ஸ்தானம் ........................ |
| பெயர் ........................ | கூடுமிடம் ............ தேதி ............ |
| விலாஸம் ........................ | நேரம் ............ மணி ............ |
| ........................ | உடை ........................ |
| பாடசாலை ........................ | 1............ |
| பிறந்த தேதி ........................ | 2............ |
| **பெற்றோரின் ஒப்பந்தம்.** | 3............ |
| சிங்கக்குட்டி நிரையின் பயிற்சி முறை, வாக்குறுதி, விதி—இவைகளை நான் படித்து அறிந்துக் கொண்டேன். என் பிள்ளை அதில் சேருவது எனக்கு சம்மதம். அவனுக்குத் தேவையான உடைகளையும், அவன் செலுத்த வேண்டிய சந்தாவையும் கொடுக்கவும் சம்மதிக்கிறேன். நிரை விதிகளை அவன் தவறாமல் நடந்துகொள்ளும்படியும், அவ்வப்போது கூடும் கூட்டங்களுக்கு ஒழுங்காக வரும்படியும், சந்தாவையும் அப்படியே செலுத்தும்படியாகவும் செய்கிறேன். | சந்தா ........................<br>நிரைவிதி ........................<br>........................<br>........................<br>........................<br>,, வாக்குறுதி ........................<br>........................<br>,, நோக்கம் ........................<br>,, மூலமந்திரம் ........................ |
| கையொப்பம் ........................<br>பெற்றோர் அல்லது கார்டியன். | |
| இடம் ............ }<br>தேதி ............ } | இடம் ............ } கையொப்பம் ............<br>தேதி ............ } சிங்கக்குட்டி ஆசிரியர். |

இங்கே கிழிக்கவேண்டும்.

சேர்தல் மனுக்கள் கையொப்பத்துடன் திரும்பி வந்ததும், பிள்ளைகளின் பெயர்களை உத்தியோக முறையில் வைக்கப்பட்டிருக்கும் தாகல் புஸ்தகத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

(தொடரும்)

# குழந்தைகளின் சாலைக்கூட்டங்களும் சன்மார்க்க போதனைகளும்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

## வாழ்க்கையின் நோக்கத்தைப் பூர்த்திசெய்விக்க கல்வி ஒரு சாதனம் ஆகும்

வாழ்க்கையின் நோக்கம் என்ன? என்பதே முதற் கேள்வி. இதற்குப் பதில் சொல்லுவது கடினமே யாயினும் ஒருவாறு பதில் சொல்லலாம். கருமங்கள் நிறைந்த வாழ்க்கையைப் பரிபூர்ணமாகவும் பரிசுத்தமாகவும் செய்து தீருவது, நன்மை தீமை என்கிற தேவாசுர யுத்தத்தில் மயக்கும் தீமையிலிருந்து விடுபட்டு நன்மையைக் கடைபிடிப்பது, எல்லாம் பரப்பிரும்ம சொரூபம் என்ற ஒருமையை ஆராய்ந்தறிவது, இவையாவன. இதை சாதிக்கத்தக்க கல்வியின் போக்கு எவ்வாறு இருக்கவேண்டும். சரியான அறிவைப் பெறுவது, மனோ வாக்கு, காயம் இவைகளில் ஒருங்கே பரிசுத்தனாக விருப்பது, ஜனசமூகமாகிற பெரிய சமுத்திரத்தில்தான் ஒரு துளி என நினைவுகொண்டு சமூகத்தின் பெருமைக்கும் உயர்வுக்கும் பாடுபடத்தான் ஆண்டவனின் திருப்பணி செய்யும் சேவகனாக இருப்பதாகப் பாவிப்பது என்பவைகளே யாகும்.

## குழந்தைகளின் ஆரம்பப் படிப்பும் கல்வியின் உயரிய நோக்கமும்

சின்னஞ் சிறு குழந்தைகள் வரும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் மேலே கூறிய வாழ்கையின் தத்துவத்தைச் சாதிக்கக்கூடியபடி உயரிய நோக்கத்துடன் கூடிய கல்வியைப் புகட்டுதல் முடியுமா? கொஞ்சம் படிக்கவும் கணக்குப் போடவும் தெரிந்துகொள்ளச் செய்யத்தான் முடியும் என்பது சுலபமான பதில் ஆகும். குழந்தையே பெரிய மனிதனாகிறான். அதற்கு சுயசக்தி யுண்டு. பெரிய பெரிய எண்ணங்களும் அதன் மனதில் தோன்றி மறைகின்றன. சமூக நடவடிக்கைகளும் அதன் வளர்ச்சிக்கு ஏற்றதாக விருக்கிறது. ஆரம்பப்படிப்பு அஸ்திவாரப் படிப்பு ஆகையினால் ஆரம்ப ஆசிரியர்களாகிற நாமும் உயரிய நோக்கங்களை எளிய நடையிலும் முறையிலும் தெளிவாக்கவேண்டும். அனுபவமும், அனுஷ்டானமும் அவசியம் தேவை. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பது பழமொழி, சரியான சந்தர்ப்பங்களில் சரியான சாதனங்களை உபயோகித்துக் காரியத்தை சாதிப்பதில் கண்ணும் கருத்தும் வேண்டும்.

## குழந்தைகளின் ஆச்சரியமான கேள்விகள்

குழந்தைகளின் மனதில் சில அபூர்வமான எண்ணங்கள் உதிக்கின்றன. சில கேள்விகள் பிறக்கின்றன. அவைகளை அவர்கள் பொது

வாக வெளியிடுவதில்லை. சரியான சந்தர்ப்பத்தில் அவர்கள் அவைகளை வெளியிடுவார்கள். நான் இவைகளை அறிய ஆவல் கொண்டேன். சில வருஷங்களாக அவர்களது எண்ணங்களையும் கேள்விகளையும் சேகரம் செய்து வருகிறேன். அவற்றுள் அடியிற்கண்டவைகள் சிலவாகும்.

1. கடவுள் இருப்பது நமக்கு ஏன் தெரியவில்லை?
2. உலகத்தில் ஜனங்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்?
3. நான் முன் ஜன்மத்தில் என்னவாக இருந்தேன்?
4. ஏன் கடவுளை வணங்கவேண்டும்?
5. கடவுள் எப்படிப்பட்டவர்?
6. ஏன் நமக்கு இறப்பு, பிறப்பு முதலியவைகள் உண்டாகின்றன?
7. ஏன் மனிதர்கள் தர்மம் அளிக்கிறார்கள்? தர்மம் அளித்தால் என்ன பயன்?
8. கடவுள் இப்போது ஏன் பூலோகத்தில் இல்லை?

இவைகளுக்கு விடையளிப்பது சுலபமில்லை யாயினும் 9 முதல் 12 வயதுக் குட்பட்ட சிறுவர்கட்கும் இக்கேள்விகள் மனதில் எழும்பியிருக்கின்றன. ரிஷிகளும், முனிவர்களும் தோன்றிய இக் கீழ்தேசத்தில் இக்காலத்தும் இத்தேச சிறுவர் சிறுமிகளிடத்து இக்கேள்விகள் தோன்றுவது பழைய பெருமையை விளக்குவதாகும்.

### தற்கால படிப்பும் சன்மார்க்க போதனையும்

ஒவ்வொருவனும் ஒரு சத்பிரஜையாக விருக்கவேண்டியதற்கும் அவனவன் தன் இகலோக வியவகாரங்களைத் தானே கவனிப்பதற்கும் தக்கவாறு அடிப்படையான கல்வியைப் புகட்டுவது தற்கால வழக்கம். அதன் பொருட்டு உண்ண உணவு, உடுக்க உடை, தங்க நிழல் என்ற மூன்று பிரிவுகளுக்குட்பட்ட பல விஷயங்களை எண் எழுத்து கைவேலை பொது அறிவுகளில் சம்பந்தப்படுத்தி பாட திட்டத்தையும் வகுத்து வருகிறோம். எந்த முறையிலும் ஏதாவது குணதோஷம் சொல்லப்பட்டே வருகிறது. எதனால் அந்த குணதோஷம் ஏற்படுகிறது? ஒரு பிரஜை என்பதற்கும் ஒரு நல்ல பிரஜை அல்லது சத்பிரஜை என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. நல்ல என்ற ஒரு பதத்தில் அடங்கியுள்ள விசேஷ குணங்கள் இவ்வளவு என்று மதிப்பு கொடுக்க முடியாதது. ஆயினும் மனிதனுக்கு எட்டிய சில வரம்புகளுக்கு உட்பட்டு ஒருவனை சத்பிரஜையாகக்கொள்ளலாம். மேலும் தற்காலிகமுள்ள விஷயங்களைக் கவனிப்பதற்கு மாத்திரம் பள்ளிக்கூடப் படிப்பு இடங்கொடுக்கிறது. காலம், தூரம் இவை கடந்த சில விசேஷங்களையும் பற்றிய உண்மைகளையும்பற்றி அறிய மனம் அவாக் கொள்ளுகிறது. அப்பொழுது ஆத்மசோதனை ஏற்படுகிறது. தேகம், மனம், ஆத்மா அடங்கிய ஒரு மனிதனின் படிப்பு தற்காலம் முதலிரண்டு விஷயங்களைப்பற்றியே



பொருந்தியிருக்கிறது. மூன்றாவது விஷயமும் முக்கியமான அடிப்படையான பாகம். ஆகவே நாம் கற்றுக்கொடுக்கிற படிப்பு பாதிதான் ஆகும். மற்றொரு பாதியைப்பற்றி நமக்கு விசாரிக்க அவகாசம் இல்லை. மேலும் அது பெற்றோர் பொறுப்பு என்றும் சொல்ல நேரிடுகிறது. ஆயினும் ஒருவன் பாதிக்கிணறு, முக்கால் கிணறு, முக்காலே அரைக்கால் கிணறும் தாண்டிவிட்டேன் என்று சொன்னால் அவன் கதி என்ன ஆகும்? முழுக் கிணறும் தாண்டினால்தான் அவன் ஒரு காரியத்தைப் பூராவாகவும் செய்யக் கூடும். அரைக் குறைக் காரியம் வியர்த்தமாக முடிகிறது. ஆகவே முழுப் படிப்பும் கொடுக்க மற்றும் சில மார்க்கங்களைக் கையாளவேண்டும்.

### "நல்ல" என்பதில் அடங்கிய குழந்தைக்கேற்ற விஷயங்கள்

ஒரு நல்ல குழந்தை எந்தெந்த விஷயங்களில் தன் மனத்தைத் திருப்பவேண்டும், எத்தகைய குணங்களைக் காட்ட அவன் நல்ல குழந்தை என்றும் காலக்கிரமத்தில் சத்பிரஜை என்றும் பேரெடுப்பான் என ஆராய்வது அவசியம். இவ்வளைத்தையும் ஒரு வரம்புக்குள் அமைக்க முடியாது என்றாலும் பொதுவாக ஒருவர் அடியிற் கண்ட பழமொழிகளில் கண்ட தத்துவங்களை அறிந்தவராகவும் கூடுமான வரையில் அனுஷ்டானத்திற் கொண்டு வருகிறவராகவுமிருக்கவேண்டும்.

✓1. அதிகாலையில் எழுந்திரு
2. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
3. அறஞ்செய விரும்பு
4. அறிவு ஓங்க அடக்கம் உயரும்
✓5. அழகாகச் செய்வதுதான் அழகு
6. அன்பே கடவுளது வடிவம்
✓7. அளவுக்கு மிஞ்சி புசிக்காதே
8. அபிப்பிராய பேதமானாலும் அந்தரங்க அன்பு அவசியம்
9. ஆறுவது சினம்
10. ஆண்டவன் அன்பனாயினும் அகங்காரம் ஆகாது
11. இளமையிற் கல்
12. உத்தம சிநேகிதனே ஆபத்தில் உதவுவான்
13. எப்பணியையும்ஆண்டவனது திருப்பணி எனச்செய்
14. எந்த வேலையும் தாழ்ந்தது அல்ல, ஏற்றத்தாழ்வு என்பது ஈசனுக்கு இல்லை
15. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
✓16. ஒற்றுமை உயர்வைத் தரும்
17. கடவுளைக் கனவிலும் மறவாதே
18. கடமை கடைப்பிடி
19. கண்ணுடையரென்பர் கற்றோர்
20. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு
21. கல்விச் செல்வமே மேலான செல்வம்
✓22. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
✓23. கூழானாலும் குளித்துக் குடி
✓24. காலத்தை வீணாக்காதே
25. கைத்தொழில் கற்பதும் கல்வியாகும்
26. சத்தியமே ஜயம்
27. சற்குருவும் ஒரு பிதா
28. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
✓29. சுத்தம் சுகத்தைத் தரும்

30. செடி கொடிகளை அன்புடன் வளர்
31. தருமம் தலை காக்கும்
32. தேகப் பயிற்சி சாலச் சிறந்தது
33. நாட்டைத் தாயெனப் போற்று
34. நற்குணமே நல்ல ஆஸ்தி
35. நாக்கினாலே வரும் நன்மையும் தீமையும்
36. நல்லதை நினை }
நல்லதைச் செய் }
நல்லதைச் சொல் }
37. நற்காரியத்தை நினைத்து உடனே நிறைவேற்று
38. பழக்கமே வழக்கம்
39. பருவத்தால் அன்றிப் பழா
40. பிச்சை புகினும் கற்கை நன்றே
41. பிராணிகளிடத்தில் அன்பாய் இரு
42. பள்ளிக்கூடம் ஒரு கோயில் ஆகும்
43. பல துளி பெரு வெள்ளம்
44. பொறுமையே பூஷணம்
45. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
46. மனதிருந்தால் மலையும் சாயும்
47. மானமே பெரிது
48. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
49. வித்தை விரும்பு
50. விளையும் பயிர் முளையிலே தெரியும்
51. ஒன்றிலிருந்தே பல, பல ஒன்றாகும்
52. வஸ்துக்களின் நல்ல பிரயோஜனத்தை நாடு
53. எங்கும் அமைதி நிலவுக

## புத்தி புகட்டும் மார்க்கங்கள்

(a) பெரும்பாலும் பள்ளிக்கூட அறைகளில் இவை போன்ற பொன் மொழிகளை எழுதித் தொங்கவிடுவது வழக்கம். காலையில் பள்ளிக்கூடப் பாட நேரத்திற்கு 10 நிமிஷ முன்பு பிள்ளைகளை ஒரு நல்ல இடத்தில் கூட்ட வேண்டும். அந்த இடம் செயற்கை அழகினாலாவது இயற்கையழகினாலாவது நிறைந்த பக்தியுடன் பிரார்த்தனை செலுத்தத் தக்கபடி பிரகாசமானதும் பரிசுத்தமானதுமான இடமாயுமிருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினைக் குறித்து உபாத்தியாயர்களில் ஒருவர் கதை, படம், மூலமாக சற்றுநேரம் பேசுவார். அதைப்பற்றியே சிந்தனை செய்யும் பொருட்டு அப்பழமொழி அந்த இடத்தில் ஒரு வாரம் வரையில் இருத்தல் பொருந்தும், இது சாதாரணமாய் அனுஷ்டிக்கப்படுகிற மார்க்கம், இவை சம்பந்தமான கதைகளுக்கேற்ற படங்கள் பழமொழிகள் அடியில் தொங்கவிடப்படலாம். கதை சொன்ன பிறகு பிள்ளைகள் ஏகோபித்து ஒரு பிரார்த்தனைப் பாட்டு பாடி மௌனம் சாதிப்பதும் சிறந்தது. சிலர் பாட, மற்றையோர் கைகூப்பி இருப்பதும் சரிதான்.

(b) முக்கியமாக உபாத்தியாயரே நற்குணங்களில் பழகி வருகிற ஒரு உத்தம சீலராக விருக்கவேண்டும். அவர்தான் குழந்தைகளுக்குச் சரியான உயிருடன்கூடிய உதாரணமாக விருக்கிறார் "எட்டுச்சுரைக் காய் கறிக்கு உதவாது" என்கிறபடி சொல்லுவதும் கேட்பதும் மாத்திரம் போதாது. சன்மார்க்கத்தில் பழகி வருவதுதான் முக்கியம்.



ஜீவகாருண்யத்தைப்பற்றிச் சொல்லவும் சில குழந்தைகள் எறும்புக்கு நொய் போடவும், பெண்கள் மாக்கோலம் போடவும், கொஞ்சம் வயதானவர் புல் பிடுங்கி கன்று, பசு இவைகளுக்குப் போடவும் பழகுகிறார்கள். அந்த அப்பியாசம் தொடர்ந்தாற்போல் ஒரு வாரமாவது செய்விக்கப்படவேண்டும். வயதுக்குத் தக்க பிரகாரம் குழந்தைகள் ஜீவகாருண்ய சம்பந்தமான பற்பல காரியங்களிலே ஈடுபடத்தக்க சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்துதல் பொருத்தமானதாகும். இவ்வழிகளைப் பின்பற்றுகிறார்களா எனப் பரிசோதித்தல் வேண்டும். "குழந்தைகளே தெய்வம். குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம்" என்ற இங்காளையுள்ளவர்களை பல சாதனங்களைத் தேடி வருவார்கள். வகுப்புப் பாடநேரங்களிலும் பல நற்குணங்களை வெளிக்காட்டுகிறார்களா என்று அறியவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றன.

**பாலர் சேவாசங்கங்கள்.**—வாழ்க்கையிலும் கல்வியின் உயரிய நிலையிலும் சேவா தத்துவம் நிரம்பி யிருக்கிறது. ஒவ்வொரு பிரஜையும், கல்விகற்கும் ஒவ்வொரு சிறுவனும் சேவா தத்துவத்தை அறிந்து அதன்படி நடந்துகொள்ளப் பாடுபடவேண்டும். அது நிற்க அதைத் தனிப்படையான ஒரு சமூக அல்லது கல்வியின் அம்சமாக கொள்வதும் முற்றிலும் பொருத்ததாகாது. சில சமயங்களில் தனிப்பட்ட சங்கங்களும் வெளிப்படையான ஆர்ப்பாட்டத்தை மட்டும் மேற்கொண்டும் சுயநலத்தை மேற்கொண்டும் உலாவி வருதல் சகஜமே. வேஷமில்லாமல் தாழ்ந்த முறையிலும் உயரிய லக்ஷியத்தை யடைய முடியும். பின் கண்ட வழியிலேயே பாலர்களைப் பழக்க பள்ளிக்கூட சம்பந்தமான சங்கங்களே முடியாவிட்டாலும் எல்லா பாலர்களும் பழகக்கூடுமான வேறு சங்கங்கள் அவசியமாகும். சிறந்த ஆசிரியரும் குழந்தைகளின் க்ஷேமத்தையே நாடிவரும் பலரும் பாலருக்கென்று சேவா சங்கங்கள் ஆரம்பித்து இடைவிடாது நடத்தி வருதலில் பாடுபடவேண்டும்.

**சங்கத்தின் திருப்பணிகள்:**—திருப்பணி என்னும் பதத்திற்கே கடவுளுக்குப் பிரியமான வேலை என்று பொருள்படுத்தலாம். இம்மாதிரி திருப்பணியில் பலவகையுண்டு

**கோயில் சம்பந்தமானவை.**

**A. தினசரி**

(1) பெருக்கி மெழுகிக் கோலம் போடுதல்.
(2) நந்தவனம் போடுதல்.
(3) பூ கொய்து மாலை தொடுத்து உதவுதல்.
(4) விளக்குப் போடுதல்.
(5) பிரார்த்தனை செலுத்தும் அடியார்களுக்கு ஏற்ற உதவி செய்தல்.

**B. உற்சவகாலம்**

(A) குளம், சத்திரம், கோயில் பிராகாரம் இவற்றைச் சுத்தமாய் வைத்தல்.
(B) குடை பிடித்தல், பந்தல் அலங்கரித்தல், சாமரம் வீசுதல், பஜனைசெய்தல், பல்லக்கு தூக்குதல், தேர் இழுத்தல்.
(C) தண்ணீர்ப் பந்தல் ஏற்பாடு செய்தல்.

(6) தீவட்டிக்கு சுத்தமான கந்தைத்துணி சேர்த்தல்.

(7) பாட்டு பஜனை.

(8) பிராகாரங்களில் நீதி வாக்கியங்களை எழுதித்தொங்க விடுதல்.

(D) நிழல் தரும் மரங்களை சாலை ஓரம் வைத்தல்.

(E) அடியார்களுக்கு அன்னம் அளித்தல்.

(F) ஆபத்திலிருந்து தப்புவித்தல்.

(G) நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்தல்.

(H) சுமைதாங்கி ஏற்படுத்துதல்.

மேற் சொன்னவைகளில் பல சமூக நன்மைக்காகவே ஏற்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகிறது. எனெனில் மானிடவர்க்கம் அனைத்தும் கடவுளின் குழந்தைகள் ஆகும். மனித சமூகத்தின் நன்மைக்குச் செய்கிறதெல்லாம் ஈசுவரனுக்குப் பிரீதியான திருப்பணியேயாகும். ஆகவே அசோக மகா ராஜா செய்ததெல்லாம் திருப்பணிகளேயாகும் என்று விளங்கும். மனித வர்க்கமல்லாமல் ஜீவன் அனைத்துமே ரக்ஷிக்கப்படவேண்டும் என்பது அவரது கருத்தல்லவா!

## ii பிரார்த்தனை சம்பந்தமான பாட்டுகள்

அவரவர் தமக்கு இஷ்டமான பிரார்த்தனைப் பாட்டுகளைப் பாடுவதிலும் கொஞ்சநேரம் கழிப்பது அவசியம். இப்பாட்டுகளில் புதியனவாகிற சிலவற்றையும் தகுந்த உபாத்தியாயர்களைக் கொண்டு கற்றுக் கொடுக்கச் செய்வது சிறந்ததாகும்.

## iii. உலாவி வருதல்

இயற்கையின் அழகு, செழுமை நிறைந்த இடம், மலைப்பிரதேசம், ஆற்றங்கரை, சமுத்திர ஓரம், நந்தவனம், பிரசாரம், பரிசுத்தம் பக்தி நிறைந்த இடம், இவைபோன்ற இடங்களே விரும்பத்தக்கவை. அங்குள்ள அழகுகளைப் பார்த்துப் பேசுதல், உலாவிவருதல், நிம்மதியாய் தனியமர்ந்து தங்களுக்குப் பிரியமான பிரார்த்தனைப் பாட்டுகளை தமது இஷ்டப்படி மௌனமாக அல்லது வாய்விட்டுச் சொல்லிப்பாடுதல், அதே இடங்களை மற்றும் பரிசுத்தமாகச் செய்தல் போன்ற விஷயங்களில் காலத்தைக் கழிக்கலாம்.

## காலைக் கூட்டங்கள் சம்பந்தமான நற்போதனைக் கதைகள்: சில உதாரணங்கள்

இங்குள்ள படங்கள் ஜீவகாருண்யம் என்ற விஷயத்தை விளக்குபவை ஆகும்.

சிபி சக்கரவர்த்தி மடியில் ஒரு புறு பயத்துடன் பறந்து வந்து உட்கார்ந்தது. தன்னைக் காப்பாற்றவேண்டும் என்று அரசனைக் கேட்டுக்



கொண்டது. அப்படியே காப்பாற்றுகிறேன் என்று அரசன் வாக்குக் கொடுத்தான். புறுவைத் துரத்திக் கொண்டே ஒரு பருந்து ஓடிவந்தது. "எனக்கு ஆகாரமாகிய இப்புறுவை என்னிடம் கொடு" என்று பருந்து அரசனைக் கேட்டது. புறுவைக் கொடுக்கமுடியாது அதன் மாமிசத்திற்குப் பதிலாக அதற்குச் சரியான மாமிசத்தைக் தன் உடம்பிலிருந்தே கொடுக்கச் சித்தமாயிருந்தான். புறுவும் பருந்தும் தேவர்களாக மாறினர். சிபி சக்கரவர்த்தியின் காருண்யத்தைப் புகழ்ந்தனர்.



ஒரே ஒரு தும்பி. ஒரு பையன் தும்பியைப் பிடித்து "எடு கல்லை, எடு கல்லை" என்று துன்புறுத்துகிறான். இதே பையன் சில நாட்களில் பெரிய தவசியாக மாறிவிட்டான். கடைசியில் இந்த ரிஷியை ஏதோ ஒரு குற்றத்திற்காக அரசன் கழுவில் ஏற்ற நேர்ந்தது. அச்சமயத்தில் தான்செய்த பாபம் என்னவென்று கேட்டதற்கு யமதர்மராஜன் தாங்கள் சிறு வயதில் ஒரு தும்பியைத் துன்புறுத்தினீர்கள். அதனால் வந்த தீமை இது" என்று சொல்லத் தெரிந்துகொண்டார். இவருக்கு ஆணி மாண்டவ்யர் என்று பெயர்.



திலீபர் என்று சக்காவர்த்தியிருந்தார். அவர் தினம் காலை மாலை ஒரு பசுவையும் அதன் கன்றையும் மேச்சலுக்கு அழைத்துப் போவார். ஒரு நாள் திடீரென்று ஒரு சிங்கம் தோன்றி மாட்டைப் பிடித்துக் கொண்டது. திலீபர் அதைநோக்கி "என் உயிரைத் தருகிறேன். பசுவை விட்டுவிடு என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டார். சிங்கம் பசுவை விட்டு விட்டது. அது ஒரு தேவனாக மாறி விட்டது. பின்பு திலீபருக்கு அழியாப் புகழ்பெற்ற அருமைப்புத்திரன் பிறந்தான்.





அசோகர் என்பவர் ஒரு அரசர். அவர் தன் இராஜ்யத்தில் மிருகங்களுக்காக ஆஸ்பத்திரிகள் கட்டினர். பிரயாணிகளின் சௌகரியத்திற்காக சாலைகளில் நிழல் தரும் மரங்களைப் பயிராக்கினர். அவர்கள் சௌகரியத்தை உத்தேசித்து கிணறுவெட்டி அவற்றைச் சுற்றிச் சோலைகள் அமைத்தார். அவர் ஆங்காங்கு இந்த உண்மைகளை கல்தூண்களில் எழுதி வைத்தார்.

இதோ ஒரு ருஷி. அவர் மடியில் ஒரு அணிப்பிள்ளை இருக்கிறது. அது அவரிடம் வந்து விளையாடும். அவர் பால் கொடுத்தால் அதைக் குடிக்கும். நம்மைக் கண்டால் அணில் பயந்து ஓடும். இந்த ரிஷியிடம் அது பயமில்லாமலும் பிரியமாயும் வருகிறது. இதே மாதிரி தற்சமயம் திருவண்ணாமலையில் ரமணமகரிஷி என்று ஒருவர் இருக்கிறார். அவர் அணில், காக்கை, குரங்கு பசு, இவைகளிடம் மிகவும் அன்பு கொண்டவர். தன் தாயார் இறந்துபோன இடத்தில் ஒரு சமாதி கட்டினர். அதேபோல் தனது தோழர்களான அணில், காக்கை, குரங்கு இவை ஒவ்வொன்றும் இறந்துபோனதைக் குறித்து ஒவ்வொரு சமாதி கட்டியிருக்கிறார். உலகத்தில் தாயார் முதல் அணில் பிள்ளை வரையில் எல்லோரிடம் சமமான அன்பைக்காட்டுகிறார் என்று தெரியவருகிறது அல்லவா ?





இவர் ஐந்தாம் ஜார்ஜ் அரசன் நமது அரசராகிய ஆறும் ஜார்ஜின் தந்தையரர். ஐந்தாம் ஜார்ஜ் 1905-ம் வருஷம் இந்தியாவிற்கு வந்திருந்தார். அவரைப் பற்றின சில அருமையான விஷயங்கள் பின்வருமாறு :

கராச்சி, ஜன 28—

........கராச்சியில் உள்ள வயோதிகரான ஒரு பார்ஸி கனவான் ஜார்ஜ் மன்னர் பிளேக் நிவர்த்தி விஷயத்தில் விசேஷ அக்கரை காட்டிய



தாகவும், ஜெய்ப்பூரில் முதல் முதலாக அவர் ஒரு புலியைச் சுட்டதாகவும் அவர் ஏழைகளுக்கும் பிச்சைக்காரர்களுக்கும், குஷ்டரோகிகளுக்கும் விருந்து நடத்த உத்தர விட்டதாகவும் கூறினர்.

இந்திய சமஸ்தானமொன்றில் அந்த சமஸ்தான அதிபதி சிங்கங்களுக்கு ஆட்டுக்குட்டிகளை உயிருடன் இரையாகக் கொடுத்ததைக் கண்டு ஜார்ஜ் மன்னர் அந்த ஆட்டுக்குட்டிகளை வெளியே எடுக்கச்சொல்லி அவற்றிற்கு உயிர்ப்பிச்சை கொடுத்ததாகவும், பிறகு அவற்றில் ஒன்றின் சம்ரக்ஷணத்துக்குப் பென்ஷன் கொடுக்க உத்தர விட்டதாகவும் அவர் ஒரு சம்பவத்தை வெளிப்படுத்தினர்.'' (சுதேசமித்திரன்)






மேலேயுள்ள படங்களைப் பாருங்கள், ஒன்று மிருக வைத்திய சாலை, மாடு, குதிரை, நாய், பூனைபோன்ற வீட்டு மிருகங்களுக்கு ஏதாவது வ்யாதி வந்தால் இங்கே சிகிச்சைசெய்கிறார்கள் ; ஒவ்வொரு மிருகத்திற்கும் தனித் தனியாக ஒரு தொட்டில் இருக்கின்றது. பாற்காரர்கள் தமது மாடுகளையும் கன்றுகளையும் இந்த வைத்திய சாலைக்கு அழைத்துப் போனல் அங்குள்ள வைத்தியர்கள் அவைகளைப் பரிசோதித்து வேண்டிய மருந்துகளைக் கொடுப்பார்கள். 8 வது படத்தைப் பாருங்கள். அதில் காட்டப்பட்டிருக்கும் ஜீவ ரக்ஷகசபையார் மற்றும் புதிய வழிகளில் மிருகங்களுக்கு அனுகூலம்செய்ய ஏற்பாடு செய்யப் போகிறார்கள். இங்குள்ள சம்பாஷணையைக் கவனியுங்கள்.

(ஒரு பையன் வீடு வீடாக உண்டிப்பெட்டி எடுத்துச் செல்லுகிறன்.)

**வீட்டுக்காரர் ஒருவர்.**—பையா ! இந்தப் பணத்தை என்ன வழியில் செலவழிக்க உத்தேசம் தெரியுமா ?

**பையன்.**—ஐயா ! பொதுவாக மிருகங்களுக்கு உபகாரமான வழியில் செல வழிப்பார்கள்.

**வீட்டுக்காரர்.**—சரி தான் எனக்கு சில வழிகள் தோன்றுகின்றன. அதையும் உன் எஜமானனிடம் தெரிவித்துக்கொள்.

ஒன்று. மாட்டுப்பொங்கல் அன்றையதினம் எல்லா மாட்டுக்காரர்களையும் தங்கள் பசுக்கள் கன்றுகளைக் குளிப்பாட்டி அலங்கரித்துத் தாங்களும் சுத்தமாக ஓரிடம் வந்து அங்கு ஒழுங்காக தமது பசுகன்றுகளுடன் நிற்க ஏற்பாடு செய்யுவேண்டும்.

பிறகு சபையார்கள் நன்றாக வளர்க்கப்பட்டு வருகிற பசுக்களின் சொந்தக்காரர்களுக்கு நல்ல வருமானம் கொடுக்கவேண்டும்'' மேலும் எல்லாப் பசுக்களுக்கும் நல்ல புல் கட்டு தீனிக்காக ஏற்பாடு செய்யவும் வேண்டும். எல்லா பாற்காரனுக்கும் ஒரு புதுத்துணி வாங்கி யணிந்தால் எல்லோரும் ஜீவரக்ஷக சபையின் பாற்காரர்களிடமும் பசுக்களிடமும் தமக்கிருக்கும் விசுவாசத்தைக் காட்டிக் கொள்ளலாம். இதுதான் எனக்குத் தெரிந்தது.

**பையன்.**—ரொம்ப நல்ல யோஜனைதான். அடுத்த மாட்டுப் பொங்கல் அன்று தினம் இம்மாதிரி ஏற்பாடு செய்வது உசிதம் என்று என் யஜமானரிடம் கூறுகிறேன்.

**அடுத்த வீட்டுக்காரர்.**—வருஷா வருஷம் நீங்கள் பணம் வாங்குகிறீர்கள்; மிருகங்களுக்கும் அவர்களின் சொந்தக்காரர்களுக்கும் என்ன உபகாரம் செய்கிறீர்கள்?

**பையன்.**—நீங்கள் ஏதாவது சொன்னால் என் யஜமானரிடம் தெரிவிக்கிறேன். உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**வீட்டுக்காரர்.**—மாடுகளுக்கு ஆகாரமான புல், பிண்ணாக்கு, கடலைப் பொட்டு, பருத்திக் கொட்டை, வைக்கோல் இவைகளைச் சேகரித்து மாட்டுக்காரர்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுத்து வரும்படி ஒரு புதிய ஏற்பாடு செய்வது அவசியம். இதற்கு சபையார் ஏற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஒழுங்கானவர்களிடம் சில சமயம் கடனுக்காகக் கொடுத்தாவது மாதக் கடைசியில் பால் பணம் வசூலிலிருந்து அவர்களிடம் தீனித் தொகையைப் பெறவேண்டும். மாட்டிற்கும் நல்ல ஆகாரம் கிடைக்கும். பால்காரனுக்கும் இது அனுகூலமாய் இருக்கும். அச்சமயம் பசு, கன்று இவைகளைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற யோசனையை அவர்களுக்குச் சொல்லலாம்.

**பையன்.**—நல்ல யோஜனைதான். இதை என் யஜமானரிடம் வணக்கமாய்த் தெரிவிக்கிறேன். அந்த மாதிரியே ஒரு நாள் குதிரைகளையும் வண்டிக்காரர்களையும் ஒரு மிக்கச் சேர்த்துக் கொண்டாடலாம்.

**மற்றொரு வீட்டுக்காரர்.**—பையா! என்ன உண்டிப் பெட்டி எடுத்து வந்துவிட்டாய்? போன வருஷம் கூட நாலு அணா கொடுத்தேன். நீ கொடுத்த கொடிகூட இதோ ஜாக்கிரதையாய் இருக்கிறது. இதனால் மாடுகளுக்கு என்ன அனுகூலம் தெரியவில்லையே?



**பையன்.**—பலபேர் பலவிதமான யோஜனைகள் சொல்லி வருகிறார்; நீங்கள் ஏதாவது சொன்னால் அதை என் யஜமானரிடம் தெரிவிக்கிறேன். தயவு செய்து சொல்லுங்கள்.

**வீட்டுக்காரர்.**—நானும் மாட்டு தொட்டில்களைப் பார்த்து இருக்கிறேன். ஒன்றாவது சரியாய் இல்லை. ஒரே நாற்றம் தான். சுற்றிலும் சாக்கடை தான். ஊரில் ஒரு பொது இடத்தில் மாட்டுக் கொட்டில்களுக்கென்று ஒரு இடம் சம்பாதித்து அங்கே நல்ல கொட்டில்கள் கட்டி மாட்டுக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் மிருக வைத்தியர் அங்கு தினப்படி சென்று மாட்டுக்காரர்களுக்கு ஏற்ற யோஜனைகள் சொல்லலாம். மாடுகளையும் கவனிக்கலாம். மிருக வைத்தியருடைய உபகாரம் அப்பொழுதுதான் நன்றாகத் தெரியவரும். இதுதான் எனது யோஜனை.

**பையன்.**—இதை நான் என் யஜமானரிடம் தெரிவிக்கிறேன்.

**கடைசி வீட்டுக்காரர்.**—பையா! அம்மனுக்குப் பலியிடாதீர்கள் என்று சொல்லுகிறவர்கள் உங்கள் சபையாரா?

**பையன்.**—அம்மாதிரி சொல்லுகிறவர்கள் வேறு ஒரு சபையார்.

அம்மனுக்கு மிருகபலி யிடாதீர்கள்.
அம்மன் ஆடு கோழி கேட்கிறாளா?
அம்மன் ஆடு கேட்கவில்லை.
அம்மன் கோழி கேட்கவில்லை.
அம்மன் மிருகங்களின் வதையைச் சகிக்கமாட்டாள்.
பொங்கலிட்டு ஏழை பரதேசிகளுக்குக் கொடுத்து பசியைப் போக்குங்கள்.
வாயில்லா ஜீவனை வதைப்பது பாவம். காப்பது தர்மம்.

இம்மாதிரியெல்லாம் எழுதியுள்ள நோட்டீசுகளை நான் பார்த்திருக்கிறேன். அம்மாதிரி செய்வதும் நல்லது தான்.

**வீட்டுக்காரர்.**—மிருகங்களைக் காப்பாற்றுகிறது தான் முக்கியம் நீங்களும் அந்த சபையாருடன் சேர்ந்து உழைக்கலாமே?

**பையன்.**—யோசனையை என் யஜமானரிடம் சொல்லுகிறேன்.

**வழிப் போக்கர் ஒருவர்.**—பையா! என்ன உண்டி வசூலா

**பையன்.**—ஆமாம் மிருகங்களை ஆதரிக்கும் சபையாரால் நான் அனுப்பட்டவன். அதன் பொருட்டு நான் வீடுவீடாகச் சென்று உண்டிப் பணம் வசூல் செய்கிறேன்.

**வழிப்போக்கர்.**—மனிதர்களே ஒருவரை ஒருவர் இம்சிக்கக் கூடாது. பெரியவர்கள் குழந்தைகளை இம்சிக்கக் கூடாது. ஆண்கள் பெண்களை இம்சிக்கக் கூடாது. படித்தவர்கள் படிக்காதவர்களை மரியாதை குறைவாக நடத்தக் கூடாது.

பணக்காரர்கள் ஏழைகளை உபத்திரவம் செய்யக்கூடாது. சுய நலம் பாராட்டாத சேவையே மேல். வெளிப்பாட்டு கொண்ட எந்த சங்கமும் கூடாது.

மேல் ஜாதியர் கீழ் ஜாதியாரை சமமாக நடத்தப் பாடுபடவேண்டும். இவைகள் கூட ஜீவரக்ஷக சபையரால் மாத்திரம் அல்ல எல்லாராலும் கவனிக்கப்பட வேண்டும். இதோ, இரண்டணா போடுகிறேன்.

பையன்.—வந்தனம் ஐயா ! போய் வருகிறேன்.

குறிப்பு.— சாலைக் கூட்டங்கள் சம்பந்தமான சம்பாஷணைகள் கதைகள் ;இவைகளுக்குப் பெரியோர் ஜீவிய சரித்திரங்களில் ரஸமான விஷயங்கள், புராணக்கதைகள் தினசரிப் பத்திரிகை மாத சஞ்சிகை இங்கு காணப்படும் பாலர் கல்விக்கான விஷயங்கள், இவை பிரயோஜனப் படும்.

## பாலர் பள்ளிக்கூடமா ? பாலர் குருகுலமா ?

பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்றுக் கொள்ளுகிறார்கள் நாம் பாடம் சொல்லிக்கொடுக்கிறோம். கற்றவித்தை கைமண்ணளவு: கற்காத வித்தை கடல் அளவு. மேலும் கற்ற வித்தையை அப்பியாசம் செய்யப் போதுமான அவகாசம் வீட்டில் ஏற்படுவதில்லை. சில சமயத்தில் வீடும் பள்ளிக்கூடமும் எதிர் வழியில் செல்லுகின்றன. தற்கால முறைப்படி கைத்தொழில் பழக்கம், தோட்டவேலை, ஒழிவு நேரம்பொழுத் போக்கு, உலாவிவருதல், வாழ்க்கை சம்பவங்கள் நடுமையாகக் கொண்ட பாட திட்டம், பாலர் சேவா சங்கம் என்பது போன்ற பலவித பள்ளிக்கூட நூதன திட்டங்களை நன்ருய் அப்பியாசம் செய்து காட்ட இடம், காலம், வசதி போதுமானதாயில்லை என்று சொல்லக்கூடும். சன்மார்க்க சம்பந்தமான போதனைகளைக் காரியங்களில் அனுஷ்டித்துக் காட்டவும் பள்ளிக்கூடமும் ஏற்ற வழிகளைத் தேடவேண்டியிருக்கிறது. பொதுவாக பல சக்திகள் கூடிய ஒரு குழந்தை பூரண வளர்ச்சியை பூர்ணமான கல்வியைப் பெற பாலர் குருகுலங்களே தேவை என்று அடியேனுக்குத் தோன்றுகிறது. பாலர் பள்ளிக்கூடங்கள் பாலர் குருகுலமாக மாற வேண்டும். எண்ணம், அனுஷ்டானம் இரண்டும் இணைய வேண்டும். அதுவே பாலர் படிப்பில் ஏற்படும் பொன் காலம் ஆகும். பாலர் குருகுலமே பாலர் படிப்பாம் பொன் காலத் திட்டமாகும். பாலர் படிப்பு நல்ல பலன் கொடுத்து அதன் மூலம் நம்து பிள்ளைகள் பாக்கியசாலிகளாயிருக்க பாலர் குருகுலமே ஏற்றதாகும். பல சக்திகள் அடங்கியிருக்கும் சக்தி ஸ்வரூபமான குழந்தைகளின் ஒருமைப்பட்ட சக்தி வெளிப்பட்டுப் பிரகாசிக்கச் செய்யக்கூடியது பாலர் குருகுலமே ஆகும்.

# மதிப்புரை

1. பகவான் ஸ்ரீ அரவிந்தர் அருளிய உத்தர்பாரா உபந்யாசம் (பக்கம் 32, விலை அணா 1)
2. யோக ஸாதனம் (பக்கம் 36, விலை அணா 2) கிடைக்குமிடங்கள் : (1) குலபதி பி. ஏ. சுப்ரமணிய அய்யர், 84, பெரிய தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை. (2) ஸ்ரீ அரவிந்த ஆச்ரமம், புதுச்சேரி)

இந்த இரண்டு புஸ்தகங்களை தமிழ்மொழியில் வெளியிட்டதற்கு குலபதி ஸ்ரீ பி. ஏ. சுப்ரமணிய அய்யருக்கு தமிழ் நாடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அலிப்பூர் ஜெயிலிலிருக்கும்போது ஸ்ரீ அரவிந்தருக்கு ஈசன் அருளிய மொழிகளை, அவர் உலகத்துக்கு வெளிப்படுத்தினது வங்காளத்தில் உள்ள உத்தர்பாரா என்னும் ஊரில். தேசிய கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ அரவிந்தரை, ஸநாதனதர்ம ப்ரசாரத்துக்கு மாற்றின மொழிகள் அவை. அவர் கூறுகிறார் :

"உன்னால் ஒடிக்க முடியாமற்போன விலங்கை நானே முறித்து விட்டேன். நீ செய்துவந்த வேலையை நீ செய்ய வேண்டுமென்று நான் ஸங்கற்பிக்கவுமில்லை; ஆணையிடவுமில்லை. நான் உனக்கென்று ஸங்கற்பித்திருக்கிற கர்மம் வேறொன்று உளது; அதற்காகவேதான் உன்னை நான் இங்கே கொணர்ந்திருக்கிறேன் ; தானாகவே நீ அறிந்து கொள்ளக் கூடாமற்போன ஞானத்தை நானே புகட்டுவேன்" என்று ஈசன் திருவாய் மலர்ந்தருளி, என் கையில் கீதா புஸ்தகத்தையும் தந்தான். அந்த க்ஷணத்திலேயே அந்த கீதாசார்யன் என் ஹ்ருதயத்துள் பிரவேசித்து 'கீதா (யோக) ஸாதனம் செய்' என்று கட்டளையிட்டான். அன்றியும், அந்த ஸாதனத்துக்கு வேண்டிய சக்தியையும் எனக்குத்தந்து, யோக மார்க்கத்தையும் காண்பித்தான். அந்த மார்க்கம் அர்ஜுனன் சென்ற மார்க்கமேயாகும். "விருப்பு வெறுப்பு இன்றி இருத்தல் வேண்டும். பலனைக்கருதாது கர்மங்களைச் செய்தல் வேண்டும். அகங்கார மமகாரங்களை ஒழித்து மனவமைதியுடன் என் கையிலிருந்து என் ஸங்கற்பத்தை நிறைவேற்றும் ஒரு கருவிபோல் ஆகவேண்டும். ஏழை, தனவான் என்ற வித்தியாஸமின்றி யாரிடத்தும் பரிவு கொள்ளல் வேண்டும். பகை, நண்பு, ஜயம், தோல்வி, இவையிடத்து ஸமத்ருஷ்டி தோன்றவேண்டும். ஆயினும் ஸ்ரத்தைக்குக் குறைவு கூடாது. செய்யும் கர்மங்களெல்லாம், எனது கர்மங்களென்ற தோற்றம் (பாவம்) மனதிலிருத்து அகலல் ஆகாது. இதே கீதை காட்டும் வழி. இதை அனுஷ்டித்தால்தான் கீதாயோகம் ஸித்திக்கும்" என்று உபதேசித்தான்.

இவ்வழகிய மொழி பெயர்ப்பை ஒவ்வொரு தமிழரும் வாசிக்கவேண்டும்.

ஸ்ரீ அரவிந்தரின் யோக மார்க்கத்தை, "யோக ஸாதனம்" என்னும் புஸ்தகம் நன்ருகப் புரியும் முறையில் விளக்கிக் காட்டுகிறது. யோகாப்யாஸத்தின் நோக்கம், இரண்டுவித யோக வழிகள் (தபஸ், சரணாகதம்), ஸாதகன் நடந்து கொள்ளவேண்டிய முறைகள், குருபக்தியின் மகிமை முதலியன சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. தமது யோகத்தின் முக்கிய அம்சங்களை விவரித்து எழுதிய ஸ்ரீ அரவிந்தரின் (ஆங்கிலத்தில் எழுதிய) கடிதமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்புஸ்தகத்தின் ஒரு முக்கிய அம்சம், இதில் அடங்கியுள்ள அநேக குறிப்புகள் ; பல பாஷைகளில், பலவித சமய நூல்களில் அடங்கிய பொருத்தமான விஷயங்கள் அங்கங்கே குறிப்பிட்டிருக்கின்றன.

முதல் புஸ்தகத்தில் ஸ்ரீ அரவிந்தரின் படமும், இரண்டாம் புஸ்தகத்தில் ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை இருவர் படங்களும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகங்களின் விற்பனை வருமானம் முழுவதும் புதுச்சேரி ஆஸ்ரமத்தையே போய் சேருகிறது.

# பாலர்கல்வி சந்தாதார்களுக்கு விண்ணப்பமும் வேண்டுகோளும்.

---

## முக்கிய கவனிப்பு.

"பாலர் கல்வி" பத்திரிகை ஆரம்ப ஆசிரியர்களின் பொருட்டு தென்னிந்தியா ஆசிரியர் சங்கத்தாரால் ஆரம்பிக்கப் பட்டு அனேக ஆசிரியர்களாலும், ஆசிரியர் சங்கங்களாலும் போற்றப்பட்டு வருகிறது. இதை ஆரம்பித்து சென்ற மார்ச்சு மாதத்துடன் நான்கு வருஷங்கள் முடிந்து, ஐந்தாம் ஆண்டு நடந்து வருகிறது. இது ஒவ்வொரு மாதமும் 15-ந்தேதியில் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்தப் பத்திரிகையை கல்வி இலாகா அதிகாரி (D. P. I.) அனுமதித்து எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் தருவித்துக் கொள்ளலாம் என்று சொல்லி இருக்கிறார்.

இந்தப் பத்திரிகை ஒவ்வொரு உபாதியாயராலும் வரவழைக்கப் பட்டு படிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனும், ஆரம்ப ஆசிரியர்களின் வருமான ஸ்திதியை உத்தேசித்தும், அதன் வருஷ சந்தா மிகவும் குறைவாக ரூ. 2 என்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இப்பொழுது சண்டையின் காரணமாக காகிதம், அச்சாபீஸ் சாமான்கள் முதலியவை விலை அதிகரிக்கவே இதைப் பிரசுரிக்கும் செலவு ஜாஸ்தியாகிக்கொண்டே வருகிறது. அதற்காக இந்தப் பத்திரிகையின் சந்தாவை உயர்த்துவதாக உத்தேசமில்லை. ஆனால் நமது சந்தாதார்கள் அவரவர்களுடைய சந்தா தொகையை பாக்கி இல்லாமல் முன்பணமாக அனுப்பி இந்தப் பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

சில சந்தாதார்கள் இந்த ஆபீஸுக்கு கடிதம் எழுதுவதிலோ, மணியாடர் அனுப்பவதிலோ, விலாச விவரம் அல்லது சந்தா நம்பரின் விவரம் சரி வர எழுதுவதில்லை. அதனால் இந்த ஆபீஸில் சில சமயங்களில் சிரமம் ஏற்படுகிறது. ஆகையால் இனி ஒவ்வொரு சந்தாதாரும் தன்னுடைய சந்தா நம்பரைக் குறித்து வைத்துக் கொண்டு அதைக் கடிதங்களிலும், மணியாடர் கூபன்களிலும் உபயோகிக்கும்பொருட்டு இந்த ஆகஸ்டு மாதம் அனுப்பப்படும் சஞ்சிகையிலிருந்து மேல் விலாசத்தோடு அந்த நம்பரையும் சேர்த்து இருக்கிறோம். இதை சந்தாதார்கள் முக்கியமாக கவனிப்பார்களாக.

கடிதம் எழுதும் போதும், மணியார்டர் அனுப்பும் போதும் சந்தாதார்கள் பின் வரும் தகவல்களை எழுதுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

சந்தா நெம்பர் — சங்கம் அல்லது பள்ளிக்கூடத்தின் பெயர் — ஊர் — போஸ்டாபீஸ் — ஜில்லா.

பத்திராதிபர், "பாலர் கல்வி."

# செய்தித் திரட்டு

---

## திருவண்ணாமலைத் தாலூக்கா

### ஆரம்பாசிரியர் முதல் மகாநாடு

திருவண்ணாமலைத் தாலூக்கா திரவிய சகாய ஆரம்பாசிரியர் யூனியன் ஆதரவில் தாலூக்கா ஆரம்பாசிரியர் முதல் மகாநாடு, திருவண்ணாமலை ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி ஆந்திர பாடசாலை "வாஸவி ஹாலில்" 28-7-40, ஞாயிற்றுக் கிழமை பகல் 1-30 மணிக்கு திருவண்ணாமலை ரேஞ்சு சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. N. ராமநாதன், M. A., L. T. அவர்கள் தலைமையின் கீழ் பிரார்த்தனையுடன் ஆரம்பமாயிற்று.

முதலில் யூனியனின் காரியதரிசி ஸ்ரீ M. S. கோடீஸ்வரன், B. A., L. T. அவர்களையும் மற்றும் விஜயம் செய்திருந்த பிரமுகர்களையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர் ஸ்ரீ M. S. கோடீஸ்வரன், B.A., L.T. அவர்கள் மகா நாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் "முதலில் ஆசிரியர்கள் தைரியத்துடனும், சுயமரியாதையுடனும், ஊக்கத்துடனும், தம் தொழிலில் நம்பிக்கையுடனும் வாழவேண்டும். அவர்கள் இலாகா அதிகாரிகளுக்கு அனுப்பும் தஸ்தா வேஜுகளைப் பிழையின்றி சரியான முறையில் எழுதியனுப்ப வேண்டும். அரசாங்கத்தார் நம் நாட்டில் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி திட்டத்தைப் புகுத்துவதைத் தங்கள் முதற் கடமையாகக் கொள்ள வேண்டும்," எனக் கூறிவிட்டு அம்பா சமுத்திரத்தில் நடைபெற்ற 31-வது மாகாணக் கல்வி மகாநாட்டில் ஆரம்பாசிரியர்களுக்காகச் செய்த தீர்மானங்களையும், அத்தீர்மானங்களைக் கிரியாம்சையில் கொண்டுவரவேண்டி தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தார் எடுத்துக் கொண்டிருக்கும் முயர்சிகளையும் குறிப்பிட்டுப் பேசுகையில் "ஆரம்பாசிரியர்களுக்காக சமீப காலத்தில் கவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவுகளை அவர்கள் பரிசீலித்து அவசியமான மாறுதல்களைச் செய்யவேண்டுமென்றும், தற்பொழுது திரவிய சகாயப் பாடசாலைகட்கு சம்பந்தப்பட்ட கிராண்டு விதிகளை ஆசிரியர்கட்கு இன்னும் உதவி செய்யும் முறையில் மாற்றியமைப்பதுடன், தொழிற் பாதுகாப்பை யளிக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பட வேண்டுமென்றும், 220 நாட்களுக்குப் பதிலாக வருடத்தில் 200 நாட்களாக பாடசாலையின் வேலை நாட்களைக் குறைப்பது மிக்க சௌகரியத்தை யளிக்குமென்றும், ஆரம்பாசிரியர்களும் ஸ்தல ஸ்தாபன, சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்கும் உரிமையை யளிக்கவேண்டு மென்றும்" குறிப்பிட்டார். அவர்மேலும் பேசுகையில் "தென்னிந்திய ஆசிரியர் சங்கக் கிளையாகிய வடாற்காடு ஜில்லா ஆசிரியர் கில்டில் அனைவரும் சேருவதுடன் S. I. T. U. வால்

ஆரம்பிக்கப் பட்டிருக்கும் "ஆசிரியர் பாதுகாப்பு நிதி"யை ஆதரிக்க வேண்டுமென்றும்" கேட்டுக்கொண்டார்.

பின்னர் தலைவர் ஸ்ரீ. T. N. ராமனுஜன், M. A. L. T. அவர்கள் தம் தலைமைப் பிரசங்கத்தில் "ஆரம்பாசிரியர்கள் ஊதிய மொன்றிற்காகவே உழைப்பதாக அவர்கள் கருதக்கூடா தென்றும், அவ்வாறு அவர்கள் நினைத்தால் ஆரம்பக் கல்வி ஓர் வர்த்தகத் தொழிலாகக் கருதப்படு மென்றும், அவர்கள் தங்கள் தன்னலமற்ற சேவையினுல் தேச சேவையையே செய்பவர்களாவார்களென்றும், நம் நாட்டின் கல்வியின்மையை ஒழிக்கவும், தேச முன்னேற்றத்திற் காகவும் அவர்கள் அரசாங்கத்தாருடன் சேர்ந்து உழைக்க வேண்டியது அவசிய மென்றும், அவர்கள் சேவை தேசத்தினரால் எதிர் காலத்தில் பெரிதும் பாராட்டப்படுமென்றும், பாடசாலைகளைச் சிறந்த முறையில் நடத்த ஊக்கமும், உற்சாகமும் அதிகரிக்கச் செய்து கொள்ள வேண்டுமென்றும், எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர்கள் தங்கள் பாஷா ஞானத்தையும், பொது அறிவையும் காலத்திற்கேற்ற வரையில் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்றும் தற்போது அரசாங்கத்தார் ஆரம்பக்கல்வியின் முன்னேற்றத்திற்காக எல்லாப் பாடசாலைகளையும் ஐந்து வகுப்புகளுடன் கூடிய பூர்த்தியான பாடசாலைகளாக்கி வருவதையும், பெண் கல்வியையும், ஹரிஜனங்களின் கல்வியையும் அதிகரிக்கச் செய்வதற்காகப் பெண்களையும், ஹரிஜனக் குழந்தைகளையும் அதிகமாகப் பாடசாலைகளில் சேர்க்கத்தக்க முயற்சிகள் எடுத்து வருவதையும், கல்வியிலாகா அதிகாரிகள் செய்துவரும் நன்மைகளையும் ஆசிரியர்களும் பொதுமக்களும் பாராட்ட வேண்டுமென்றும்" கூறினுர்.

பிறகு ஸ்ரீ A. நாராயணசாமி முதலியார், B.A., B.L. அட்வகேட் அவர்கள் "ஆசிரியர்களும் தாய்மொழியும்," என்பதைப் பற்றியும், ஸ்ரீமான் ரெவரெண்ட் ஜி. ஞான சுந்தரம் "கல்வியும் பொதுமக்களும்" என்ற விஷயத்தைப் பற்றியும் பேசினுர்.

பின்னர் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறை வேற்றப் பட்டன.

---

மதுரை தாலூகா

ஜில்லா போர்டு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் யூனியன்

மகா்சபைக் கூட்டம்

ஷை யூனியனின் மகா சபைக் கூட்டம் 6—7—'40ல் சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்கு, மதுரை A. R. ஹைஸ்கூல் கட்டிடத்தில் மேற்படி ஐக்கியத் தலைவர் ஸ்ரீ V. M. வெங்கிடசுப்பிரமணிய அய்யர் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. 130 ஆசிரியர்கள் வரை ஆஜராகியிருந்தனர். 1940—'41-ம் வருட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.



இந்த யூனியனின் முதலாம் ஆண்டு நிறைவு விழா

சென்ற 8—6—'40ல பிற்பகல் 4-மணிக்கு, மதுரை A. R. ஹைஸ்கூல் கட்டிடத்தில், மதுரை ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ N. சாரங்கபாணி அய்யங்கார், M.A.L.T., அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. சுமார் 140 ஆசிரியர்களும், பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். அவ்வமயம், ரெவரண்ட் G P. ஜேம்ஸ், B.A.,L.T.,B.D., ஸ்ரீ T. S. விஸ்வநாதய்யர், B A.,L.T , ஸ்ரீ K R. சீனிவாசய்யங்கார், M.A.L.T., ஸ்ரீ K. R. சீனிவாச அய்யர், B.A.L.T., ஆகியவர்கள், ஆரம்ப ஆசிரியர்கள் ஐக்கியம்—முன்னேற்றம்—கடமை—ஆரம்பக் கல்வி போன்ற பல அரிய விஷயங்களைப்பற்றி சொற்பொழிவாற்றினுர்கள். 1939—'40-ம் வருட ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின், யுத்த சகாய நிதிக்காக 5 ரூபாய் நன்கொடையளிப்பதென தீர்மானிக்கப்பட்டது. புல்லாங்குழல் கச்சேரியொன்று நடைபெற்றபின் தலைவர் முடிவுரை கூற வந்தனுபசாரத்துடன் கூட்டம் இனிது கலந்தது.

அவனியாபுரம், 5—7—1940.

பி. எஸ். கோவிந்தசுவாமி,
உப தலைவர்'

---

மேலூர் தாலூகா

மேலூர் சென்டர் ஆரம்ப ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் 1940-ம் வருடத்திய ஆண்டு விழா 27—7—'40 சனிக்கிழமை பகல் 2-30 மணிக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது.

மதுரை ஜில்லா கல்வி ஆபீஸர் ஸ்ரீ N. சாரங்கபாணி ஐய்யகார், M.A.L.T., அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பல ஆசிரியர், பிரமுகர்கள் பலரும் சுமார் 300 பேருக்குமேல் கூடியிருந்தனர்.

கடவுள் வணக்கத்தோடு விழா ஆரம்பமானது. வந்தனப் பாட்டுகள் பாடப்பட்டன. ஸ்ரீ S. ராயப்பன் சங்கத்தின் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

ஸ்ரீ N. எபநேசர் டேனியல் "ஓர் உத்தம ஆசிரியன்" என்னும் பொருளின்பேரில் விரிவான குறிப்புகளடங்கிய வியாசம் ஒன்று வாசித்தார்கள்.

மதுரை எலக்டிரிக் ரேடியோ பிரதிநிதியான ஸ்ரீ ஏ. லெக்ஷ்மி நாராயணன் அவர்கள் "ரேடியோவும் அதன் அற்புதங்களும்" என்பதைப்பற்றி, இயந்திர சாதனங்களுடன் விளக்கிக்காட்டி சொற்பொழிவாற்றினுர்கள்.

மதுரை சீனியர் கோவாப்பரேடிவ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. கல்யாணம் ஐயர் அவர்கள் "கூட்டுறவு சங்கங்கள்" என்ற பொருளின்பேரில் சொற்பொழிவு ஆற்றினுர்கள்.

கனம் அக்கிராசனுபதியவர்கள் தம்முடிவுரையில், ஆரம்ப ஆசிரியரின் பொறுப்பு, மாணவர்களின் ஆஜர், ரோல் விர்த்திபண்ணும் விதம்,

தேகத்தை அகற்றும் முறைகள், ஆசிரியர் கிராமக் கக்ஷிகளில் ஈடுபடுவதால் ஏற்படும் தீமைகள், தற்கால உலகத்தில் ஆசிரியரின் ஸ்தானம், ஆகியவற்றைக் குறித்து மிகவும் விரிவாய்க் கூறினார்கள். மேற்படி சங்கத்தின் நடைமுறைகளைப் பற்றியும், பொது நிலைமையைக் குறித்தும் சிலாக்கித்துப் பேசினார்கள். —ஏ. ராயப்பன், காரியதரிசி.

---

## மாயவரம் தாலூகா

### திரவிய சகாய ஆரம்பாசிரியர் ஐக்கிய கழகம்

29-7-40 ஞாயிறு மாலை 5-15 மணி முதல் 6-30 மணி வரையில் மாயவரம் முனிசிபல் பார்க்கில் திருவாளர் திருச்செம்பொன்பள்ளி T. C. நல்லப்ப கண்டியர் தலைமையில் நிர்வாகக் கழகம் கூடியது. காரியதரிசி திரு. A. S. K. வடிவேல் அவர்களால் 6-4-40, 27-4-40 கூட்டங்களின் குறிப்பும் வரவு செலவு விபரமும் படிக்கப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டன.

---

## காரைக்குடி சிவன்கோவில்

### முனிசிபல் எலிமெண்டரி ஸ்கூல் பெற்றோர் சங்கம்
### முதலாவது ஆண்டுவிழா

காரைக்குடி சிவன்கோவில் முனிசிபல் எலிமெண்டரி பள்ளிக்கூடத்தின் முதலாவது ஆண்டுவிழா 28—7—40 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு, முனிசிபல் கமிஷனர் ஸ்ரீமான் A. கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் தலைமையில் மேற்படி பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் வித்வான் திரு. அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் 'பெற்றோர் கடமை' என்பதுபற்றி உபந்யாஸம் செய்தார்.

---

## செஞ்சி

6-7-40 ல் மாலை இரண்டு மணிக்கு செஞ்சி போர்டு பாடசாலையில் செஞ்சி தாலூக்கா போர்டு ஆசிரியர்களின் யூனியன் மகாசபைக் கூட்டம் ஸ்ரீ V. நாராயண ரெட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சுமார் நாற்பது அங்கத்தினர்கள் ஆஜராயிருந்தனர்.

நாளது 1940—41ஷுத்துக்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏகமனதாய் ஸ்ரீ V. நாராயண ரெட்டியார் அவர்கள் தலைவராகவும், ஸ்ரீ A. ராமசாமி அய்யர் அவர்கள் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. ஆரம்ப பாடசாலைகளில் வேலை செய்யும் நாட்களை 220-லிருந்து 200-ஆக குறைக்கவேணுமாயும், ஆரம்ப பாடசாலைகளில் வேலை செய்யும் செகண்டரிகிரேடு ஆசிரியர்களுக்கு ஹைஸ்கூல் ஆசிரியர்களுக்குக் கொடுபடும் சம்பள திட்டத்தை அனுசரிக்கும்படியும் சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும்,



2. செஞ்சி தாலூக்கா போர்டு ஆசிரியர்கள் நியமனம், மாறுதல் இவைகளுக்கு நகல் அனுப்பவேணுமாய் தென் ஆற்காடு ஜில்லா போர்டார் அவர்களை இச்சங்கம் கேட்டுக்கொள்வதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## திருக்கடையூர்

### ஆரம்பாசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் சென்ற மாதத்திய கூட்டம் 20-7-1940 மாலை 1-45 மணி முதல் 4-45 மணி வரையில் திருக்கடையூர் போர்டு ஆண் பாடசாலையில் மாயவரம் கல்விக் கழகக் கண்காணிப்பாளர் திரு. S. சந்திர சேகரம் பிள்ளை அவர்கள் தலைமையில் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது. 53 அங்கத்தினர்களில் 44 அங்கத்தினர் வந்திருந்தனர். பின்னர் திரு. P. சுவாமிநாதன் பெற்றோர் சங்கத்தின் அவசியம் என்பதுபற்றி மிகச் சுருக்கமாக வியாசம் வாசித்தார்.

பின்னர் அடுத்த கூட்டம் 24-8-40-ல் மாலை 1-30 மணிக்கு ஆரம்பிப்பதெனவும், கிடங்கல் பாடசாலை ஆசிரியர் ஆகஸ்டு மாதவியாசமும், மாமாகுடி பாடசாலை ஆசிரியர் மாதிரிப் பாடமும் நடத்துவதெனக் கேட்டு கொள்ளப் பட்டு, இராச வாழ்த்து, நன்றி கூறல் ஆஜர் பதிவுடன் கூட்டம் இனிது நிறை வேறிற்று.

—A. S. K. வடிவேல், அமைச்சர்.


ஒரு விண்ணப்பம் — — —

ஆசிரியர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும் வேண்டிய எல்லாவிதமான பாடசாலை புத்தகங்கள், நோட் புத்தகங்கள், மேப் (Map) டிராயிங் புத்தகங்கள், மற்றும் இதர புத்தகங்கள், ஸ்டேஷனரிகள் முதலியவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம். அதுவுமன்றி, நாங்கள் வெளியூர்களிலுள்ள வியாபாரிகளின் புத்தகங்களை ஏஜண்டாகவிருந்து விற்பனை செய்வதற்கும் முன் வந்துள்ளோம். ஆதலின், விவரத்திற்கு எழுதியும், ஆர்டர் கொடுத்தும், ஆதரிக்க வேண்டுகிறோம்

முகுந்தன் அண்டு கம்பனியார்

புத்தக வியாபாரிகள்

வண்ணாரப்பேட்டை :: :: சென்னை

# பத்திராதிபர் குறிப்புகள்

## கல்வி வாரம்

வழக்கம்போல் இவ்வருஷமும் அக்டோபர் மாதத்தில் தென்னிந்தியக் கல்வி வாரம் கொண்டாடுவதாகத் தென்னிந்திய ஆசிரிய சங்கமும், கல்வியில் ஈடுபட்டுள்ள வேறு சங்கங்களும் சேர்ந்த மத்தியக் கல்வி வாரக் கமிட்டியார் நிச்சயஞ் செய்திருக்கிறார்கள். பொது ஜனங்களுக்குக் கல்வியின் அவசியத்தைத் தெரிவிப்பது கல்வி வாரத்தின் முக்கிய நோக்கமாகும். போன யுத்தத்திலும் இந்த யுத்தத்திலும் கல்வியைப் பற்றி சிலர் கேட்ட முக்கிய கேள்விகளை நாமறிவோம். கல்வியும் பள்ளிக்கூடங்களும் சரியான நிலையில் எந்த தேசத்திலிருக்கின்றனவோ அத் தேசமே செல்வாக்குடன் வாழமுடியுமென்னும் உணர்ச்சி தற்காலம் வேரூன்றியுள்ளது. தேசத்தின் பொருளாதார நெருக்கடிச் சிக்கலை நீக்க கல்விமுறை உதவிசெய்யக் கூடுமா? ஜனசமூகத்திலுள்ள மனஸ்தாபம், ஒற்றுமைக்குறைவு, சோர்வு முதலிய தோஷங்கள் கல்வி முறையால் நீங்கக்கூடுமா? ஜனங்களின் சுகாதாரத்தைப் போற்றி அவர்களின் வாழ்க்கையை நோயற்றதாகச் செய்ய கல்வி முறையை எதிர்பார்க்கலாமா? இவ்வித கேள்விகளை மேடைகளிலும், பத்திரிகைகளிலும் தலைவர்களும் பொது ஜனங்களும் கேட்கிறார்கள். இவற்றிற்குத் தகுந்த பதிலைச் சொல்வதுடன், இந்தப் பெரிய பாரத்தை வகிக்கும் பொறுப்பையும் பள்ளிக்கூடங்களும் ஆசிரியர்களும் கவனித்தல் அவசியம். இவ்வருஷக் கல்வி வாரத்தில் "கல்வி முறையும் தற்கால தாக்குதல்களும் (challenge)" என்கிற விஷயம் ஆலோசனைக்கு வரும். இந்த விஷயம் சமயத்திற்கு ஏற்றதென்பதை சொல்லாமலே நேயர்கள் அறிவார்கள். பொதுப் பணத்தைப் படிப்பிற்குச் செலவழிப்பானேன்? படித்தவர்களால் தேசத்திற்குப் பயனென்ன? இதுபோன்ற கேள்விகள் ஜனங்கள் கேட்பது நியாயமே. பொதுஜனங்களும் தலைவர்களும் கல்விவாரக் கொண்டாட்டத்தில் சேர்ந்து தம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தல் நலம். எல்லோரும்கூடி செவ்வையாய் ஆலோசிக்கும்போது ஒருவரையொருவர் தவறாக எண்ணுதல் நீங்கும். தேச முன்னேற்றம் கல்வி முன்னேற்றத்துடன் சம்பந்தப் பட்டுள்ளது என்பதை யாவரும் அறியக்கூடும். முன்னேற்றத்திற்கு வேண்டிய முறைகளைக் கையாளுவதற்கு ஆசிரியர்களும் தலைவர்களும் பொதுஜனங்களும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தல் அவசியம். தேசம் வருமையால் வருந்தினும், ஒத்துழைக்கும் குணம் ஏற்படின் ஜனசமூகம் நல்ல பலனடையக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. ஆரம்ப ஆசிரியர்கள் முக்கியமாகக் கல்வி வாரத்தைக் கொண்டாட வேண்டும். அவர்களே கிராமங்களில் பொது ஜனங்களுடன் நெருங்கிப் பழகுகிறார்கள். அவர்களுக்குப் பள்ளிக்கூடங்களிலும் கல்வியிலும் நம்பிக்கை எள்ளளவேனும் குறைவு படாதபடி பள்ளிக்கூடங்களைக் கவனிப்பது ஆசிரியர்களின் கடமை. மத்தியக் கமிட்டியார் கல்விவார சம்பந்தமாக சில துண்டுப் பிரசுரங்கள் சொற்ப விலைக்கு வெளியிடுவார்கள். ஆரம்ப ஆசிரியர்கள் அவற்றை வாங்கிக் கவனித்துப் படித்து கல்விவாரத்தைக் கொண்டாடத் தகுந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும். பொது ஜனங்களையும் தலைவர்களையும் பள்ளிக் கூட்டத்தில் கூடும் கூட்டங்களுக்கு வரவழைக்கவேண்டும். பிள்ளைகளின் படிப்பிற்காவும், தேசப் பயிற்சிக்காகவும், நல்லொழுக்கத்திற்காகவும் பள்ளிக்கூடங்களில்செய்துள்ள ஏற்பாடுகளைக் காண்பித்து அவர்களுக்கு உத்ஸாகம் உண்டு பண்ணுவதை மறக்கக்கூடாது. கிராமத்திலுள்ள பள்ளிக்கூடம் சிறியதென்று சும்மாயிருத்தல் சரியல்ல. பக்கத்து கிராமங்களிலுள்ள ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து கல்வி வாரம் கொண்டாடலாம். ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு கிராமத்தில் கூட்டம்கூடி பொதுஜனங்களுக்கு நம்பிக்கையை உண்டு பண்ணலாம். தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதினால் (520, High Road, Triplicane) அவர் விவரமாக எழுதுவார்கள். மேலும் வேண்டிய புத்தகங்களையும் குறிப்புகளையும் சொற்ப விலைக்கு அனுப்புவார். பெற்றோர்களுக்காகத் தனியே குறிப்பொன்று தாய்பாஷையில் தயாராகிறது. நூற்றுக்கணக்காக முன்பே வாங்கி வைத்துக்கொண்டு அதைப் பெற்றோர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் கொடுப்பது அவசியம். பாலர் கல்வியில் கல்விவாரத்தில் ஆலோசிக்கப்போகிற முக்கிய விஷயத்தின் சம்பந்தமாக கட்டுரைகள் பிரசுரஞ்செய்யப்படும். ஆரம்ப ஆசிரியர்களை இவ்விஷயத்தைப்பற்றிக் கட்டுரை அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். இப்போது முதல் முயற்சி செய்தால்தான் அக்டோபர் மாதம் கல்வி வாரம் செவ்வையாய் நடைபெறும். அதிலிருந்து இலாபமும் எதிர்பார்க்கலாம்.

## புனர்போதனைப் பயிற்சி

ஆங்காங்கு தாலுக்காக்களில் ஆரம்ப ஆசிரியுர்களின் பொருட்டு அதிகாரிகளும் ஆசிரியர் சங்கங்களும் புனர்போதனைப் பயிற்சி (Refre-

**sher Course)**க்கு ஏற்பாடு செய்துவருவதை நேயர்கள் அறிவார்கள். இம் முயற்சியை நாம் மிகவும் பாராட்டுகிறோம். காலத்திற்கேற்ற பாடங்களைச் செவ்வையாகப் போதிப்பதற்கு அப்போதைக்கப்போது பயிற்சிக்காக ஆசிரியர்களுக்கு வசதியளித்தல் அவசியமே. நாமெண்ணுகிற புது இந்தப் பயிற்சியிலிருந்து தகுந்த பயனுண்டாகவேண்டுமானால் ஏற்பாடு செய்பவர்கள் சில விஷயங்களைக் கவனிப்பது அவசியம். புனர்பயிற்சி திட்டமொன்று அநுபவமுள்ளவர்களைக் கலந்து கொண்டு கல்வி இலாகா அதிகாரிகள் தயாரித்து வழியைக் காட்டுதல் நலம். எல்லாப் பாடங்களையும் பயிற்சித் திட்டத்தில் சேர்க்காமல் எதில் பயிற்சி அவசியமோ அதில் கவனஞ் செலுத்துவது சரியாகும். உதாரணமாக, தொழிற் பயிற்சியையும் தொழில் மூலமாகப் பாடங்களைப் போதிப்பதையும் புனர்பயிற்சியில் முக்கியமாய் எடுத்துக்கொள்வது ஆசிரியர்களுக்கு மிகவும் சௌகரியம். பயிற்சி காலமும் ஆசிரியர்களின் சௌகரியத்தையும் பள்ளிக்கூட நிர்வாக சௌகரியத்தையும் ஒத்திருத்தல் நியாயம். மேலும் ஒரு வாரம் அல்லது சில நாள் பயிற்சிக்குப் போதாது. வேண்டிய நாள் பயிற்சியில்லாவிடில் பயிற்சி தமாஷென்று கருதப்படும். தவிர, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலிருந்தும் வாலிப ஆசிரியர்களைப் பொறுக்கி அனுப்பினால் நாளடைவில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் புதுப் பாடங்களை தகுந்த முறையில் போதிக்க ஆரம்பிக்கலாம். கவலையின்றி பயிற்சி பெறுவதற்கு பண உதவி அளிக்க சர்க்கார் முன் வரும்படிப் பலதடவை மன்றாடியிருக்கிறோம். ஆசிரியர்களின் நிலைமையை அறிந்த அதிகாரிகள் ஆசிரியர்கள் பயிற்சிபெற முன் வரவேண்டுமென்று நினைப்பது ஆச்சரியமாயிருக்கிறது. கடைசியாக அதிகாரிகள் பாடங்களின் போதனைமுறையைப்பற்றி புத்தகமொன்று ஆசிரியர்களுக்கென்றே தயார்செய்து வெளியிட்டாலொழிய புனர்பயிற்சியின் அநுபவம் நீடித்திராது. வாசகப் புத்தகங்கள் முதலியன தயார்செய்வது அவசியமில்லை ஆசிரியர்களுக்கான புத்தகத்தை வெளியிட்டு அதை ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒவ்வொன்றுக்கும் அனுப்பினால் ஆரம்பக் கல்விக்கு அதிகாரிகள் பேருதவி புரிந்தவராவார்கள். இது அவர்களுடைய [illegible]ன்றும் நாம் கருதுகிறோம்.

145685

# S. I. T. U. PROTECTION FUND, MADRAS

**520, HIGH ROAD, TRIPLICANE.**

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

| | | |
|---|---|---|
| பிரவேசக் கட்டணம் | .... | ரூ. 1. |
| வருஷக் கட்டணம் | .... | ரூ. 2. |

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

**பிரதி வருஷமும் ஜனவரி மாதத்தில்** .... ரூ. 2

**பிரதி மாதமும்** .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, **சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம்** செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு ... | ... ரூ. | 1,65,000 |
| அங்கத்தினர்கள் ... | ... | 1,130 |
| யூனிட்டுகள் ... | ... | 2,004 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினல், கிடைக்கக் கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.
3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

*Regd. No. M. 3473*

# உண்மைக் கல்வி

மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் புத்தகங்களின் வழியாக போதிக்கப்படும் கல்வியைவிட தாமாகவே நேரில் பார்த்து அறியும் கல்வியே மேலானது. அதுவே உண்மைக் கல்வி.

இவ்வகையான கல்வி பயிலுவதற்கு ஏற்ற வசதிகள் நம்நாட்டில் மிக உள. நமது பெரியோர்களால் அமைக்கப்பட்டுள்ள அழகிய தேவாலயங்கள், சிற்ப விநோதங்கள், புண்ணிய க்ஷேத்திரங்கள், நதிகள், உன்னத மலைகள், கடற்கரைக் காட்சிகள் இவைகளைக்கண்டு, அனுபவித்து, மாணவர்கள் உண்மைக் கல்வியின் பயனை அடையவேண்டும்.

மாணவர்களும், அவர்களோடு வரும் உபாத்தியாயர்கள் முதலியவர்களும், சுற்றுப் பிரயாணங்கள் செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க ரெயில்வேயார் சித்தமாயிருக்கிறார்கள். குறைந்த விகிதங்கள், பிரயாண வசதிகள், போஜன ஏற்பாடுகள், இவைகளை ரெயில்வேயார் செய்து கொடுப்பார்கள்.

விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாஸத்துக்கு எழுதவும்.

சீப் கமர்ஸியல் சூபரிண்டெண்டெண்ட்
தென்னிந்தியா ரெயில்வே,
திருச்சினாப்பள்ளி.

Printed by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., G.T., & Published by Mr. H. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.
Managing Editor: V. B. Murthi, M.A.